# சிவப்பு ரோஜா

ராஜேஷ்குமார்



# சிவப்பு ரோஜா

ராஜேஷ்குமார்



## 1

ராஜசேகரனுக்கு விழிப்புதட்டி, கம்பளியிலிருந்து தலையை விலக்கி, கண்களை மலர்த்தியபோது– கண்ணாடி சன்னலுக்கு வெளியே உதகமண்டலம் விழித்துக்கொண்டிருந்தது. யூகலிப்டஸ் மரங்களின் உச்சியில் சூரியனின் ஆரஞ்சு வெளிச்சம் ஒட்டியிருக்க, பறவைகளின் சத்தம் மெலிதாய்க் கேட்டது.

ராஜசேகரன் பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தான். மனைவி பூர்ணிமா படுத்திருந்த இடம் காலியாய் கிடந்தது. ஆறு வயது நவீனா மட்டும் ஒரு சின்ன அடைப்புக்குறியாய் போர்வைக்குள் சுருண்டிருந்தாள்.

மறுபடியும் சிறிது நேரம் தூங்கலாமா என்று யோசித்த விநாடி– போர்வைக்குள்ளிருந்து நவீனாவின் குரல் கேட்டது.

"வணக்கம்ப்பா..."

"வணக்கம்... நீ முழிச்சிட்டியா?"

"அப்பவே!"

போர்வையிலிருந்து எழுந்து உட்கார்ந்தாள், நவீனா. கண்களில் தூக்கக் கலக்கம் கொஞ்சம்கூட இல்லை.

"அப்பா..."

"என்னம்மா?"

"ராத்திரி ஒரு கனவு."

"கனவா? சொல்லு, சொல்லு."

"ஒரு பெரிய ரோஜாத் தோட்டம்."

"ம்..."

"அந்த தோட்டத்துக்குள்ளே நீங்க, நான், அம்மா மூணு பேரும் போறோம்."

"வேறு யாருமே இல்லையா?"

"இல்லை."

"சரி! அப்புறம்?"

"தோட்டத்துக்குள் போனா, விதவிதமா ரோஜாப்பூ."

"அடடே! மேலே சொல்லு."

"நான் அம்மாகிட்டே ஒரு வெள்ளை ரோஜாப்பூ கேட்டேன். அம்மாவும் போயி ஒரு வெள்ளை ரோஜாவைப் பிடுங்க, காம்பிலிருந்து ரத்தம் 'சொட் சொட்'ன்னு கீழே விழுந்தது!"

ராஜசேகரன் திடுக்கிட்டான்.

"ஆமாம்ப்பா... அம்மா பயந்துபோய்க் கத்த, நீங்க இன்னொரு ரோஜாப்பூவை பிடுங்கிப் பார்க்க— அதிலேயும் ரத்தம்."

"அப்புறம்?"

"அவ்வளவுதான். முழிப்பு வந்துடுச்சு."

"அம்மாகிட்டே இந்தக் கனவைச் சொன்னியா?"

"இல்லை... அதுக்குள்ளே அம்மா எந்திரிச்சுப் போயிட்டாங்க."

"டொக்... டொக்..."

அறைக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

"ம்... வா."

கதவு திறந்துகொள்ள, பணியாள்— ஆவிபறக்கும் காப்பி கோப்பைகளை ஏந்தியபடி உள்ளே வந்தான்.

"வணக்கம் அய்யா."

தலையசைத்த ராஜசேகரன் கேட்டான்:

"போஜன்! அம்மா என்ன பண்ணுறாங்க?"

"தோட்டத்தில் இருக்காங்க."

"கூப்பிடு."

வேலையாள், காப்பி கோப்பைகளை குறுமேசை மேல் வைத்துவிட்டு நகர்ந்தான்.

நவீனா படுக்கையில் தவழ்ந்துபோய் காப்பி கோப்பையை எடுத்து ராஜசேகரனுக்கு கொடுத்துவிட்டு, தானும் ஒன்றை எடுத்துக்கொண்டாள்.

"அப்பா..."

"என்னம்மா?"

"இன்னிக்காவது நம்ம எஸ்டேட்டுக்கு போலாமா?"

"இன்னிக்கு கண்டிப்பா போறோம்."

"எஸ்டேட்டுக்கு போற வழியில ஒரு சிகரம் இருக்கே, அதுக்கு என்ன பேருப்பா?"

"பாரடைஸ் பாய்ண்ட்."

"அப்படீன்னா என்ன அர்த்தம்?"

"அந்த சிகரத்தின் உச்சி மேல நின்னுகிட்டு சுற்றுமுற்றும் பார்த்தா சொர்க்கலோகம் மாதிரி இருக்குமாம்."

"அங்கே போலாமாப்பா?"

"பனிமூட்டம் இல்லேன்னா போலாம்."

"அப்பாவும் மகளும் காலங்கார்த்தாலே என்ன அரட்டை?" கேட்டுக்கொண்டே பூர்ணிமா உள்ளே நுழைந்தாள். அழகான சின்ன நவீனாவை பெரிதாய் நகல் எடுத்த மாதிரி தோற்றம்.

ராஜசேகரன் காப்பியை உறிஞ்சிவிட்டு சொன்னான்— "நவீனாக் குட்டிக்கு எஸ்டேட்டுக்கு போகணுமாம், வழியில் பாரடைஸ் பாயிண்ட்டை பார்க்கணுமாம்!"

"எங்கேயும் போக வேண்டாம்."

"பாருங்கப்பா, அம்மாவை."

"நீ கவலைப்படாதேம்மா. இன்னிக்கு கண்டிப்பா எஸ்டேட் போறோம். வழியில் பாரடைஸ் பாயிண்ட்டுக்கும் போறோம்."

"நன்றிப்பா" காப்பியை அவசர அவசரமாய்க் குடித்து விட்டு, கட்டிலிலிருந்து கீழே இறங்கினாள், நவீனா. "இன்னிக்கு நான்தான் முதலில் குளிக்கப்போறேன்" சிட்டாக சிறகடித்தாள்.

பூர்ணிமா, ராஜசேகரனுக்கு பக்கத்தில் உட்கார்ந்தாள்.

"என்னங்க... நிஜமாவே எஸ்டேட் போகப்போறோமா?"

"ஆமா, குழந்தை ரொம்பவும் ஆசைப்படுறாளே?"

"ஆசைப்பட்டா போயிடுறதா? எஸ்டேட் இங்கிருந்து பக்கமாவா இருக்கு? இருபத்திமூணு கிலோமீட்டர் போகணுமே?"

"காரில்தானே போறோம்?"

"இன்னிக்கு ஏதோ முக்கியமான வேலை இருக்குன்னு சொன்னீங்க?"

"நவீனாவோட ஆசைதான் எனக்கு முக்கியம். அந்த போனை இப்படி நகர்த்தி, ரிசீவரை எடுத்துக்கொடு."

பூர்ணிமா, ரிசீவரை எடுத்துக் கொடுத்தாள்.

"பாக்டரிக்கு டயல் பண்ணு."

பூர்ணிமா டயல் செய்து, இணைப்பு கிடைத்ததும் ராஜசேகரன் பேசினான்:

"மானேஜரா?"

"ஆமா சார்."

"நான் எஸ்டேட் வரைக்கும் போகணும். போயிட்டு சாயந்தரம்தான் திரும்புவேன். புது எந்திரங்களை நாளைக்கு மாட்டலாம்."

"சார் வந்து..."

"சொல்லுங்க."



"இன்னிக்கு நிறைஞ்ச அமாவாசை. நாளைக்கு எதையுமே தொடங்கக்கூடாது."

"அப்படின்னு யார் சொன்னது?"

"பெரியவங்க சொல்லி வைச்சது."

"இந்த நாள், நட்சத்திரமெல்லாம் கல்யாணத்துக்குத்தான் பார்க்கணும். தொழிலுக்கு பார்க்கக்கூடாது."

"சார், அதுல இன்னொரு பிரச்சினை..."

"என்ன?"

"கோயமுத்தூரிலிருந்து ரெண்டு என்ஜினீயர் வந்திருக்காங்க. அவங்களை ஒருநாள் அதிகப்படியா தங்க வைச்சா கூடுதலாகப் பணம் தரவேண்டியிருக்கும்."

"தந்துடலாம்."

"சார்..."

"வேற விசயம் ஒண்ணுமில்லையே?" கேட்டுவிட்டு, ரிசீவரை சாத்தினான், ராஜசேகரன். பூர்ணிமா கோபமாய்க் கணவனை ஏறிட்டாள்.

"இன்னிக்கு அவசியம் எஸ்டேட்டுக்கு போய்த்தான் ஆகணுமா?"

"ஆமா."

"எல்லாம் அந்த குட்டிச்சாத்தானோட வேலை."

"குழந்தையை அப்படி சொல்லாதே."

"குழந்தையாம் குழந்தை! இவளை அடுத்த வருடம் ஆஸ்டலில் சேர்த்துடவேண்டியதுதான்."

"நானும் அதே ஆஸ்டலில் போய் தங்கிக்குவேன்."

"நீங்க பேசுறது நல்லாயிருக்கு! அந்த குட்டிப் பிசாசு உங்களை நல்லா 'தாஜா' பண்ணி வைச்சிருக்கா."

"இதோ பாரு பூர்ணிமா! குழந்தை ரொம்ப நாளாவே எஸ்டேட்டுக்கு போகணும்னு ஆசைப்பட்டு கேட்டிருந்தா. அதான் இன்னிக்கு தலையாட்டிட்டேன்."

"சரி, ஒரு நிபந்தனை."

"நம்ம குடும்ப டாக்டர் கவுடாவுக்கு போன் பண்ணி கேட்டுட்டு, அவர் சரின்னு சொன்னாதான் இந்த பயணத் துக்கு நான் ஒத்துக்குவேன்."

"சரி, போன் பண்ணு."

ரிசீவரை எடுத்துக்கொண்ட பூர்ணிமா, மருத்துவர் கவுடா வீட்டுக்கு பேசினாள்.

"டாக்டர்! நான் பூர்ணிமா..."

"என்னம்மா?"

"இன்னிக்கு எஸ்டேட் போக அவர் பிரியப்படுறார். காரில் போயிட்டு வரலாமா?"

"தாராளமா போலாமே."

"அவருக்கொண்ணும் தொந்தரவு இருக்காதே?"

"இல்லை! கூட நீயும்தானே போறே?"

"ஆமா டாக்டர்."

"அப்புறமென்ன? போயிட்டு வாங்க."

"நன்றி டாக்டர்" ரிசீவரை வைத்த பூர்ணிமா, ராஜசேகரனை புன்னகையோடு ஏறிட்டாள்.

"டாக்டர் பச்சைக்கொடி காட்டிட்டார்."

"அப்புறமென்ன... கிளம்பவேண்டியதுதானே?"

"நீங்க குளிச்சுடுறீங்களா?"

"ம்! என்னோட வாகனத்தைக் கொண்டா."

ராஜசேகரன் சொன்னதும்– பூர்ணிமா அந்த அறையில் சுவரோரமாய் நின்றிருந்த சக்கர நாற்காலியை நோக்கிப் போனாள். அதை நெருங்கி– அதன் முதுகில் கை வைத்து ராஜசேகரனின் படுக்கைக்குப் பக்கத்தில் தள்ளிக்கொண்டு வந்து நிறுத்தினாள்.

ராஜசேகரன், கம்பளிப் போர்வையை விலக்கிவிட்டு, தொடைக்குக் கீழே சூம்பிப்போன கால்களால்– படுக்கை யில் தவழ்ந்து, சக்கர நாற்காலியில் லாவகமாய் தாவி உட்கார்ந்தான்.



# 2

பூர்ணிமா லேசாய்ப் பதற்றப்பட்டாள். "மெள்ளமா பார்த்து உட்காருங்க."

"வழுக்கி கீழே விழுந்துடுவேன்னு பயப்படுறியா?"

"பின்னே?"

"இந்த சக்கர நாற்காலியோடு எனக்கு எத்தனை ஆண்டு சிநேகம் தெரியுமா? நான் விழப்போனாலும் அது என்னை விடாது."

"பெருமையடிச்சுகிட்டு இருக்காமே சீக்கிரமா குளிக்கப் போங்க."

சக்கர நாற்காலியை உருட்டிக்கொண்டே குளியலறை நோக்கிப் போன ராஜசேகரன், சட்டென்று நாற்காலியின் இயக்கத்தை நிறுத்தித் திரும்பினான்.

"பூர்ணிமா..."

"ம்..."

"மத்தியான சாப்பாட்டை கொண்டுபோயிடுவோமா? இல்லே, எஸ்டேட் போய் தயார் பண்ணிக்குவோமா?"

"இங்கிருந்தே கொண்டுபோயிடுவோம்."

"என்ன சமையல் செய்ய சொல்லப்போறே?"

"சப்பாத்தியும், கறிக்குழம்பும் போதாதா?"

"போதும்."

"எனக்குப் போதாது."

குரல் கேட்டு இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். அறை வாசலில் நின்ற நவீனா, குளித்து முடித்து வேறு உடைக்குள் நுழைந்திருந்தாள். பூர்ணிமா அவளை நோக்கிப் போனாள்.

"என்னடி... அதுக்குள்ளே குளிச்சிட்டியா?"

"ம்... குளிச்சிட்டேன்."

"யார் குளிப்பாட்டிவிட்டா?"

"ஆயாதான்."

"காதுல பாரு, சோப்பு நுரையா இருக்கு."

"துடைச்சிட்டா போகுது" அலட்சியமாய்ச் சொன்ன நவீனா, ராஜசேகரனிடம் வந்தாள். அவன் மடியில் ஏறி உட்கார்ந்தாள்.

"அப்பா..."

"என்னம்மா?"

"எனக்கு சப்பாத்தி வேண்டாம்."

பூர்ணிமா சுட்டுவிரலை உயர்த்தினாள். "உதைப்பேன். சப்பாத்தி போதும்."

"பாருங்கப்பா" நவீனா இரண்டு கைகளாலும் ராஜசேகரனின் முகத்தை வருடினாள். அவன், அந்தக் கைகளைப் பற்றி மெல்ல முத்தமிட்டான்.

"இதோ பாருங்க. அவளுக்கு நீங்க ரொம்பவும் செல்லம் தர்றீங்க. ஒரு பெண் குழந்தைக்கு இவ்வளவு செல்லம் கூடாது."

"என் நவீனாக் குட்டிக்கு அப்படித்தான் செல்லம் கொடுப்பேன்."

பூர்ணிமா இடுப்பில் கை வைத்து முறைக்க, நவீனா கைகளைத் தட்டி சிரித்தாள்.

சரியாய்ப் பத்து மணிக்கு போர்டிகோவில் நின்றிருந்த அந்த வெளிநாட்டு கார் கிளம்பியது. காரில் பின் இருக்கையில் ராஜசேகரனும், பூர்ணிமாவும் உட்கார்ந்திருக்க, முன் இருக்கையில் டிரைவர் கோபாலுக்கு பக்கத்தில் நவீனா சாய்ந்து, ஆப்பிளை கடித்துக்கொண்டிருந்தாள்.

"கோபால்!"

"சார்..."

"சக்கர நாற்காலியை மேலே வச்சு நல்லா கட்டியிருக்கியா?"

"கட்டி இருக்கேன் சார்."



"காரை நிதானமாவே ஓட்டு. எந்த வாகனத்தையும் முந்தாதே. மொதல்ல பாரடைஸ் பாயிண்ட் போறோம். அப்புறம்தான் எஸ்டேட்டுக்கு."

"சரி சார்."

கார் நிதான வேகத்தில்— பனி பெய்து இன்னமும் ஈரமாயிருந்த சாலையில் வழுக்கிகொண்டு போனது.

கார் இரண்டு இறக்கங்களைக் கடந்தது.

"டிரைவர் அங்கிள்" நவீனா கூப்பிட்டாள்.

"என்னம்மா?"

"உங்க வீட்டு அக்காவுக்கு ரொம்ப நாளா வயிறு பெரிசா இருந்ததே? குழந்தை பொறந்துடுச்சா?"

பூர்ணிமா குறுக்கிட்டு அதட்டினாள். "ஏய், பெரிய மனுஷி! சும்மா இருக்கமாட்டே?"

"என்னம்மா?"

"அப்படியெல்லாம் கேட்கக்கூடாது."

டிரைவர் கோபால் சிரித்தான். "இருக்கட்டும்மா. குழந்தைக்கு என்ன தெரியும்? மனசுல பட்டதை கேட்டுடுச்சு! பாப்பா! அந்த அக்காவுக்கு இன்னும் குழந்தை பொறக்கலை. இன்னும் பத்து நாளாகும்."

ராஜசேகரன் கேட்டான், புன்னகையோடு: "கோபால்! இது உனக்கு எத்தனையாவது குழந்தை?"

"நாலாவது சார்."

"இது 'கமா'வா? முற்றுப்புள்ளியா?"

"இன்னும் முடிவு பண்ணலை சார்."

"என்னது முடிவு பண்ணலையா? உதைப்பேன்! இது முற்றுப்புள்ளிதான். 'கமா'வாக ஆக்கிட்டு வந்தே, சம்பள உயர்வை ரத்து பண்ணிடுவேன்."

"சார்... வந்து... எ..."

"இந்த வந்து, போய் இழுப்பெல்லாம் என்கிட்டே வேண்டாம். குழந்தை இருக்காளேன்னு பார்க்கிறேன்

இல்லேன்னா, நல்லா கேட்டுடுவேன். காலம் போய்கிட்டு இருக்கிற நிலைமையில..."

நவீனா குறுக்கிட்டாள்: "ஆமா அங்கிள்! அப்பா சொல்றதும் சரிதான்... என் ஒருத்தியை வைச்சுகிட்டே எங்க அம்மாவால் சமாளிக்க முடியலை. உங்க வீட்டுல இருக்கிற அக்கா, நாலு குழந்தைகளை வைச்சுகிட்டு எப்படி சமாளிப்பாங்க?"

எல்லோரும் சிரித்தார்கள்.

கிலோமீட்டர்களை விழுங்கி– கார் 'பாரடைஸ் பாயிண்ட்' போய்ச் சேர்ந்தபோது பத்தரை மணி. சாலையோரங்களில் பனிப்புகை, திட்டு திட்டாய் தெரிய– சிகரத்தில் கனமான பனிமூட்டம்.

டிரைவர் ஓரமாய் காரை நிறுத்தினான்.

"சார்! பனி அதிகமா இருக்கு."

"இருக்கட்டுமே! சக்கர நாற்காலியை இறக்கு! நவீனாக் குட்டி, இதுதான் பாரடைஸ் பாயிண்ட்."

"என்னப்பா... யாரையுமே காணோம்?"

"இந்த இடம் ரொம்ப பேருக்குத் தெரியாது."

"உச்சிக்கு காரில் போகமுடியாதாப்பா?"

"ஊகூம்! கொஞ்ச தூரம் நடக்கணும்."

"நீங்க?"

"அதோ... அந்த பாறை வரைக்கும் நான் சக்கர நாற்காலியில் வருவேன். அதுக்குமேல நீயும், அம்மாவும்– டிரைவரை கூட்டிகிட்டு போயிட்டு வாங்க."

"அதெல்லாம் வேண்டாங்க! எல்லோருமே அந்த பாறைகிட்டே கொஞ்ச நேரம் இருந்துட்டு திரும்பிடலாம்."

"ஏன் அப்படி சொல்றே, பூர்ணிமா? குழந்தை அங்கே போகணும்ன்னு எவ்வளவு ஆசைப்படுறா, அந்தப் பாறையிலிருந்து கொஞ்ச தூரம்தான்... அரை மணி நேரத்துக்குள் ஏறி, இறங்கிடலாம்."



டிரைவர் கோபால், சக்கர நாற்காலியை இறக்கி, காரின் கதவருகே நிறுத்தி வைத்துவிட்டு, ராஜசேகரனைப் பார்த்தான். அவன் கதவைத் திறந்துகொண்டு, சக்கர நாற்காலிக்கு வந்தான்.

"கோபால்..."

"சார்..."

"என்னை அந்த பாறைக்குப் பக்கத்தில் நிறுத்திட்டு, நீ பூர்ணிமாவையும் குழந்தையையும் சிகரத்துக்குக் கூட்டிப் போயிட்டு வா."

"சரி சார்."

"நவீனா ஆசைப்படுற வரைக்கும் மேலே இருக்கட்டும்."

"சரி சார்" கோபால், சக்கர நாற்காலியைத் தள்ளினான்.

மெதுவாய்– அந்த குறுகலான பாதையில் ஏறினார்கள். பனிப்புகைக்குள் நுழைந்தார்கள்.

"அப்பா..."

"என்னம்மா?"

"நீங்க மேலே வரமுடியாதா?"

"வரமுடியாதும்மா. நீயும், அம்மாவும் கோபாலோடு போயிட்டு வாங்க. நீ வந்து அந்த இடத்தைப் பற்றி எனக்கு சொல்லு."

"ம்..."

பாறை நெருங்கியது.

"கோபால்! ரோட்டை பார்த்த மாதிரி என்னை நிறுத்திடு!"

அவன் நிறுத்தினான்.

"நீங்க போயிட்டு வாங்க! பூர்ணிமா, குழந்தையின் கையை கெட்டியா பிடிச்சுக்கோ."

"அந்த பெரிய மனுஷி என்னை பத்திரமா கூட்டிட்டுப் போயிட்டு வந்துடுவா."

"நவீனா! அம்மாவை பாடாய்ப்படுத்தக்கூடாது. சொன்னபடி கேக்கணும்."

"ம்..."

மூவரும் அந்த சரிவில் ஏற ஆரம்பித்தார்கள். ராஜசேகரன் தன் பாக்கெட்டிலிருந்து சாக்லெட் நிற இறக்குமதி சிகரெட் ஒன்றை எடுத்து உதட்டில் பொருத்திக்கொண்டு— சிகரெட் முனையை சிவப்பாக்கிக்கொண்டான்.

"அப்பா! டாட்டா."

பனிப்புகைக்குள் இருந்து நவீனாவின் குரல் தப்பித்து வந்து ராஜசேகரனை மோத, அவனும் கத்தினான்.

"டாட்டா... நவீனாக்குட்டி."

சிகரெட்டை இழுத்து, புகையை மெல்ல வெளியேவிட்டு— அந்த கதகதப்பில் விநாடிகளை கரைத்துக்கொண்டிருந்தான், ராஜசேகரன்.

பத்து நிமிடம் கறைந்திருந்தபோது—

சிகரத்திலிருந்து— அந்த நீளமான அலறல் சத்தம் கேட்டது.

## 3

பூர்ணிமா கத்தினாள். "ஏய் நவீனா! ஓடக்கூடாது."

"நீ சீக்கிரமா வாம்மா. மெதுவா நடந்து வர்றியே?"

"அம்மாவை பாடாய்ப்படுத்தக்கூடாதுன்னு அப்பா சொன்னாரா, இல்லையா?"

"நான் ஒண்ணும் உன்னை இப்போ பாடாய்ப் படுத்தலையே? கொஞ்சம் வேகமாகத்தானே நடந்துவரச் சொல்றேன்?"

"என்னால் முடியலைடி! மூச்சு வாங்குது."

"அப்படீன்னா, நீ திரும்பி அப்பாகிட்டே போ! நானும் டிரைவர் அங்கிளும் மேலே போயிட்டு வர்றோம்."

"ஊகூம்... நீ டிரைவர் பேச்சைக் கேட்கமாட்டே! நானும் வர்றேன்" பனிப்புகையில் லேசாய் கண்களுக்குத் தட்டுப்பட்ட



பாறைகளுக்கு நடுவே வளைந்து வளைந்து ஓடிய சரிவான பாதையில் மூச்சுவாங்க ஏறினாள், பூர்ணிமா.

ஒரு இரண்டு நிமிட நடை நடந்ததும் முன்னால் நடந்து கொண்டிருந்த கோபால் திரும்பினான். குரல் கொடுத்தான்.

"அம்மா, போகப்போக பனி அதிகமா இருக்கும்போலிருக்கு. பேசாம திரும்பிடுறது நல்லது."

"என்னது, திரும்பிடுறதா? பனிமூட்டம் இருந்தா என்ன? வழிதான் நல்லாத் தெரியுதே?"

"கோபால்! அந்தக் குட்டிப் பிசாசு கேட்கமாட்டா. பனியோ, மழையோ மேலே போயிட்டு வந்துடுவோம். இல்லேன்னா இவ என் உயிரை எடுத்துடுவா. அவரும் சத்தம் போடுவார்."

"அய்யா, குழந்தைக்கு ரொம்பவும் செல்லம் கொடுக்கிறாரும்மா. நீங்க கொஞ்சம் சொல்லுங்க."

"என்ன சொன்னாலும் கேட்கமாட்டார். இவ ஒரு கோட்டை கிழிச்சா அவர் தாண்டவேமாட்டாரு. இவ நல்லா 'நைஸ்' பண்ணி வைச்சிருக்கா. இவளை இப்படியே விட்டுடக் கூடாது. வர்ற வருடம் ஆஸ்டலில் சேர்த்துட வேண்டியதுதான். அதுவும் ஐநூறு கிலோமீட்டர் தள்ளி!"

"நான் போகமாட்டேனே!"

"போகலைன்னா யார் விடுறா?"

முன்னால் நடந்துகொண்டிருந்த கோபால் 'திடும்'மென்று நின்றான்.

"என்ன கோபால், அப்படி பார்க்கிறே?"

"வழியே தெரியலைம்மா."

"இந்தப் பக்கம் ஏதோ சின்னதாக வழி போகிற மாதிரி இருக்கு."

"இல்லீங்கம்மா; அது, பாறைப் பிளவு" பனிப்புகை லேசாய் கலைந்தபோது, கோபால் அந்த இடத்தைச் சுட்டிக் காட்ட— அது வாய் பிளந்திருந்தது.

"அங்கிள்!"

"என்னம்மா?"

"அந்தப் பக்கமா வழி தெரியுது. வாங்க போகலாம்" சொல்லிக்கொண்டே இடப்பக்கமாய் ஓடினாள், நவீனா.

"வேண்டாம்மா. அந்தப் பக்கம் போகாதே! மூடுபனி அதிகமா இருக்கு" கோபால் சொல்லச் சொல்ல நவீனா பனிப்புகைக்குள் மறைந்தாள்.

"ஏய் நவீனா, நில்லுடி! சொன்னா கேக்கணும். ஓடாதே. கோபால், அவளைப் பிடி!"

கோபால் ஓடினான். நவீனா இப்போது சுத்தமாய் தெரியவில்லை. "நவீனா... நவீனா..."

"அங்கிள்! என் பின்னாடியே வாங்க, வழி தெரியுது."

"எனக்கு வழியே தெரியலேம்மா."

"ஏய் நவீனா" ஆத்திரமும் கோபமும் கலக்க, வீறிட்டுக் கத்தினாள், பூர்ணிமா. மூச்சிறைத்து நின்றாள்.

'இவள் எந்தத் திசையில் போனாள்?'

"நவீனா... நவீனா..."

நிசப்தம்.

"ஏ...ஏ....ஏய்ய்... நவீனா..."

நான்கு திசைகளிலும் பனிப்புகையின் ஊர்வலம் மட்டும் தெரிந்தது.

அருகில் கோபாலின் குரல் கேட்டது.

"அம்மா! நீங்க இங்கேயே நில்லுங்க! நான் போய் குழந்தையை கூட்டிட்டு வந்துடுறேன்."

"சீக்கிரம் போ கோபால்! அவளுக்கு ஏதாவது ஒண்ணு ஆச்சுன்னா அவர் என்னைக் கொன்னே போட்டுடுவார்!"

கோபால் ஓடுவது தெரிந்தது. கூடவே, அவன் "நவீனா... நவீனா" என்று கதறுவதும் கேட்டது.

பூர்ணிமா அங்கே நிற்கப் பிடிக்காமல் மெதுவாய் நடக்க ஆரம்பித்தாள். ஒரு பாறையின் மேல் ஜில்லிப்பாய் மோதிக்



கொண்டவள், விலகி நடந்தாள். விநாடிக்கு விநாடி பனிப் புகையின் கனம் அதிகமாகிக்கொண்டே போயிற்று.

இருபதடி தூரம் நடந்திருப்பாள்.

திடீரென்று கால்களுக்குக் கீழே இருந்த மணல் வழுக்கலாய், சரிய— உடம்பின் மொத்த பலத்தையும் இழந்து உருண்டாள், பூர்ணிமா. மூளைக்கு சட்டென்று பயங்கரம் உறைத்தது. கால்கள் பிடிப்பில்லாமல் இழுபட, பூர்ணிமா கைகளை நீட்டி— கிடைத்த ஒரு பாறையின் முனையை கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள்.

"கோ...பா...பா...ல்..." பூர்ணிமா வீறிட ஆரம்பித்தாள்.

கீழே பாறைக்குப் பக்கத்தில் சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருந்த ராஜசேகரனுக்கு அந்த அலறல் சத்தம் தீர்க்கமாய்க் கேட்டது.

'இது... இது... பூர்ணிமாவின் குரல்! என்னாயிற்று அவளுக்கு?' கலவர முகத்தோடு மலை சிகரத்தைப் பார்த்தான். குரல் கொடுத்தான். "பூர்ணிமா..."

நிசப்தம்.

"நவீனா..."

மவுனம்.

"கோபால்..."

மேலேயிருந்து எந்தச் சத்தமும் வராமல்போகவே, சக்கர நாற்காலியிலிருந்து பதற்றமாய் இறங்க முயன்றான், ராஜசேகரன். உடம்பின் பளு முன்பக்கம் சரிய, சக்கர நாற்காலி பக்கவாட்டில் கவிழ்ந்தது.

சூம்பிய கால்களோடு மல்லாந்து விழுந்தான், ராஜசேகரன்.

மூச்சைப் பிடித்துக்கொண்டு சரிவில் பனிப்புகைக்கு நடுவே ஏறிய கோபால் தனக்கு முன்னால் போய்க் கொண்டிருந்த நவீனாவை ஓடிப்போய் பிடித்தான்.

"என்னம்மா... நானும் அம்மாவும் கத்த கத்த நீபாட்டுக்கு




தனியா ஓடி வர்றியே?"

"அங்கிள்... நான்தான் சொன்னேனே, எனக்கு வழி நல்லாத் தெரியுதுன்னு. நீயும் அம்மாவும் என் பின்னாடியே வரவேண்டியதுதானே!"

"அது தப்பும்மா. வா கீழே போகலாம்! எஸ்டேட்டுக்கு போயிட்டு திரும்புகிறப்போ மூடுபனி இல்லேன்னா இந்த இடத்துக்கு வருவோம்."

"ஏன், இப்ப என்னவாம்?"

"சொன்னா கேக்கணும்! இங்கேயே இவ்வளவு பனி இருக்கும்போது மேலே போகப்போக இன்னும் அதிகமா இருக்கும்" அவன் சொல்லிக்கொண்டிருக்கும்போதே...

"கோ...பா...ல்..."

"வாம்மா நவீனா! அம்மா கூப்பிடுறாங்க."

நவீனாவை இழுத்துக்கொண்டு வந்த வழியே சரிவில் வேகமாய் இறங்கினான், கோபால்.

பனிப்புகை 'சட் சட்'டென்று விலகி பாறைகளை அடையாளம் காட்ட, அதன் மீது மோதிக்கொள்ளாமல் தவிர்த்தான். கீழே வரவர பூர்ணிமாவின் குரல் தெளிவாய்க் கேட்டது.

"கோ...பா...ல்..."

"அம்மா."

"கோ...பா...ல்?"

"நீங்க எங்கேம்மா இருக்கிறீங்க?" பனிப்புகைக்கு நடுவே நின்றுகொண்டு சுற்றும்முற்றும் பார்த்தான், கோபால்.

"இ...இதோ... இ...இந்தப் பக்கம் ஒரு பாறையோட மு...மு...முனையைப் பிடிச்சு தொ...தொங்கிட்டிருக்கேன். கால்களுக்குக் கீழே பிடிமானம் இல்லை. எந்த நிமிடமும் நான் வி...விழுந்துடுவேன்."

கோபாலும் நவீனாவும் திடுக்கிட்டார்கள்.

"அம்மா!"

"கோ...கோபால்! சீக்கிரமா வா. என்னால் முடியலை."

"அ...அம்மா... நீங்க எங்கே இருக்கீங்கன்னே தெரியலையே?" கோபால் உடம்பில் தீப்பற்றிக்கொண்ட மாதிரி நான்கு திசைக்கும் ஓடி ஓடிப் போய் குரல் கொடுத்தான்.

"கோ...பால்...இங்கே" பூர்ணிமா மூச்சிறைப்போடு சொல்ல... நவீனா, குரல் வந்த திசையைப் புரிந்துகொண்டு ஓடினாள்.

"அம்மா..."

"ந...நவீனா... நீ... நீ... பக்கத்துல வராதே!"

கோபால் ஓடிவந்து பனிப்புகைக்கு நடுவே, கீழே குனிந்து உற்றுப் பார்த்தான். நீட்டிக்கொண்டிருந்த ஒரு பாறையைப் பிடித்துக்கொண்டு இரண்டு வளைகரங்கள் தெரிந்தன. சேலைத் தலைப்பு அவிழ்ந்து தொங்கிக்கொண்டிருக்க... பனிப்புகை விலகும்போதெல்லாம் அது தெரிந்து தெரிந்து மறைந்தது.

கோபால் தவிப்பாய் நகர்ந்தான். நவீனா விபரீதம் புரிந்து அழ ஆரம்பிக்க, பாறை முனையில் ஊசலாடிக்கொண்டிருந்த பூர்ணிமா மூச்சிறைத்தாள்.

"நவீனா... அ...அப்பாகிட்டே சொல்லிடு."

கோபால் குரல் கொடுத்தான்.

"அம்மா பயப்படாதீங்க! நான் வர்றேன்."

"மு...முடியலை கோபால்! இனிமேலும் என்னால் தொங்கிட்டிருக்க முடியாது. ரெண்டு கையும் மரத்துப்போக ஆரம்பிச்சுடுச்சு. எந்த விநாடியும் நான் விழுந்துடுவேன்."

நவீனா பெரிதாய் அலறினாள்.

"அம்மா... ஆ!"

"ந...நவீனா! நீ நல்லா படிக்கணும்..."

"........"

"அப்பாவோட பேச்சைக் கேக்கணும்."



"........"

"அம்மா... ஆ!"

"கோபால்! நவீனாவைப் பத்திரமா கீழே கூட்டிப்போயிடு" சொன்ன பூர்ணிமாவின் கைகள் இரண்டும் பாறையின் முனையை விட்டுவிட, உடம்பு விர்ரென்று எந்தவித பிடிமானமும் இல்லாமல் கீழே போயிற்று.

கோபாலும், நவீனாவும் உறைந்துபோய் நிற்க... பனிப்புகை மட்டும் அந்த மரணத்தை அலட்சியப்படுத்துகிற மாதிரி அமைதியாய் நகர்ந்துகொண்டிருந்தது.

## 4

"மிஸ்டர் ராஜசேகரன்... சாரி! உங்களை இந்த நிலைமையில் கேள்வி கேட்டு தொந்தரவு செய்யறதுக்காக மன்னிக்கணும்" இன்ஸ்பெக்டர் தொப்பியைக் கழற்றி மடியில் வைத்துக்கொண்டு எதிரே வந்து அமர்ந்தார்.

ராஜசேகரன் கண்களில் நின்ற நீரை— கண் இமைகளைத் தாழ்த்தி உத்திரவிட்டபடி, "ம்..." என்றான்.

"உங்க மனைவி இறந்தது விபத்துதானே?"

"ஆமா."

"அது... தற்கொலையாகவோ... கொலையாகவோ.... இருக்கலாம்ங்கிற எண்ணம் உங்களுக்கு வரலையா?"

"என் பூர்ணிமா எதுக்காக தற்கொலை பண்ணிக்கணும்? அவ என்கூட சந்தோஷமான வாழ்க்கை நடத்திட்டிருந்தா! அதேமாதிரி, அவளை கொலை செய்யக்கூடிய அளவுக்கு எந்த எதிரியும் இல்லை."

"நான் ஒரு போன் பண்ணிக்கலாமா?"

ராஜசேகரன் தலையசைத்துவிட்டு கண்களை மூடிக்கொள்ள, இன்ஸ்பெக்டர் தொலைபேசியை நோக்கிப்

போனார். 'டயல்' செய்து பேசிவிட்டு வந்தார்.

"மிஸ்டர் ராஜசேகரன்..."

அவன் கண்களைத் திறந்தான்.

"உங்க மனைவியின் உடம்பு கிடைச்சுட்டதாக் தகவல்."

"........"

"உடலை பார்க்கலாம்; வர்றீங்களா?"

"இன்ஸ்பெக்டர்! என் பூர்ணிமா முழுசா கிடைச்சிருக்காளா?"

"சாரி... முழு உடம்பும் கிடைக்கலை."

ராஜசேகரன், சக்கர நாற்காலியை கையால் ஓங்கிக் குத்திவிட்டு அழுகையில் வெடித்தான்.

"என் பூர்ணிமாவை அந்தக் கோலத்துல பார்க்க நான் விரும்பலை, இன்ஸ்பெக்டர். உடலை இங்கே கொண்டு வரவும் நான் பிரியப்படலை. என் பூர்ணிமாவை கடைசியாகப் பார்த்த அந்தக் கோலம் என் கண்ணுல அப்படியே இருக்கட்டும். அந்தக் கோலத்தை சிதைக்க விரும்பலை" சொல்லிவிட்டு அவன் இரண்டு கைகளாலும் முகத்தைப் பொத்திக்கொண்டு அழ, இன்ஸ்பெக்டர் சில விநாடி அவனையே பார்த்துக்கொண்டிருந்துவிட்டு நகர்ந்தார்.

அழுதுகொண்டிருந்த ராஜசேகரன் நிமிர்ந்தபோது பக்கத்து அறையிலிருந்து சமையல்காரப் பெண் வெளிப்பட்டாள்.

"அய்யா..."

"ம்..."

"நவீனா, குட்டி தூக்கத்திலிருந்து எந்திரிச்சு உட்கார்ந்துகிட்டு என்னமோ மாதிரி பார்த்திட்டிருக்குங்க."

"அழுறாளா?"

"இல்லீங்க."

"வா பார்க்கலாம்" சக்கர நாற்காலியை உருட்டிக்கொண்டு வேகவேகமாய் தன் படுக்கையறைக்குள் நுழைந்தான், ராஜசேகரன். அறையின் நடுவேயிருந்த படுக்கையில், நவீனா



எழுந்து உட்கார்ந்திருந்தாள். பார்வை, திறந்திருந்த சன்னலுக்கு அப்பால் போய் விழுந்திருந்தது.

"நவீனாக்குட்டி..."

"........"

கட்டில் ஓரத்தில் சக்கர நாற்காலியை நிறுத்தி, அதிலிருந்து படுக்கைக்குத் தவழ்ந்து, நவீனாவின் தோள் மேல் கை வைத்தான், ராஜசேகரன்.

அவள் திரும்பினாள். ராஜசேகரனின் முகத்தையே சில விநாடி பார்த்தவள் மெல்லிய குரலில் கூப்பிட்டாள். "அப்பா!"

"எ...என்னம்மா?"

"இ...இது... நம்ம வீடுதானே?"

"ஆமாம்மா."

"இந்த பீரோ புதுசா?"

"இல்லேம்மா... பழசுதான்."

நவீனா திடீரென்று முகம் மாறினாள். "எனக்கு பள்ளிக்கூடம் எப்போ?"

"இன்னும் பத்து நாள் இருக்கு."

"இப்ப மணி என்ன?"

"நாலு மணி."

"அம்மா எங்கே?"

"அ...அம்மாவா?" திடுக்கிட்ட ராஜசேகரன், அருகில் நின்றிருந்த சமையல்காரியைப் பார்க்க, அவள் கைகளைப் பிசைந்துகொண்டு பதறினாள். "அய்யா! குழந்தை சம்பந்தமில்லாமே என்னென்னமோ பேசுதுங்களே!"

நவீனா, சமையல்காரியின் பேச்சை பொருட்படுத்தாமல் ராஜசேகரனை நெருங்கி உட்கார்ந்தாள். "என்னப்பா... கண்ணுல தண்ணி? அழுதீங்களா?"

"இல்லேம்மா."

"அம்மா எங்கே? தோட்டத்துல இருக்காங்களா?"

ராஜசேகரன், நவீனாவை வியப்பாய்ப் பார்த்தான்.

'நவீனாவுக்கு என்னாயிற்று? மலையிலிருந்து பூர்ணிமா கீழே விழுந்ததை இவளும் பார்த்ததாய்தானே டிரைவர் கோபால் சொன்னான். இப்போது தூங்கி எழுந்ததும், அம்மா எங்கே என்று கேட்கிறாளே.'

"என்னப்பா... அப்படி பார்க்கிறீங்க?"

"ஒண்ணுமில்லேம்மா! காப்பி குடிக்கிறியா?"

"வேண்டாம்."

"பிஸ்கெட்?"

"ஊகூம்... நான் போய் தோட்டத்துல அம்மாவைப் பார்த்துட்டு வர்றேன்" சொல்லிக்கொண்டே எழ முயன்றவளை அணைத்துக்கொண்டான்.

"நீ ஏம்மா தோட்டத்துக்குப் போறே? அம்மா இப்ப வந்துடுவா."

"அப்பா..."

"ம்..."

"தூங்குறப்ப எனக்கு ஒரு கனவு..."

"கனவா?"

"ஆமா. நீங்க, நான், அம்மா மூணு பேரும் நம்ம காரில் எங்கேயோ போயிட்டிருக்கோம்."

ராஜசேகரன் அவளைப் பயமாய்ப் பார்க்க,

"'ம்' கொட்டுங்கப்பா! என் முகத்தையே பார்த்திட்டிருந்தா கனவை எப்படிச் சொல்றதாம்?"

"ம்..."

"காரில் போயிட்டிருக்கும்போது, திடீர்ன்னு ரோட்டு பூராவும் வெள்ளை பனி! அம்மாவும் நானும் இறங்கி ஓடுறோம்!"

"ம்..."

"திடீர்ன்னு அம்மாவைக் காணோம்!"

"ம்..."

"அப்பா! ஏன் அழுறீங்க?"

"ஒண்ணுமில்லேம்மா!" என்ற ராஜசேகரன், சமையல்காரப் பெண்ணிடம் திரும்பி, "மாரம்மா! டாக்டருக்கு போன் பண்ணி உடனே வரச்சொல்லு!" என்றான்.



"டாக்டரா... எதுக்குப்பா?"

"எனக்கு உடம்பு சரியில்லேம்மா, அதுக்குத்தான்."

கலவரமான முகத்தோடு சமையல்காரி மாரம்மா, தொலைபேசியை நோக்கிப் போனாள்.

மருத்துவர் கவுடா, நவீனாவைச் சோதித்துப் பார்த்தார்.

"டாக்டர்! நவீனா ஏன் இப்படி சம்பந்தமில்லாமே பேசுறா?"

"ராஜசேகரன்! அமைதியா இருங்க. உங்க மனைவியோட மரணம் குழந்தையோட மூளைக்கு இன்னமும் எட்டலை. அம்மா உயிரோடு இருக்காங்கங்கிற நினைப்பிலேயே இருக்கா. கனவுகள் வேற அவளைக் குழப்பியிருக்கு. நடந்த நிகழ்ச்சிகளும், கனவும் ஒன்றோடு ஒன்று கலந்து அவளை இந்த நிலையில் வைச்சிருக்கு."

"டா...டாக்டர்!"

"முதலில் அவளைத் தூங்க வைக்கணும். இந்த ஊசியைப் போடுறேன். ரெண்டு மணி நேரம் தூங்குவா. அவ தூங்கி எந்திரிச்சதும் எனக்கு போன் பண்ணுங்க. வந்து பார்க்கிறேன்."

ஊசி போட்டு, தூங்கிய நவீனாவுக்கு பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தான், ராஜசேகரன். இரண்டு மணி நேரம் கழித்தபோது, நவீனா புரண்டாள். அவள் உதடுகள் மெல்ல அசைந்தன.

"அ...ம்...மா..."

"நவீனா..."

கண்களை மலர்த்தினாள்.

"அப்பா..."

ராஜசேகரன் அவள் முகத்தை வருடினான்.

"உனக்கு என்னம்மா வேணும்?"

"அம்மா."

ராஜசேகரன் விழிக்க, நவீனா சட்டென்று எழுந்து

உட்கார்ந்தாள். "அப்பா! எனக்கு அம்மாவைப் பார்க்கணும். கனவில் அம்மா ஏன் அப்படி ஓடினாங்க?"

"ந...நவீனா..."

"அம்மா தோட்டத்துலதானே இருக்காங்க. நான் போய்ப் பார்க்கிறேன்" சொன்னவள் கட்டிலில் இருந்து கீழே குதித்து தோட்டத்தை நோக்கி ஓடினாள்.

## 5

மருத்துவமனை—

மனநல மருத்துவர் கிறிஸ்டோபர், நவீனாவுக்குப் பக்கத்தில் வந்து நாற்காலியிலிருந்து அவளை இறக்கினார். கவுடாவிடம் திரும்பிச் சொன்னார்.

"டாக்டர், குழந்தையை ஒரு சின்ன சோதனை செய்து பார்க்கணும்."

"செய்யுங்க."

கிறிஸ்டோபர், நவீனாவின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு, அவளிடம் பேச்சு கொடுத்தவாறே சிகிச்சை அறையை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

ஊட்டி. பச்சை வர்ணம் சீராய் பூசியது போன்ற புல்பரப்புக்கு நடுவே அந்த படப்பிடிப்பு வேன் நின்றிருந்தது. அதன் இரண்டு பக்கமும், சினிமா நிறுவன பெயர். வேனுக்கு கொஞ்சம் தள்ளி நான்கைந்து கார்கள், ஒரு பேருந்து.

சுமார் ஐம்பது பேர் சிதறியிருந்தார்கள். பாதி பேர் பெண்கள். பெண்களில் பெரும்பாலோர் ரோஜா நிற கச்சை யும், பாவாடையும் அணிந்து கெட்டியான மேக்கப்பில் தெரிந்தார்கள்.

'டைரக்டர்' என்று எழுதப்பட்டிருந்த நாற்காலிக்கு உடம்பைக் கொடுத்திருந்த இயக்குநர், உதவி இயக்குநரிடம் கத்திக்கொண்டிருந்தார்.



"கதாநாயகனுக்கு 'டான்ஸ்' சரியா வருதா?"

"வருதுண்ணே."

"எங்கே வருது? கோழிக்கறியும், பீரும் சாப்பிட்டு உப்பிப் போயிருக்கான்."

"அண்ணே, பலமா பேசாதீங்க! அந்த ஆளு காதுல விழுந்துடப் போவுது."

"விழட்டுமே! என்னாயிடும்? இந்த ஆறு மாசத்துல அந்த ஆளு நடிச்சு வெளியான மூணு படமும் டப்பா. நம்ம படம் வெளிவந்துதான் அந்த ஆளுக்கு ஒரு 'லிப்ட்' கொடுக்கணும்."

"அண்ணே! தயாரிப்பாளர் வர்றாரு."

"வரட்டும். அந்த நாற்காலியை எடுத்துப்போடு."

உதவி இயக்குநர் நாற்காலியை எடுத்துப்போட— தொப்பையோடு அந்தப் படத்தயாரிப்பாளர் வந்து உட்கார்ந்தார்.

"வந்திருக்கிற துணை நடிகைங்க ஒவ்வொருத்தியும் முழுக் கோழி கேக்கிறா."

"பாவம் சாப்பிடட்டுமே!"

"உங்களுக்கென்ன, எளிதாக சொல்லிடுவீங்க. ரெண்டு ஏலக்காய் எஸ்டேட்டை வித்து பணத்தை கொண்டாந்து இருக்கேன். இந்தப் பணத்துக்கு முக்கால்வாசி படத்தை முடிக்கலாம்ன்னு சொன்னீங்க. ஆனா, இன்னும் கால்வாசி கூட முடியலை. பணம் பூராவும் கரைஞ்சுபோச்சு."

"அட, ஏன் கவலைப்படுறீங்க? நாம எடுத்தவரைக்கும் போட்டுக் காட்டினா விநியோகஸ்தர்கள் பணத்தைக் கொண்டுவந்து கொட்டிட மாட்டாங்களா என்ன?"

ஜிகினா உடைகளில் இருந்த நாயகியும், நாயகனும் வலிப்பு வந்தவர்களைப் போல் கைகளை உதறி உதறி ஆடினார்கள். துணை நடிகைகள் சுற்றிலும் ஓடினார்கள்.

'நான் ஆளான வேளை! நீயொரு காங்கேயங் காளை'

இயக்குநர் 'கட்' என்றார். "என்னம்மா நீ! 'நான் ஆளான வேளை'ன்னு வர்ற இடத்துல, உதட்டைக் கடிச்சுகிட்டு ஹீரோவை போதை வழியப் பார்க்கணும்னு சொன்னேன். நீ என்னடான்னா கசாயம் குடிச்ச மாதிரி மூஞ்சியை வைச்சுக்கிறே?"

"சாரி சார்! இனிமே ஒழுங்கா பண்ணுறேன்."

துணை இயக்குநர் திரும்பினார்.

"அந்த நடிகை முன்பெல்லாம் நல்லா டான்ஸ் பண்ணுவாங்க. இப்ப வரவர சரியில்லை. பளபளப்பும் மங்கிப்போச்சு."

"வருடத்துக்கு ரெண்டு தடவை 'அபார்ஷன்' பண்ணிகிட்டா உடம்புல எப்படி பளபளப்பு நிக்கும்" இயக்குநர் சொல்லிச் சிரித்துக்கொண்டிருக்கும்போதே...

ஆடிக்கொண்டிருந்த துணை நடிகைகளில் ஒருத்தி 'சொத்'தென்று கீழே விழுந்து மல்லாந்தாள்.

"யோவ்! எவளோ ஒருத்தி விழுந்துட்டா."

"கட்... கட்..."

அனைத்து இயக்கங்களும் நின்றுபோக; எல்லோரும் அந்தப் பெண்ணை நோக்கி ஓடினார்கள்.

"யாரய்யா அந்தப் பொண்ணு?"

"அகல்யா சார்!"

"என்ன ஆச்சு?"

"வாயிலும் மூக்கிலும் ரத்தமா கொட்டுது."

## 6

நவீனாவோடு வீட்டுக்குத் திரும்பினார்கள், மருத்துவர்கள் கவுடாவும், கிறிஸ்டோபரும். ராஜசேகரன் தன் சக்கர நாற்காலியை வேகவேகமாய் உருட்டிக்கொண்டே வந்து–



அவர்களை எதிர்கொண்டான்.

"டாக்டர்..."

"சாரி மிஸ்டர் ராஜசேகரன். இது கொஞ்சம் சிக்கல்தான்" சொன்ன கிறிஸ்டோபர், நெற்றியைக் கவலையாய் தேய்த்துக்கொண்டார்.

ராஜசேகரனின் முகப் பரப்பில் வியர்வை முத்துகளின் ஊர்வலம்.

கிறிஸ்டோபர் தொடர்ந்தார். "இந்த நிமிடம் நவீனா ஒரு கண்ணாடிப் பாத்திரம். அந்தப் பாத்திரத்தை ஜாக்கிரதையாய் கையாள வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கு. அது போக்கிலேயே விட்டு– அவளை கொஞ்சம் கொஞ்சமாய் சகஜ நிலைக்கு திருப்பணும்."

"டாக்டர்! நவீனா என்ன இதய நோயாளியா?"

"கிட்டத்தட்ட அப்படித்தான்."

"வெளிநாட்டுக்குப் போய்..."

"மிஸ்டர் ராஜசேகரன்! நவீனாவுக்கு மருந்தோ, ஆபரேஷனோ அவசியமில்லை. அவளுக்கு இப்போ வேண்டியதெல்லாம் அதிர்ச்சி கலக்காத மகிழ்ச்சி! அம்மா உயிரோடு இருக்கிறாங்க என்கிற நினைப்பை அவளுக்குள் செலுத்திக்கிட்டே இருக்கணும்."

"இது முடிகிற காரியமா டாக்டர்?"

"முயற்சி எடுத்துகிட்டா முடியும்."

"எப்படி?"

"டாக்டர் கவுடாவின் ஆஸ்பத்திரியில் சேர்த்துடுங்க. வீட்டில் இருந்தா அம்மாவைப் பத்தின பழைய நினைவுகள் நவீனாவுக்குள் கிளறப்படலாம்."

"ஆஸ்பத்திரியில் சேர்த்தால் மட்டும் அவளுக்கு தன் அம்மாவோட ஞாபகம் வராமல் போயிடுமா, டாக்டர்?"

"வரும். ஆனா அதை திசை திருப்பிடலாம்."

"எப்படி?"

"குழந்தைகளின் மனநிலையை திசைதிருப்ப எவ்வளவோ இருக்கு."

ராஜசேகரனின் பக்கத்திலிருந்த தொலைபேசி கூப்பிட்டது. அவன் ரிசீவரை எடுத்து செவிமடுத்துவிட்டு "டாக்டர்! போன் உங்களுக்குத்தான்" என்றான்.

அவர் வாங்கி "அலோ" என்றார்.

"டாக்டர்! நான் நர்சு கீதா."

"என்னம்மா?"

"சினிமா படப்பிடிப்புக்காக வந்த ஒரு துணை நடிகை ஆபத்தான நிலையில் 'அட்மிட்' ஆகி இருக்காங்க."

"என்ன பிரச்சினை?"

"வாயிலும் மூக்கிலும் ரத்தமா கொட்டுது."

"நான் இப்போ வந்துடுறேன்" கவுடா ரிசீவரை வைத்து விட்டு நிமிர்ந்தார்.

"நான் உடனடியா ஆஸ்பத்திரிக்கு போகணும்."

"நீங்க புறப்படுங்க டாக்டர்."

கவுடா, காரை விரட்டிக்கொண்டு மருத்துவமனைக்கு போய்ச் சேர்ந்தபோது, படப்பிடிப்புக் குழுவைச் சேர்ந்த துணை நடிகைகள் கவலை அப்பிய முகங்களோடு தெரிந்தார்கள்.

கவுடா அந்த அறையை நெருங்கினார்.

"பெண்ணோட பேரென்ன?"

"அகல்யா."

"வயசு?"

"25."

"திருமணம்?"

"இல்லை டாக்டர்!"

நர்சு கீதா பின்தொடர, கவுடா கேட்டுக்கொண்டே கட்டிலில் ஒருபக்கமாய் திரும்பியிருந்த அந்தப் பெண்ணைப் பார்த்தார்.



நெற்றி சுருங்கி, அணிந்திருந்த மூக்குக் கண்ணாடியை சட்டென்று கழற்றிக்கொண்டு ஆச்சரியப்பட்டார்.

"கீதா..."

"டாக்டர்!"

"இந்தப் பெண்ணோட பேர் என்னன்னு சொன்னே?"

"அகல்யா டாக்டர்."

தொலைபேசி அலற, ரிசீவரை எடுத்தான், ராஜசேகரன். மருத்துவர் கவுடாவின் குரல் கேட்டது.

"அலோ ராஜசேகரன்?"

"சொல்லுங்க டாக்டர்."

"கிறிஸ்டோபர் இருக்காரா, போயிட்டாரா?"

"இப்பத்தான் கிளம்பிப் போனார்."

"நவீனா என்ன பண்ணிட்டிருக்கா?"

"தூங்கிட்டிருக்கா. ஏன், என்ன விசயம் டாக்டர்?"

"ராஜசேகரன்! உங்க மனைவி பூர்ணிமாவுக்கு கூடப்பிறந்த சகோதரி யாராவது இருக்காங்களா?"

"இல்லையே. பூர்ணிமா ஒரே பொண்ணுதான். ஏன் கேட்கிறீங்க டாக்டர்?"

"ஒரு ஆச்சரியம்!"

"ஆச்சரியமா?"

"ஆமா! உங்க மனைவி பூர்ணிமா மாதிரியே ஒரு பொண்ணு இங்கே 'அட்மிட்' ஆகியிருக்கா, பேரு அகல்யா."

"என்னது?"

"ஆமா, அது ஒரு துணை நடிகை."

"டாக்டர்! நீங்க சொல்றதை என்னால் நம்பமுடியலை. பூர்ணிமா மாதிரியே அந்தப் பொண்ணு இருக்காளா?"

"பூர்ணிமாவோட நிறம், உயரம், அந்தக் க்ண்கள், லேசா சதை பூசிய உடம்பு என எல்லாமே ஒத்துப்போகுது. சட்டென்று பார்த்தால் பூர்ணிமாதான். கொஞ்சம் உத்துப்

பார்த்தாதான் சின்னச் சின்ன வித்தியாசம் தெரியுது."

"அந்தப் பொண்ணோட உடம்புக்கு என்ன டாக்டர்?"

"ரத்த வாந்தி ஆகி இருக்கு. இப்போ ரத்தம் கொடுத்துட்டு இருக்கோம். இன்னும் ஒரு மணி நேரத்துல நினைவு வரலாம்."

"நான் வந்து அந்தப் பொண்ணை பார்க்கலாமா டாக்டர்?"

"வாங்களேன்."

ராஜசேகரன், வேலைக்காரப் பெண்ணிடம் திரும்பினான், "நவீனாவை பத்திரமா பார்த்துக்க."

"சரிங்கய்யா!"

அவன் சக்கர நாற்காலியை உருட்டிய விநாடி...

"அப்பா..."

நவீனாவின் குரல் முதுகுக்குப் பின்னால் நோயாளித்தனமான குரலோடு எழுந்தது. ராஜசேகரன் மெலிதாய் திடுக்கிட்டு திரும்பினான்.

"எ...என்னம்மா?"

"டாக்டர் மாமாவையா பார்க்கப்போறீங்க?"

"ஆ... ஆமா!"

"நானும் வர்றேன்."

"வேண்டாம்மா; நீ படுத்து தூங்கு."

"ஊகூம்... நானும் வருவேன்; அம்மாவை மட்டும் கூட்டிட்டு போறீங்க?" சொன்னவள், கட்டிலில் இருந்து கீழே குதித்து, போர்டிகோவில் நின்றிருந்த காரை நோக்கி ஓடினாள்.

அவளைப் பிடிக்க முயன்ற கோபாலை கையமர்த்தினான், ராஜசேகரன். "வேண்டாம்ன்னு சொன்னா அவளோட பிடிவாதம் அதிகமாகும். அவ வரட்டும். காரிலேயே உட்கார்ந்திருக்கட்டும். நான் மட்டும் இறங்கிப் போய் டாக்டரை பார்த்துட்டு வந்துடுறேன்."

"சரி சார்."

முன் இருக்கையில் உட்கார்ந்திருந்த நவீனா, டிரைவர் கோபால் காரை கிளப்ப முயன்றபோது, காரின் சன்னலுக்கு



வெளியே தலையை நீட்டி தோட்டத்தைப் பார்த்துக் கத்தினாள். "அம்மா... சீக்கிரமா வாம்மா! இல்லேன்னா உன்னை விட்டுட்டுப்போயிடுவோம்."

## 7

"வாங்க ராஜசேகரன்!"

"டாக்டர்... அந்தப் பொண்ணு..."

"வாங்க, பார்க்கலாம்."

வராந்தாவில் நடந்தார்கள்.

"நீங்க போனில் சொன்னதும் எனக்கு ஒரே ஆச்சரியம் டாக்டர்!"

"நிஜமாவே இது ஆச்சரியம்தான்."

"அந்தப் பெண்ணோட பேர் என்னன்னு சொன்னீங்க?"

"அகல்யா."

"அவளைப் பற்றி விசாரிச்சுட்டீங்களா?"

"விசாரிக்காமல் இருப்பேனா?"

"சொந்த ஊர் எது?"

"சென்னை. அப்பா– அம்மா இல்லை. ஒரு அண்ணன் வடநாட்டுப் பக்கம் ஏதோ வேலையில் இருக்கானாம்."

"கல்யாணம்?"

"இன்னும் ஆகலை."

"ரத்த வாந்திக்கு என்ன காரணம்?"

"இன்னும் தெரியலை."

வார்டுக்குள் நுழைந்தார்கள். கட்டிலில் மல்லாந்திருந்த அந்தப் பெண்ணைப் பார்த்த ராஜசேகரன் ஸ்தம்பித்தான்!

அப்படியே அச்சாய் பூர்ணிமா.

"ராஜசேகரன்?" அவன் தோளைத் தொட்டார், கவுடா.



"ரெண்டு பேர் ஒரே உருவமா இருக்கிறத சினிமாவில மட்டும்தான் பார்த்திருக்கேன். ஆனா என் பூர்ணிமா மாதிரியே இன்னொரு பெண்ணா?"

பிரமிப்பு அகலாத கண்களோடு கட்டிலைச் சுற்றிச் சுற்றி வந்து பார்த்தான், ராஜசேகரன். கவுடா கேட்டார்:

"பூர்ணிமாவோடு பிறந்தவங்க வேறு யாரும் இல்லைன்னு உங்களுக்கு உறுதியா தெரியுமா, ராஜசேகரன்?"

"தெரியும் டாக்டர்! பூர்ணிமா, பெற்றோருக்கு ஒரே மகள்தான். பூர்ணிமா ஆறு மாதக் குழந்தையா இருக்கும் போதே, அப்பா இறந்துட்டார். அம்மா ரெண்டு வருடத்துக்கு முன்னாடி காலமானாங்க."

நர்சு ஒருத்தி உள்ளே வந்தாள். கவுடா, அவளிடம் திரும்பினார். "என்ன கவிதா?"

"அகல்யாவோட இரத்த பரிசோதனை 'ரிப்போர்ட்' டாக்டர்" அவள் நீட்டிய உறையை வாங்கிப் பிரித்தார். அறிக்கையைப் படித்துவிட்டு, அதை கோட்டு பாக்கெட்டுக்குள் சொருகிக்கொள்ள, ராஜசேகரன் அவரை ஏறிட்டான்.

"ஏதாவது ஆபத்தா டாக்டர்?"

"இல்லை! அவள் நார்மல்."

"அந்த ரத்த வாந்தி."

"நான் எதிர்பார்த்த மோசமான காரணம் இல்லை."

"நீங்க என்ன காரணத்தை எதிர்பார்த்தீங்க டாக்டர்?"

"ரத்தப் புற்று! ஆனா, அது இல்லைன்னு இப்போ உறுதி ஆயிடுச்சு. வயித்துல 'அல்சர்' மாதிரி புண் ஏதாவது இருந்திருந்தாலும் இதுமாதிரி ரத்த வாந்தி வர வாய்ப்பிருக்கு."

"தலைமுடி மட்டும் கர்லிங்கா இருந்திருந்தா இவ நூறு சதம் பூர்ணிமாதான்."

"உங்க மனைவி இறந்த சில நாட்களுக்குள் இப்படியொரு உருவ ஒற்றுமையோடு ஒரு பெண் கண்களுக்குத் தட்டுப் படுறது ஒரு ஆச்சரியம்தான்."

"இவளுக்கு எப்போ நினைவு திரும்பும் டாக்டர்?"

"ஒரு அரை மணி நேரமாகும்" கவுடா சொல்லி கொண்டிருக்கும் போதே...

"அப்பா..."

நவீனா குரல் கொடுத்தபடி ஓடிவந்தாள். ஒரு பஞ் துணுக்கைப் போல் ராஜசேகரனின் இடுப்பைக் கட்டி கொண்டாள்.

"அம்மா எங்கேப்பா?"

"........"

"என்னை விட்டுட்டு நீங்க மட்டும் வந்துட்டீங்களே?"

"........"

மருத்துவர் கவுடா மெல்ல நடந்து நவீனாவைத் தொட்டார். அவள் திரும்பினாள்.

"டாக்டர் அங்கிள்..."

"உனக்கு அம்மாதானே வேணும்?"

"ஆமா!"

"இதோ பாரு, அம்மா தூங்குறாங்க" கட்டிலில் படுத்திருந் அகல்யாவை மருத்துவர் கவுடா காட்ட, ராஜசேகரன் திடுக்கிட்டான்.

"டாக்டர்..."

"ராஜசேகரன்! இந்தப் பெண்ணை நான் பார்த்ததுமே ஒரு முடிவுக்கு வந்துட்டேன், ஸ்தம்பிச்சுப்போயிருக்கி நவீனாவுக்கு இந்த அகல்யாதான் அருமருந்து."

"அம்மா..." நவீனா கட்டிலை நோக்கி ஓட, மருத்துவர் அவளை அள்ளிக்கொண்டார்.

"அங்கிள்..."

"ம்..."

"அம்மாவுக்கு நான் ஒரு முத்தம் கொடுக்கட்டுமா?"

"வேண்டாம்மா... அம்மா பக்கத்துல இப்ப போகக்கூடாது இன்னும் கொஞ்ச நேரத்துல அம்மாவே கண்முழிச்சுப் பார்ப்பாங்க. அப்ப நீ முத்தம் தரலாம்."



ஆடவர் இருவரும் பக்கத்து அறைக்குள் நுழைந்ததுமே, அங்கே இருந்த ஒரு நபர் எழுந்து நின்றான்.

"உட்காரு நாகராஜ்!" கவுடா சொல்ல, அவன் உட்கார்ந்தான்.

"இவர்தான் ராஜசேகரன். நான் சொன்ன குழந்தையோட அப்பா."

"சார், உங்க மனைவியின் மரணத்தைப் பற்றியும் அதனால குழந்தை புத்தி பேதலிச்ச நிலையில் இருக்கிறதைப் பற்றியும் டாக்டர் சொன்னார். குழந்தையோட உடம்பு குணமாகிற வரைக்கும் உங்க குழந்தைக்கு அம்மாவா அகல்யா நடிக்கிறதைப் பற்றி எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை" புதியவன் சொன்னான்.

ராஜசேகரன் திரும்பினான். "டாக்டர்! இதெல்லாம் விபரீதமான யோசனை. என் பூர்ணிமா மாதிரி அந்தப் பெண் இருக்காங்கிற ஒரே காரணத்துக்காக இந்த நாடகத்தை நடத்தினா, அதனால பாதிக்கப்படப்போறது அந்தப் பொண்ணுதான்."

நாகராஜ் சிரித்தான். "அகல்யாவோட வாழ்க்கை எந்தவிதத்திலும் பாதிக்காது சார். அவளை உங்க வீட்டுல ஒரு வேலைக்காரியாவே வாழ்நாள் பூராவும் வைச்சிக்கலாம்."

"அவ வேலைக்கு இருக்கிறதும், என் குழந்தைக்கு அம்மாவா நடிக்கிறதும் ஒண்ணாயிடுமா?"

"ராஜசேகரன்! நாகராஜ்கிட்ட நான் பேசிப் பார்த்ததில் அகல்யாவுக்கு குழந்தைகள் மேல கொள்ளைப் பிரியம்னு தெரிஞ்சது. நவீனாவுக்கு அம்மாவா நடிக்க அவ சந்தோசமா ஒத்துக்குவா."

"டாக்டர்! இந்த நடிக்கிற திட்டம் எனக்கு பிடிக்கலை."

"சரி! வேறு என்ன பண்ணலாம்?"

"என் முடிவை நான் சொல்லட்டுமா?"

"சொல்லுங்க."

"விரும்பினால்...?" தொடர்ந்தான்.

"அவளைக் கல்யாணம் பண்ணிக்க நான் தயார்."

கவுடா திடுக்கிட்டார். "ரா...ராஜ...சே...சேகரன்!"

## 8

"அந்தப் பொண்ணோட கடந்த கால வாழ்க்கையைப் பற்றி எனக்குக் கவலையில்லை. என்னைப் பொறுத்த வரைக்கும் அவ என் ரெண்டாவது பூர்ணிமா" ராஜசேகரன் சொல்ல... நாகராஜ் எல்லாப் பற்களும் தெரிய சிரித்தான்.

"என்னது; அகல்யாவை கல்யாணம் பண்ணிக்கப் போறீங்களா? அந்த விபரீத பந்தமெல்லாம் வேண்டாம் சார்! உங்கக் குழந்தையோட உடம்பும், மனசும் நல்லாகிற வரைக்கும் அவ உங்க வீட்டுல இருக்கட்டும். அதுக்கப்புறம் அவளுக்குப் பேசின பணத்தைக் கொடுத்து அனுப்பிடுங்க. உங்க மனைவி மாதிரி அவ இருக்காங்கிற ஒரே காரணத்துக்காக அவளை கல்யாணம் பண்ணிக்க நினைக்கிறது சரியில்லை."

கவுடாவும் குறுக்கிட்டுச் சொன்னார்: "ஆமா ராஜசேகரன்; நாகராஜ் சொல்றதுதான் சரி. நீங்க ரெண்டாம் கல்யாணம் செஞ்சுக்க விரும்பினா உங்களுக்கு எவ்வளவோ பெண்கள் கிடைப்பாங்க."

"இல்லை டாக்டர்... அந்தப் பெண்ணைப் பார்த்ததுமே நான் முடிவுக்கு வந்துட்டேன். இனிமே முடிவைச் சொல்ல வேண்டியது அந்தப் பொண்ணுதான்."

மறுநாள் மத்தியானம் பன்னிரண்டு மணி. கைகாரா அணைக்குப் பக்கத்தில் இருந்த கற்பூரச் சோலைக்குள் படப்பிடிப்பு நடந்தது. சண்டைக் காட்சி முடிந்து, சாப்பாட்டு நேரம்.



பாபு ஒரு சப்பாத்தியை இரண்டாய் கிழித்துக்கொண்டே நாகராஜை ஏறிட்டான்.

"ம்... சொல்லு! என்ன விஷயம்?"

"அகல்யாவை ஆஸ்பத்திரியில் போய்ப் பார்த்தியா, பாபு?"

"ம்... பார்த்தேன்."

"எப்படி இருக்கா?"

"சுயநினைவுக்கு வந்து நல்லாவே பேசினாள்."

"அவளுக்கு உடம்புக்கு என்னன்னு டாக்டர்கிட்டே விசாரிச்சியா?"

"ம்... விசாரிச்சேன்."

"என்ன சொன்னார்?"

"பயப்படுறதுக்கு ஒண்ணுமில்லைன்னு சொன்னார். ஆமா, அகல்யாவைப் பற்றி என்கிட்டே எதுக்காக விசாரிக்கிறே?"

நாகராஜ் புன்னகைத்தான். "உன்கிட்டே விசாரிக்காமல் வேறு யார்கிட்டே விசாரிக்கிறதாம்?"

"நீ என்ன சொல்றே?"

"எனக்கு எல்லாமே தெரியும்ன்னு சொல்றேன். நீயும் அகல்யாவும் ஒருத்தரையொருத்தர் விரும்புறீங்க, இல்லையா?"

"நாகராஜ்!"

"வாயில் இருக்கிற சப்பாத்தியை மொதல்ல விழுங்கு. தொண்டையில் மாட்டிக்கப்போகுது."

"நான் அவளை விரும்புறேன்னு உனக்கு யார் சொன்னது?"

"எனக்கு யாரும் சொல்லவேண்டியதில்லை. நான் சப்ளை பண்ற ஒவ்வொரு நடிகையைப் பற்றியும் எனக்குத் தெரியும். உங்க ரெண்டு பேரையும் கடந்த ஒரு மாசமாகவே கணக்கு பண்ணிட்டுத்தான் வர்றேன்."

பாபு லேசாய் புன்னகைக் காட்டினான். "நாகராஜ்! நீ தப்பா புரிஞ்சுகிட்டே. அகல்யாவை நான் கல்யாணம் பண்ண விரும்பலை. அவ உடம்பு மேல எனக்கு ஒரு கிறக்கம். நேரம் கிடைக்கும்போதெல்லாம் தொட்டுக்குவேன். அவளும்

மறுக்கலை. அதே நேரம்— என்னைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு நினைக்கலை."

"எப்படியோ உங்களுக்குள் ஒரு பிடிப்பு இருக்கு இல்லையா?"

"ஆமா!"

"அந்தப் பிடிப்பைத்தான் நானும் நீயும் பயன்படுத்திக்கப் போறோம்."

"நீ என்ன சொல்றே?"

"ஊட்டியில் ராஜசேகரன்னு எஸ்டேட் அதிபர், பல கோடி ரூபாய்க்கு சொந்தக்காரன். அவ்வளவு சொத்து இருக்கிற ராஜசேகரனுக்கு ரெண்டு காலும் ஊனம். கொஞ்ச நாளைக்கு முன் ராஜசேகரனின் மனைவி, மலை உச்சியிலிருந்து தவறி விழுந்து பரலோகம் போயிட்டாள். அந்தச் சம்பவத்தை நேரில் பார்த்த குழந்தை நவீனா, குழம்பிப்போன மனநிலையில், தாய் உயிரோடு இருக்கிறதாகவே நினைச்சுகிட்டிருக்கா."

ஒரு வாய் சப்பாத்தியை கோழிக் குருமாவில் தோய்த்து, மென்னு விழுங்கிவிட்டு தொடர்ந்தான் நாகராஜ். "இனிமே தான் முக்கியமான விசயமே வரப்போகுது. உன்னோட ஆள் அகல்யாவுக்கும், பூர்ணிமாவுக்கும் ஒரே மாதிரியான முக சாடை, உருவ அமைப்பும் கிட்டத்தட்ட ஒரே மாதிரிதான்."

பாபு சுவாரசியமானான். "நிஜமாவா?"

"அகல்யாவைப் பார்த்ததும் ராஜசேகரன் ஸ்தம்பிச்சு போனதை நான் பார்த்தேன். அந்தக் குழந்தை நவீனாவும், அகல்யாவைப் பார்த்துட்டு 'அம்மா'ன்னு கூப்பிட்டாள்ன்னா பார்த்துக்கோயேன்."

"ஆச்சரியமா இருக்கே?"

"குழந்தை நவீனா மன அதிர்ச்சியிலிருந்து விடுபடணும்ன்னா அகல்யாவோட உதவி தேவைப்படுது. அதாவது, குழந்தைக்கு அம்மாவாக, அகல்யா நடிக்கணும்."

பாபு தாடையை தாங்கிக்கொண்டான். "நாகராஜ்!



இதென்ன... சினிமாவில் வர்ற மாதிரி இருக்கு?"

நாகராஜ் சிரித்தான். "நிஜ வாழ்க்கையில் வர்ற சில சம்பவங்கள் சினிமாவைவிட சுவாரசியமாக இருக்கும், பாபு."

"சரி, குழந்தைக்கு அம்மாவா அகல்யா நடிக்கணும். அதுக்கு அகல்யா சம்மதிச்சுட்டாளா?"

"அகல்யாவுக்கு ஓரளவு குணமானதும் டாக்டரே அதைப்பத்தி அவகிட்டே பேசப் போறார். இதுக்கு மத்தியில் ஒரு சின்னக் குழப்பம்..."

"என்ன?"

"ராஜசேகரன் இந்த 'நடிப்பு' திட்டத்துக்கு ஒத்துக்கலை."

"ஏன்?"

"அகல்யா அம்மாவாக நடிச்சு, நவீனாவுக்கு மன அதிர்ச்சி குணமானதும் பிரிஞ்சுபோறதை நான் விரும்பலை... அகல்யா என்னிக்குமே நவீனாவுக்கு அம்மாவாக இருக்கணும்ன்னு ஆசைப்படுறார், ராஜசேகரன்."

பாபுவின் நெற்றி விதவிதமாய் சுருங்கியது.

"அப்படின்னா?"

"அகல்யாவை கல்யாணம் பண்ணிக்கப்போறதாக ராஜசேகரன் முடிவு எடுத்திருக்கார்."

பாபு புன்னகைத்தான். "அகல்யா அதிருஷ்டக்காரி."

"அதிர்ஷ்டக்காரி அகல்யா மட்டுமில்லை, நீயும் நானும் கூடத்தான்!"


ராணி முத்து சந்தா விவரம்

| | |
|---|---|
| ஆறு மாதம் | ரூ. 65 |
| ஒரு ஆண்டு | ரூ. 120 |
| இரண்டு ஆண்டு | ரூ. 225 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஆறு மாதம் | ரூ. 450 |
| ஒரு ஆண்டு | ரூ. 800 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:
மேலாளர்,
"ராணி முத்து",
சென்னை-600 007.

## 9

பாபு இடக்கையால் தாடையைத் தடவி "ம்..." என்று முனகி, யோசிக்க ஆரம்பித்தான்.

"என்ன பாபு, இப்படி யோசிக்கிறே?"

"உன்னோட திட்டம் நடைமுறைக்கு சாத்தியப்பட்டு வருமான்னு யோசிக்கிறேன்."

"ஏன் வராது?"

"மொதல்ல இந்தக் கல்யாணத்துக்கு அகல்யா ஒத்துக்கு வாளா?"

"நீயும் நானும் எடுத்துச்சொன்னா கண்டிப்பா ஒத்துக்குவா."

"அவ ஒத்துக்கலைன்னா?"

"இதோ பார் பாபு! அவளுக்கு இந்த சினிமா தொழில் பிடிக்கலை. இப்படி கல்யாண வாய்ப்பு வந்தா வேண்டாம்ன்னு சொல்லிடுவாளா என்ன?"

"இந்த விசயத்தை நீயும் நானும் பேசி பயனில்லை. அகல்யாவையும் வைச்சுகிட்டுத்தான் பேசணும்."

"இன்னிக்கு இராத்திரி பேசிடலாமா?"

"ம்..."

அகல்யா முகத்தைச் சுளித்தாள்.

"என்னது... நொண்டி மனுசனை நான் கல்யாணம் பண்ணிக்கணுமா? இதோ பாருங்க நாகராஜண்ணே... நான் சினிமாக்காரிதான். உடம்பால் பல தடவை கெட்டுப் போனவள்தான். ஆனாலும், எனக்கு கல்யாணம்ன்னு ஒண்ணு நடந்தா அது உருப்படியாக இருக்க வேண்டாமா? எனக்கு வரப்போற புருஷனுக்கு கையும் காலும் ஒழுங்கா இருக்கணும்ன்னு எம்மனசுல ஆசை இருக்காதா?"



சாத்தியிருந்த அறைக் கதவை நாகராஜ் ஒரு தடவை பார்த்துவிட்டு அகல்யாவிடம் திரும்பினான். "அகல்யா! இதெல்லாம் ஒரு நாடகம்ன்னு ஏற்கனவே சொல்லிட்டேன். அந்த நொண்டி ராஜசேகரன், பேருக்குத்தான் உனக்கு புருஷன். நீ இப்பவும் விரும்பிட்டிருக்கிற பாபுதான் எப்பவும் உனக்கு புருஷன்."

பக்கத்தில் உட்கார்ந்திருந்த பாபு தலையாட்டினான்.

"ஆமா அகல்யா! அந்த நொண்டி ஆளை கல்யாணம் பண்ணிகிட்டா பல கோடிக்கு நீ சொந்தக்காரி. ஒரு மூணு மாச காலம் அவனோடு குடும்பம் நடத்து, போதும். அதுக்கப்புறம் அவனை முடிச்சுடலாம்."

"ஆளை தீர்த்துக்கட்டினா போலீசுக்கு தெரியாம போயிடுமா?"

"போலீஸ் சந்தேகப்படாதபடி ஆளைத் தீர்த்துக்கட்டுற துக்கு அம்சமான திட்டங்கள் கைவசம் இருக்கு."

"அந்த சின்னப்பொண்ணு?"

"கோழிக்குஞ்சைப் பற்றி கவலப்படவேண்டியது இல்லை. ஏதாவது ஒரு சந்தர்ப்பம் வாய்க்கும்போது அதை நசுக்கிட லாம்."

"நாகராஜண்ணே! நீங்க பேசுறதைப் பார்த்தா எனக்குப் பயமாயிருக்கு!"

"எதுக்கு பயம்? நாங்க இருக்கும்போது உனக்கு எதுக்கு பயம்ன்னு கேக்கிறேன். இதோ பாரு அகல்யா, இந்த சினிமா உலகை நம்பிக்கிட்டிருந்தா நாம என்னிக்குமே மேலே வரமுடியாது."

"அண்ணே! அந்த நொண்டி ஆசாமி எப்பேர்ப்பட்ட வருன்னு தெரியலையே?"

"நானும் பாபுவும் அவனைப் பற்றி விசாரிச்சுப் பார்த்துட்டோம். ஆசாமி நல்ல ஆள். பொண்டாட்டி மேல உயிரையே வைச்சிருந்தானாம்."

"பைத்தியம் பிடிச்ச அந்தக் குழந்தையை என்னால்

சமாளிக்க முடியுமா?"

"குழந்தைக்கு பைத்தியமில்லை அகல்யா! ஒரு மனப் பிரமைதான். அது அம்மான்னு உன்கிட்டே ஓடிவரும்போது மூஞ்சியைக் கொஞ்சம் சிரிச்ச மாதிரி வைச்சுகிட்டா போதும். அப்பப்போ ரெண்டு வார்த்தை பேசு."

பாபு குறுக்கிட்டான். "நீ ஒண்ணையும் யோசிக்காதே அகல்யா. பேசாமே அந்த ஆளுக்கு கழுத்தை நீட்டிடு."

அகல்யா பயத்தோடு எச்சில் விழுங்கினாள். "உங்க ரெண்டு பேரையும் நம்பித்தான் இந்தக் காரியத்தில் இறங்குகிறேன்."

"டாக்டர்கிட்டே முடிவைச் சொல்லிடலாமா?"

"ம்..."

தொலைபேசி அலறி, வெறுமனே கண்மூடி படுத்திருந்த ராஜசேகரனை உசுப்பியது. அவசர அவசரமாய் எடுத்தான்.

"அலோ..."

"ராஜசேகர்! நான் கவுடா."

"சொல்லுங்க டாக்டர்."

"அந்தப் பெண் அகல்யா உங்களை கல்யாணம் பண்ணிக்க ஒத்துகிட்டா."

"ஏதாவது நிபந்தனை சொன்னாளா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை."

## 10

எட்டு மணிச் சூரியன் ஊட்டியின் பனிக்குத் தோற்றுப் போக, காற்று— பனிக்கட்டியாய் முகத்தை உரசியது.

"அகல்யா" . மருத்துவர் கவுடா கூப்பிட, சாலையை வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த அகல்யா திரும்பினாள்.

"என்ன டாக்டர்?"



"ராஜசேகரன் உன்கிட்டே பேசும்போது, எந்த நிபந்தனையைச் சொல்லப்போறாருன்னு எனக்குத் தெரியாது. அவர் என்ன நிபந்தனை போட்டாலும், சரி...சரின்னு தலையாட்டிடு."

அகல்யா சிரித்தாள்.

"என்னம்மா சிரிக்கிறே?"

"டாக்டர்! என் வாழ்க்கையில், நான் எத்தனையோ நிபந்தனைகளைப் பார்த்தவள். சினிமா உலகில் இல்லாத நிபந்தனைகளா?"

"சரி... வாம்மா!" அகல்யாவைக் கூட்டிக்கொண்டு நடந்தார், கவுடா. எதிர்ப்பட்ட வேலைக்காரி, அகல்யாவை பிரமிப்பாய்ப் பார்த்து, சட்டென்று கைகுவித்தாள்.

"இது பூர்ணிமாவுக்குக் கிடைச்ச மரியாதை" கவுடா சிரித்தார்.

"என்ன மாரம்மா... அய்யா எந்திரிச்சிட்டாரா?"

"சீக்கிரமாகவே எந்திரிச்சு, குளிச்சுட்டு முன் அறையில் காத்திட்டிருக்காருய்யா."

"குழந்தை?"

"இன்னும் தூங்குது."

உள்ளே போனார்கள். இரண்டு அறைகளைக் கடந்ததுமே எதிர்ப்பட்ட அறையில், சக்கர நாற்காலியில் உட்கார்ந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்தான், ராஜசேகரன்.

"வணக்கம்" என்று கைகளைக் குவித்தாள், அகல்யா.

"உட்காரு அகல்யா. டாக்டர் நீங்களும்."

"இல்லை ராஜசேகரன்! நீங்க பேசவேண்டியதைப் பேசுங்க. நான் தோட்டத்தில் இருக்கேன். ஒரு அரை மணி நேரம் கழிச்சு வர்றேன்" சொன்ன கவுடா, பத்திரிகையை எடுத்துக் கொண்டு நிதான நடையில் வெளியேறினார். அவர் முதுகு மறையும்வரை மவுனம் காத்த ராஜசேகரன், அகல்யாவிடம் திரும்பினான்.

"காப்பி..."

"வேண்டாங்க... வரும்போதுதான் பால் குடிச்சிட்டு வந்தேன்."

"உடம்புக்கு இப்போ நல்லாயிருக்கா?"

"ம்..."

"அடிக்கடி இதுமாதிரி வருமா?"

"இதுக்கு முந்தி ஒரு தடவை, ரத்த வாந்தி பண்ணி இருக்கேன்."

"இதை முழுமையாகக் குணப்படுத்திக்கணும்! என்னோட குழந்தைக்கு அம்மாவா இருக்கிப்போகிற நீ ஆரோக்கியமா இருக்கணும்."

"என்கூட பேசணும்ன்னு சொன்னீங்களாம். ஏதோ நிபந்தனை அது இதுன்னு டாக்டர் சொன்னார். அது என்ன நிபந்தனைங்கிறதை நான் தெரிஞ்சுக்கலாமா?"

"சொல்றேன் மொதல்ல... நான் கேட்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்லு."

"கேளுங்க."

"என்னைக் கல்யாணம் பண்ணிக்க உனக்கு இஷ்டம் தானே?"

"இஷ்டம்தான்."

"எனக்கு ரெண்டு காலும் சூம்பல்."

"தெரியும்!"

"நான் ஏன் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப் பட்டேன்னு உனக்குத் தெரியுமா?"

"தெரியாது."

"நீ முழு உரிமையோடு என் குழந்தையை உன் குழந்தை யைப் போல பார்த்துக்கணும்ங்கிற ஒரேயொரு காரணத்துக் காகத் தான்."

அகல்யா புன்னகைத்தாள். "குழந்தைக்கு முழுமையான



## முத்திரை பதித்தவர்களின் வரிகள்!



### யார் மனிதன்?

அடிக்கடி தவறு செய்கிறவன் அப்பாவி. ஒரே தவறைத் திரும்பத் திரும்பச் செய்கிறவன் மூடன். ஒரு தவறுமே செய்யாதவன் மரக்கட்டை. தன்னை அறியாமல் தவறு செய்து, தன்னையறிந்து திருத்திக் கொள்கிறவனே மனிதன்.

—கண்ணதாசன்.

அம்மாவாக மட்டுமில்லை; உங்களுக்கும் முழுமையான..."

ராஜசேகரன் கையமர்த்தினான்.

"இங்கேதான் என்னோட நிபந்தனையே வருது."

"என்ன நிபந்தனை?"

"எனக்கு நீ மனைவியா இருக்கலாம். என் மனசிலேயும் உனக்கு இடம் இருக்கு. ஆனா..."

"புரியுது! ஒரு கணவனுக்கும் மனைவிக்கும் இடையே இருக்கிற அந்த 'உறவு' வேண்டாம்ன்னு சொல்றீங்க?"

ராஜசேகரன் தலை குனிந்து "அதேதான்" என்றான்.

அகல்யா, அகலமாய்ப் புன்னகைத்தாள்.

"என் பூர்ணிமாவைத் தொட்ட கையாலே உன்னைத் தொடமாட்டேன்னு சொல்றீங்க. அப்படித்தானே?"

"நீ எப்படி வைச்சுக்கிட்டாலும் சரிதான்."

"இந்த ஒரேயொரு நிபந்தனைதானா? இல்லே இன்னும் ஏதாவது நிபந்தனை இருக்கா?"

"இது ஒண்ணுதான். ஆனா, என்னோட வேண்டுகோள் சிலது இருக்கு."

"சொல்லுங்க."

"கல்யாணம் இதே வீட்டுல வைச்சு எளிமையாக நடக்கும்."

"சரி!"

"உன்னோட சினிமா சம்பந்தப்பட்ட ஆட்கள் யாருமே உன்னைப் பார்க்கிறதுக்காக இங்கே வரக்கூடாது. அதேமாதிரி நீயும் அவங்களைப் பார்க்கிறதுக்காக வீட்டைவிட்டு வெளியே போகக்கூடாது."

"சரி!"

"அவ்வளவுதான்" ராஜசேகரன் சொன்ன அதே விநாடி—

"அம்மா!" என்று வீறிட்டுக்கொண்டு ஓடிவந்தாள், நவீனா. அகல்யாவைத் தொட இரண்டடி இருக்கும்போது தாவி அவளுடைய இடுப்பைக் கட்டிக்கொண்டாள்.

"எப்பம்மா வந்தே?"

"இப்பத்தான்."

"உன்னை விட்டுட்டு அப்படியெல்லாம் இனி ஓடமாட்டேன்."

"என் ராஜாத்தி! அம்மாவுக்கு முத்தம் கொடுக்க மாட்டியா?"

"கொடுக்கிறேனே" என்றவள் கன்னத்தில் உதட்டைப் பதித்துவிட்டு, "உம்மூஞ்சி வாசனையா இருக்கும்மா" என்றாள்.

நவீனா, அகல்யாவின் கைகளிலிருந்து இறங்கி சரசரவென்று ஓடினாள். ராஜசேகரன், அகல்யாவை ஏறிட்டான்.

"உன்னைப் பார்த்ததுமே நவீனாவுக்குப் பேச்சு தெளிவா வருது."

"அழகான குழந்தை. உங்க சாயல்தான் அவகிட்டே இருக்கு."



"பூர்ணிமா, குழந்தைகிட்டே இப்படியெல்லாம் கொஞ்சிப் பேசமாட்டா. அதட்டிக்கிட்டேதான் இருப்பா."

"நான் அப்படி இருக்கப்போறதில்லை."

நவீனா திடும்மென்று மறுபடியும் அகல்யாவிடம் வந்தாள். கையைப் பற்றி இழுத்தாள், "அம்மா, இங்கே வாயேன்!"

"எங்கேம்மா?"

"வாயேன் சொல்றேன்."

அவளோடு நடந்தாள், அகல்யா. அறையின் கோடியில் இருந்த வெளிப்புற சன்னலுக்குப் பக்கத்தில் வந்ததும் நவீனா நின்று, வெளியே கையைக் காட்டினாள். "நீயும் நானும் ஒருநாள் பார்த்தோமே மூணு மேகம். அந்த மூணு மேகமும் மறுபடியும் வந்திருக்கு."

"மேகமா?"

"ம்... அந்த மலை மேல உக்காந்திருக்கு பாரு."

அகல்யா, சன்னல் வழியே தூரத்தில் தெரிந்த மலை முகட்டையும், அதன் மேல் உட்கார்ந்திருந்த மேகங்களையும் பார்த்தாள்.

நவீனா கைகளைத் தட்டிக்கொண்டு சிரித்தாள். "பெரிசா இருக்கிறது, அப்பா மேகம்; அதைவிட கொஞ்சம் சிறிதா இருக்கிறது அம்மா மேகம்; அதுக்குப் பக்கத்துல குட்டியா ஒரு மேகம் தெரியுதே... அதான் இந்த பாப்பா மேகம்."

அகல்யா அந்த மேகங்களை ஒரு ரசனையோடு பார்க்க ஆரம்பிக்கும்போதே அவைகள் லேசாகக் கலைந்தன.

## 11

"என்ன... நவீனா மேகங்களைக் காட்டினாளா?"

"ஆமா."

"அவளுக்கு இந்த மேகம், பூ, பனி, யூகலிப்டஸ் மரம்

இதெல்லாம் அலுக்காத விசயங்கள். அவ குழந்தை மாதிரியும் பேசுவா, பெரியவங்க மாதிரியும் பேசுவா. நவீனா கேட்கிற கேள்விகளுக்கு பூர்ணிமா பொறுமையாவே பதில் சொல்ல மாட்டா."

"நான் நவீனாகிட்டே அப்படி நடந்துக்கப்போறதில்லை."

"அம்மா..." சன்னல் கம்பிகளைப் பற்றிக்கொண்டு மலை முகட்டைப் பார்த்தபடி நின்றிருந்த நவீனா குரல் கொடுத்தாள்.

"வாம்மா, நவீனாக்குட்டி! இன்னும் நீ குளிக்கலைதானே?"

"ஆமா."

"அம்மா குளிப்பாட்டி விடுறேன் வா."

"சரி."

அகல்யாவோடு நடந்தாள், நவீனா.

ராஜசேகரன் சக்கர நாற்காலியை உருட்டிக்கொண்டு தோட்டத்துப் பக்கம் போக, அங்கே உலாவிக்கொண்டிருந்த கவுடா புன்னகையோடு நெருங்கினார்.

"என்ன, அகல்யாவோடு பேசிட்டீங்களா ராஜசேகரன்?"

"பேசிட்டேன்."

"உங்க நிபந்தனைக்கு ஒத்துகிட்டாளா?"

"சந்தோஷமாகவே ஒத்துகிட்டா."

"ஓ.கே." தோள்களைக் குலுக்கினார், கவுடா.

பகல் பதினொரு மணிக்கு மேல், நவீனா ஆடிக் களைத்த சோர்வில் தூங்கிக்கொண்டிருக்க— அகல்யா, யாருக்கோ போன் செய்துகொண்டிருந்த ராஜசேகரனுக்கு முன்பாய் வந்து நின்றாள். அவன் டயல் செய்வதை நிறுத்திவிட்டு நிமிர்ந்தான்.

"என்ன அகல்யா?"

"நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வரணும்."

"தூங்கிட்டிருக்கிற நவீனா எந்திரிச்சதும் உன்னைத்தான் கேட்பா. அதுக்குள்ளே வந்துடு."

"சீக்கிரமா நான் வந்துடுறேன்."



"காரிலேயே போயிட்டு வந்துடு."

"வேண்டாங்க. நான் நடந்தே போயிட்டு வந்துடுறேன்" சொன்ன அகல்யா, சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு வாசலை நோக்கி நடந்தாள்.

பத்து நிமிட நேரம் நடந்து விடுதிக்கு வந்து சேர்ந்தபோது, சினிமா சம்பந்தப்பட்ட அனைவருமே காலி செய்துகொண்டு போயிருக்க, நாகராஜும் பாபுவும் காத்திருந்தார்கள்.

"என்ன பாபு... எல்லோரும் கிளம்பிட்டாங்களா?"

"ம்... அதைவிடு அகல்யா. உன் விவகாரம் என்னாச்சு?"

"எல்லாம் முடிஞ்சுபோச்சு. இந்த வாரத்துல கல்யாணம்."

"அந்த ஆளு என்னமோ நிபந்தனை கிபந்தனைன்னு சொன்னானாமே... என்னவாம் அது?"

அகல்யா சுற்றும்முற்றும் பார்த்துவிட்டுச் சிரித்தாள்.

"என்ன சிரிக்கிறே?"

"அந்த நிபந்தனையைச் சொன்னா நீங்களும் சிரிப்பீங்க."

"சொல்லு."

"அந்த ஆளு எனக்குத் தாலி கட்டுவானாம். ஆனா, என்கிட்டே புருஷனா நடந்துக்க மாட்டானாம்!"

"உனக்குக் கல்யாணம் எப்ப?"

"இந்த வாரத்துல ஒருநாள்" என்றவள் திரும்பினாள்.

"அதுசரி நாகராஜ் அண்ணே! நம்ம திட்டம் எப்ப ஆரம்பமாகுது; எப்படி ஆரம்பமாகுதுன்னு சொல்லவே இல்லையே?"

"ராஜசேகரன் சாவது ஒரு விபத்து மாதிரிதான் இருக்கணும்."

"இல்லை... நான் ஒரு யோசனையை சொல்லட்டும்மா?"

"என்ன?"

"ஆளை கொஞ்சம் கொஞ்சமாக சாகடிக்கக்கூடிய விஷம் இருக்காமே? அதைக் கொடுத்துட்டா என்ன?"

"நிச்சயமா உன்னால் முடியாது. என்னோட திட்டப்படி

ராஜசேகரனோட மரணம் வீட்டுக்கு வெளியேதான் நடக்கணும். அதுவும் ஒரு சுத்தமான விபத்து மாதிரி."

அகல்யா பேசுவதற்காக வாயைத் திறந்த விநாடி... விடுதி வாசலில் ராஜசேகரனின் கார் வந்து ஓசைப்படாமல் நிற்க, டிரைவர் கோபால்— நவீனாவோடு கீழே இறங்கிக் கொண்டிருந்தான்.

"அம்மா..." நவீனா கத்திக்கொண்டே அகல்யாவை நோக்கி ஓடிவர, அகல்யா கையை உதறிக்கொண்டாள்.

"குட்டிப் பிசாசு, இங்கேயும் வந்துடுச்சே!"

ஓடிவந்து தன் மேல் தாவிய நவீனாவை வாரிக்கொண்டாள், வேண்டாவெறுப்பாய். அவளுக்கு முதன்முதலாய் நவீனா மேல் எரிச்சலாய் வந்தது. இழுத்து வைத்துக்கொண்டு முதுகில் ஓங்கி அறைய வேண்டும் போல் தோன்றியது.

"அகல்யா! நீ புறப்படு" நாகராஜ் சொன்னான்.

நவீனா முறைத்தாள். "எங்கம்மா பேரு அகல்யா இல்லை... பூர்ணிமா! எங்கம்மா பேரை எதுக்காக தப்பா சொன்னே?" கேட்டவள் தன் பிஞ்சுக் கையால் நாகராஜின் வலது தொடையில் ஓங்கிக் குத்தினாள்.

## 12

நவீனா அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த விடியற்காலை நேரம் ஒரு புரோகிதரின் மந்திர உச்சாடனங்களுக்கு மத்தியில், கவுடா முன்னிலையில் ராஜசேகரன், தனக்கு முன்னால் தலை குனிந்து அமர்ந்திருந்த அகல்யாவின் கழுத்தில் பூர்ணிமாவை நினைத்துக்கொண்டே தாலியைக் கட்டினான்.

"சின்ன வயசிலிருந்தே எனக்கு நகை மேல நாட்டமில்லை."

"பூர்ணிமா உனக்கு நேர் எதிர்."

"அவங்களுக்கு நகை பிடிக்குமா?"



"பிடிக்குமாவா? புதுசா எந்த நகையைப் பார்த்தாலும் டனே வாங்கியாகணும். நவீனாவுக்கும் நிறைய நகைங்க ருக்கு."

"அப்படீன்னா இந்தச் சாவிக்கொத்தை பத்திரமா ார்த்துக்கணும்."

"அவசியமில்லை... இந்த வீட்டுல யாருக்குமே திருடும் ழக்கம் கிடையாது."

அகல்யாவின் முகம் 'திருட்டுப் பழக்கம்' என்ற வார்த்தையைக் கேட்டதும் லேசாய் கறுப்படித்தது. அந்த விநாடி, ின்னால் குரல் கேட்டது.

"வணக்கம் அப்பா!" சுவெட்டருக்குள் புசுபுசுவென்று ரம்பியிருந்த நவீனா ஓடிவந்தாள்.

"எனக்கு வணக்கம் கிடையாதா?" அகல்யா கேட்டாள்.

"உனக்கு முத்தம்தான்!" சொன்னவள், அகல்யாவின் ன்னத்தில் மெத்தென்று முத்தமிட்டாள். பிறகு தன் சிறிய நெற்றியை சுருக்கி கண்களை விரித்தாள்.

"பட்டுச்சேலை கட்டி இருக்கியே... எங்கேம்மா போறே?"

ராஜசேகரன் குறுக்கிட்டு சொன்னான்— "அம்மா கோவிலுக்குப் போறா."

ஊட்டி நகர எல்லையைவிட்டு கொஞ்சம் ஒதுங்கி இருந்த அந்த மட்டமான விடுதியில் ஒரு அறைக்குள் எதிரெதிரே உட்கார்ந்தபடி யோசித்துக்கொண்டிருந்தார்கள் நாகராஜும் பாபுவும்.

"அகல்யாவோட கழுத்துல தாலி விழுந்து பதினைஞ்சு நாள் ஓடிப்போச்சு, பாபு. இந்த மாசம் முடியறதுக்குள்ளே ஏதாவது ஒரு திட்டத்தைப் போட்டு, ராஜசேகரனுக்கு மோட்சத்தைக் காட்டணும்."

"அவசரப்படாதே நாகராஜ்! நாம கொஞ்சம் யோசிச்சுத்தான் திட்டத்தைப் போடணும். அவசரப்பட்டா எல்லாமே நாசமாயிடும்."

"அந்த ராஜசேகரன் தினசரி காலையில பத்து மணி பேக்டரிக்கு போறான். அவனது காரை ஒரு மோசமா விபத்துக்கு உட்படுத்தினா என்ன?"

பாபு தன் இடக்கை ஆட்காட்டி விரலால் நெற்றி கிறிக்கொண்டான். "யோசனை சரிதான். ஆனா போலீசுக் சந்தேகம் வராதபடி செய்யணும். அது முடிகிற காரியமா?"

"காரை ராஜசேகரன் ஓட்டினா பரவாயில்லை; டிரை கோபாலும் வர்றானே!"

அப்போது, அறைக் கதவு 'டொக் டொக்' என்று தட் பட்டது. பாபு எழுந்து கதவைத் திறந்தான்.

## 13

அறைக்கு வெளியே விடுதி பையன்.

"என்னடா?"

"சார்! உங்களுக்கு போன் வந்திருக்கு."

"லோக்கல் காலா, வெளியூரா?"

"லோக்கல்தான் சார். யாரோ ஒரு பொண்ணு பேசினாங்க."

"சரி போ... வர்றேன்."

பாபு கீழே இறங்கிப் போனான். அழுக்கான மேசை மே மல்லாத்தி வைக்கப்பட்டிருந்த ரிசீவரை எடுத்துக்கொண் குரல் கொடுத்தான்.

"அலோ..."

"யார் பாபுவா?" அகல்யாவின் குரல் கேட்டது.

"ஆமா."

"ஏதாவது யோசனை பண்ணுனீங்களா?"

"நானும் நாகராஜும் யோசனை பண்ணிட்டுத்தான் இருக்கோம். ஆமா, நீ இப்போ எங்கிருந்து பேசிட்டிருக்கே?"

"வெளியே வந்தேன். பஜார் தபால் ஆபீசுக்கு பக்கத்தில்



கிற போன் பூத்திலிருந்து பேசிட்டிருக்கேன்."

எப்படியிருக்கே?"

காராணியாட்டம் இருக்கேன்."

ந்தக் குழந்தை உன்னை ரொம்பவும் பாடாய்ப் துறாளா?"

அவளோட தொந்தரவுதான் கொஞ்சம் அதிகம்."

ரி இப்ப எதுக்காக போன் பண்ணினே?"

ரு தகவல் சொல்லத்தான்."

ன்ன?"

ாஜசேகரன் நாளைக்குக் காலையில எட்டு மணிக்கு ல் கோயமுத்தூர் புறப்பட்டுப் போறார். சாயந்தரம் மணிக்கு வேலையை முடிச்சுட்டு ஊட்டி வரப்போறார். தகவலை வைச்சு ஏதாவது யோசனை பண்ணுங்களேன்."

அவர் மட்டும்தானே போறார்?"

ஆமா! டிரைவர் வழக்கம் போல் கோபால்தான்."

இது ஒரு நல்ல சந்தர்ப்பம். உபயோகப்படுத்தப் க்கிறோம்."

ஜாக்கிரதை!"

ம்... ம்..." ரிசீவரை வைத்துவிட்டு மாடிப்படி ஏறி அறைக்கு தான், பாபு. கட்டில் சாய்ந்து படுத்து சிகரெட்டை கயாக மாற்றிக்கொண்டிருந்த நாகராஜிடம் விசயத்தைச் ன்னான், அவன் செவிமடுத்துவிட்டுப் புன்னகைத்தான்.

பாபு..."

ம்..."

"திட்டம் தயார்!"

"என்ன திட்டம்?"

"கதவை பூட்டிட்டு வா."

பாபு கதவைச் சாத்திவிட்டு, அவனுக்குப் பக்கத்தில் வந்து கார்ந்தான்.

நாகராஜ் திட்டத்தை நிதானமான குரலில் சொல்லிக்

கொண்டிருந்தான்.

"திட்டம் கச்சிதமா இருக்கு."

"இதை பிசிர் அடிக்காமே நடத்தணும். அது விபத்துதா
போலீஸ் நம்பணும்."

"போன வாரம்தான் அங்கே ஒரு விபத்து நடந்தி
ஆக, போலீஸ் இதையும் விபத்துன்னு நம்பித்தான் ஆகணு

"நாளைக்கு காலையில் ஏழரை மணிக்கே இங்கிருந்து புறப்பட்டுப் போறோம். எட்டு மணிக்கெல்லாம் அ
இருக்கிறோம். எட்டரை மணிக்கெல்லாம் காரிய
முடிச்சுடு. பத்து மணிக்குள் மேட்டுப்பாளையம் போய்
போறோம்."

பாபு தலையாட்டினான்.

## 14

**ம**றுநாள் காலை ஏழரை மணி.

ராஜசேகரன் குளித்துவிட்டு வேகவேகமாய் சாப்பிட்
கொண்டிருந்தான். பக்கத்தில் நின்றிருந்த அகல்யா புன்ன
தாள். "கொஞ்சம் மெதுவாத்தான் சாப்பிடுங்களேன்."

"எட்டு மணிக்கெல்லாம் இங்கிருந்து கிளம்பிடணும்."

"இன்னும் அரை மணி நேரம் இருக்கே?"

"இருந்தாலும் கொஞ்சம் முன்னாடியே கிளம்பிடு
நல்லதில்லையா?"

"நவீனா இன்னும் தூங்குகிறாளே?"

"அவளாக எந்திரிக்கிறவரைக்கும் தூங்கவிடு. எழுப்
டாதே" ராஜசேகரன் சொல்லிக்கொண்டிருக்கும்போ
தொலைபேசி கிணுகிணுத்தது. அகல்யா, ரிசீவரை எடுத்தா
"அலோ" என்றவள் மறுமுனைக் குரலை செவிமடுத்தா

"........"



"அவர் இருக்கார்" சொன்னவள், ரிசீவரை ராஜசேகரனிடம் கொடுப்பதற்காக வயரை விடுத்து, நீட்டிக்கொண்டே வந்து கொடுத்தாள்.

"அலோ... ராஜசேகரன் பேசறேன்."

"நான் ஆடிட்டர் பூக்கண்ணன். வணக்கம், ராஜசேகரன்."

"வணக்கம் ஆடிட்டர் சார். நான் கோயமுத்தூருக்கு கிளம்பிட்டே இருக்கேன்."

"நல்லவேளை! எங்கே புறப்பட்டுட்டீங்களோன்னு நினைச்சேன்."

"ஏன், என்ன விசயம்?"

"மத்தியானம் ரெண்டு மணிக்கு மேல அஷ்டமி வருதாம். அஷ்டமியில் எதுவும் வேண்டாம்ன்னு நினைக்கிறேன்."

"இல்லை! எனக்கு இந்த நல்ல நாள், கெட்ட நாள் இதிலெல்லாம் நம்பிக்கையே இல்லை ஆடிட்டர் சார். என்னோட பூர்ணிமா, எனக்குப் பின்னாடிதான் சாவாள்ன்னு ஒரு பெரிய சோதிடர் பலன் எழுதிக் கொடுத்தார். என்னாச்சு? என் பூர்ணிமாவுக்கு அல்பாயுசு."

"அது வந்து ராஜசேகரன்..."

"இல்லை ஆடிட்டர் சார்... நான் வர்றேன். வேலையை இன்னிக்கே முடிக்கிறோம்."

"ம்... வாங்க. அவங்க தயார்தான்."

"பத்தரை மணிக்குள் உங்க ஆபீசில் இருப்பேன்."

## 15

**கா**ர், வேகமாய்ப் போய்க்கொண்டிருக்க— ராஜசேகரன் கண்ணாடி சன்னலை மேலேற்றிவிட்டு, பத்திரிகையைப் பிரித்து வைத்துக்கொண்டான். டிரைவர் கோபால், மஞ்சள் விளக்குகளைப் பிரகாசமாய் எரியவிட்டு, சாலையில்





...கார்ந்திருந்த பனிப்புகையை விரட்டி காரை செலுத்திக் ...ாண்டிருந்தான்.

இரண்டு வளைவுகள் திரும்பியதும் லேசாய் தலையைத் ...ருப்பி ராஜசேகரனைப் பார்த்து, "சார்..." என்றான்.

"என்ன கோபால்?"

"சாயந்திரம் எத்தனை மணிக்கு சார் கோயமுத்தூரிலிருந்து ...ரும்புவோம்?"

"இராத்திரி எட்டு மணி ஆயிடும்."

"அதுக்கு முன்னாடியே கிளம்ப முடியாதா சார்?"

"ஏன், என்ன விசயம்?"

"இல்லே... எட்டு மணிக்கு திரும்பினா பனி அதிகமா ...ருக்கும். வண்டியை ஓட்ட சிரமமாய் இருக்கும்."

"பார்க்கலாம். வேலை சீக்கிரமா முடிஞ்சா திரும்பிடலாம். ...ல்லேன்னா எட்டு மணிக்கு வரவேண்டியதுதான்" சொன்ன ...ாஜசேகரன், பத்திரிகையை மடித்து வைத்தபடி கேட்டான்.

"கோபால், வீட்டுல அகல்யா எப்படி நடந்துக்கிறா?"

"பூர்ணிமாம்மா மாதிரியே நல்லா நடந்துக்கிறாங்க, சார். ...ம்ம குழந்தைகிட்டே ரொம்பவும் ஒட்டுதலா இருக்காங்க."

"நவீனா முன்ன மாதிரியே தெளிவா பேசுறா, இல்லே?"

"ஆமா சார்."

கார், பாறையை ஒட்டிய அந்தக் குறுகிய வளைவில் திரும்ப— ...பனிப்புகையில் சாலையோரமாய் ஒரு போலீஸ் ஜீப் நிற்பது தெரிந்தது.

அருகே ஒரு இன்ஸ்பெக்டர். இரண்டு காவலர்கள். காவலர் ஒருவர் முன்னால் வந்து, காரை நிறுத்தச்சொல்லி கையை அசைத்தார். கார் வேகம் குறைந்து, நின்றது. இன்ஸ்பெக்டர், காரை நோக்கி வந்தார்.

மேட்டின் மேல் ஏறி நின்று பார்த்துக்கொண்டிருந்த பாபு வேகவேகமாய் கீழே இறங்கி வந்தான்.

"நாகராஜ்! கார் வருது."

"அது ராஜசேகரன் கார்தானா?"

"அப்படித்தான் தெரியுது."

"சரி, தயாரா இரு. சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கா?"

"ம்... இருக்கு."

இருவரும் சாலையோரமாய் நின்றுகொண்டு உள்ள கைகளைத் தேய்த்து, குளிரை தாஜா செய்தபடி காத்திருக்க கார் என்ஜினின் 'ர்ர்ர்ர்' சத்தம் கேட்டது. அந்தச் சத்த கொஞ்சம் கொஞ்சமாய் உயர்ந்து ஒரு ஆரன் சத்தத்தோடு கலக்க, காரின் முகம் சாலை வளைவில் பனிப்புகையில் தெரிந்தது.

நாகராஜ் கையை சொடுக்கினான்.

"இது ராஜசேகரன் கார்தான்."

"நிறுத்திடலாமா?"

"ம்..."

பாபு, சாலையின் மையத்துக்குப் போய் கையை அசைக்க கார் வேகம் குறைந்து பக்கத்தில் வந்து நின்றது. நின்ற காருக்குள் பார்வையைப் போட்ட நாகராஜும் பாபுவும் அதிர்ந்து போனார்கள்.

ராஜசேகரனுக்குப் பக்கத்தில் அந்த இன்ஸ்பெக்டர் உட்கார்ந்திருந்தார். நாகராஜையும் பாபுவையும் அடையாளம் கண்டு ராஜசேகரன் புன்னகைத்தான்.

"நாகராஜ்! என்ன... இங்கே நின்னுட்டிருக்கே?"

"ச...சார்... வந்து வந்து..."

பாபு குறுக்கிட்டு சொன்னான். "மேட்டுப்பாளையம் போறதுக்காக 'பைக்'கில் புறப்பட்டோம். 'பைக்' ரிப்பேராயிடுச்சு. குன்னூருக்கு போய் ஒரு மெக்கானிக்கை கூட்டிட்டு வர்றதுக்காக வண்டி ஏதாவது கிடைக்குமான்னு பார்த்துட்டிருந்தோம்."

"பைக் எங்கே?"

"அதோ..." கொஞ்சம் தள்ளி மரத்துக்குக் கீழே நின்றிருந்த



பைக்கை காட்டினான், பாபு.

"குன்னூர்தானே போகணும்?"

"ஆமா."

"யாராவது ஒருத்தர் காரில் வாங்க.. குன்னூரில் இறங்கிக்கங்க. மெக்கானிக்கை பஸ்சில் கூட்டிட்டு வந்துடுங்க."

நாகராஜும் பாபுவும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள். ராஜசேகரன் சிரித்தான்.

"என்ன, நாகராஜ் முழிக்கிறே?"

"நான் வ...வர்றேன் சார்."

"வா... முன்னாடி ஏறிக்க."

டிரைவர் கோபால், காரின் முன் இருக்கைக் கதவைத் திறந்துவிட, நாகராஜ் தயக்கமாய் உள்ளே போனான். பாபுவிடம் தலையசைப்பது போல் விடை பெற்றுக்கொண்டதும், கார் புறப்பட்டது. சில விநாடி மவுனத்திற்குப் பின் ராஜசேகரன் கேட்டான்.

"இங்கே பக்கத்துல ஏதாவது சூட்டிங்கா நாகராஜ்?"

"ஆ... ஆமா சார்."

"பின்னே ஏன் வீட்டுப் பக்கம் நீ வரலை?"

"ரெண்டு நாள் கழிச்சு வரலாம்னு இருந்தேன், சார். அகல்யா எப்படி சார் இருக்கா?"

"நல்லா இருக்கா."

"குழந்தை நவீனாவுக்கு குணமாயிடுச்சா சார்?"

"ம்... நல்லா தெளிவா பேசுறா."

"நீங்க... எங்கே சார் காரில் கிளம்பிட்டீங்க?"

"கோயமுத்தூரில் ஒரு வேலை. நானே போகவேண்டிய நிலைமை. அதான் கிளம்பிட்டேன்."

"உங்ககூட இன்ஸ்பெக்டர் இருந்ததைப் பார்த்ததும் அகல்யா சம்பந்தமாய் ஏதாவது பிரச்சினையோன்னு நினைச்சுட்டேன் சார்."

"இன்ஸ்பெக்டரும் ஏறக்குறைய உன் நிலைதான்.

மேட்டுப்பாளையம் போகவேண்டிய போலீஸ் ஜீப்
சொல்லிவிட்டு ராஜசேகரன் சிரித்தான்.

கார் நிதான வேகத்தில் மலைப் பாதையில்
கொண்டிருக்க, நாகராஜ் மனசு பூராவும் கனத்த ஏமா

'ராஜசேகரன் சாகக்கூடிய வாய்ப்பு எவ்வளவு சு
கை நழுவிப் போய்விட்டது?'

'இந்த இன்ஸ்பெக்டர் மட்டும் வராமல் இருந்திருந்
யோசிப்பில் நிமிடங்கள் கரைய,

குன்னூர் வந்தது.

கோபால், பேருந்து நிலைய வாசலில் காரை நிறுத்தி
நாகராஜ் இறங்கிக்கொண்டு கைகூப்பினான்.

"ரொம்ப நன்றி சார்."

"நன்றியெல்லாம் இருக்கட்டும், வீட்டுப் பக்க
நாகராஜ்."

"வர்றேன் சார்."

நாகராஜ் மறுபடியும் கைகூப்ப, கார் நகர்ந்தது. சில நி
களில் பைக்கில் வந்து சேர்ந்தான் பாபு. நாகரா
கேலியான குரலில் கேட்டான்.

"என்ன நாகராஜ்... அந்த நொண்டிப் பயடு
இன்ஸ்பெக்டரும் வருவாருன்னு நீ சொல்லலையே?"

"அந்த இன்ஸ்பெக்டர் மேட்டுப்பாளையம் வரை டே
ஆசாமியாம். அந்த ராஜசேகரனுக்கு ஆயுள் கெட்டி.. அத
இராத்திரி எட்டு மணி வரைக்கும்."

"நாகராஜ்! நீ என்ன சொல்றே?"

"கோயமுத்தூர் போனவன் வேலையை முடிச்
எட்டு மணிக்குத்தான் ஊட்டி திரும்புவான்னு அக
சொல்லியிருக்கா."

"அதனால்?"

"இராத்திரி நம்ம திட்டம் மறுபடியும் அமலுக்கு வ
அதே இடத்துல காரை நிறுத்துறோம். போட்ட திட்ட



பிசிறில்லாமல் துல்லியமா நிறைவேத்துறோம்."

"அதுவரைக்கும்..."

"குன்னூரில் ஓட்டல் இல்லையா? ஏதாவது ஒரு ஓட்டலில்
அறை எடுப்போம். சாயந்திரம் ஆறு மணி வரைக்கும் போதை
யில் மிதந்துட்டு, அறையைக் காலி பண்ணிட்டு ராஜசேகர
னுக்கு கபால மோட்சம் தர்ற இடத்துக்குப் போயிடுவோம்."

"நாகராஜ்..."

"ம்..."

"இந்தத் திட்டத்தை நிறுத்திட்டா என்ன?"

"ஏன்?"

"இன்ஸ்பெக்டர் பார்வையில் பட்டுட்டோமே?"

"பட்டா என்ன?"

"அவருக்கு ஏதும் சந்தேகம் வராதா?"

"சந்தேகம் எப்படி வரும்? இதை விபத்து மாதிரிதானே
பண்ணப்போறோம்."

"எதுக்கும் யோசி."

"யோசிச்சுப் பார்க்கவேண்டிய அவசியமே இல்லை, பாபு.
ராஜசேகரனை தீர்க்கிறதுக்கு இதைவிட்டா வேறு வாய்ப்பு
ஒரு மாமாங்கத்துக்குக் கிடைக்காது."

"ராஜசேகரன் இன்னிக்கே ஊட்டி திரும்புறது நிச்சயம்
தானே?"

"சர்வ நிச்சயம். அந்தக் குழந்தையை விட்டுட்டு அவனால்
இருக்க முடியுமா என்ன?"

**மே**ட்டுப்பாளையத்தில் 'நன்றி' கூறி, இன்ஸ்பெக்டர்
இறங்கிக்கொண்டார். அங்கிருந்து அரை மணி நேர பயணத்
தில் கோவையைத் தொட்ட கார், ஆர்.எஸ். புரத்தில் இருந்த
ஆடிட்டரின் வீட்டு வாசலில் நின்றபோது மணி பத்தரை.

ஆடிட்டர், வாசலிலேயே காத்திருந்தார்.

"ரெண்டாவது வணக்கம் ராஜசேகரன்."

"வணக்கம். 'பார்ட்டி' வந்துட்டாங்களா?"

"வந்து, ஓட்டலில் காத்திருக்காங்க."

"எந்த ஓட்டல்?"

"கார்ல ஏறுங்க... போகலாம்" ஆடிட்டர் வரவேற்பறை... இருந்த சூட்கேசை எடுத்துக்கொண்டு காரை நெருங்கி, கதவு... கைப்பிடியைப் பற்றிய அதே விநாடி—

ஆடிட்டரின் மனைவி உள்ளேயிருந்து ஓடிவந்தா... "என்னங்க! ஊட்டியிலிருந்து போன் வந்திருக்கு."

"ஊட்டியிலிருந்தா?" ராஜசேகரன் திகைத்தா... "அநேகமாய் அந்த போன் எனக்காகத்தான் இருக்கு... ஆடிட்டர் சார், பேசறது யாரு— என்ன விவரம்ங்கிற... கேட்டுட்டு வந்துடுங்களேன்."

ஆடிட்டர் உள்ளே ஓடினார்.

இரண்டு நிமிடம் கழித்து திரும்பி வந்தார். மு... இருட்டுக்குள் விழுந்திருந்தது.

"போன்ல யாரு?"

"உங்க பாக்டரி மானேஜர்."

"என்னவாம்?"

"உங்க மனைவி அகல்யா திடீர்ன்னு இரத்த இரத்... வாந்தி எடுத்தாங்களாம். உடனே கொண்டுபோய் ஆஸ்பத்தி... யில் சேர்த்திருக்காங்களாம்."

ராஜசேகரனின் முகத்தில் ஒரு அதிர்ச்சிப் பிரளய... கண்கள் மூடித் திறந்தன.

"ஆடிட்டர் சார்..."

"என்ன?"

"அந்த 'டாக்குமென்ட்' வேலையை இன்னொ... நாளைக்குப் பார்த்துக்கலாம். நான் உடனே ஊட்... கிளம்புறேன். டாக்டர் கவுடாவுக்கு நீங்க போ... பண்ணி நான் வந்திட்டிருக்கிற விவரத்தைச் சொல்லிடு... ப்ளீஸ்..."



ஆடிட்டர் திகைக்க, ராஜசேகரன் நகர்ந்து கார் பின் இருக்கையில் அயர்ச்சியாய் சாய்ந்துகொண்டான்.

"கோபால்! காரை விரட்டு."

# 16

**கா**ர் இறக்கை கட்டிக்கொண்ட மாதிரி பறந்து— மூன்று மணி நேரப் பயணத்தில் ஊட்டியை மறுபடியும் தொட்டு— கவுடாவின் மருத்துவமனை வாசலில் வந்து நின்றபோது— நேரம் ஒன்று முப்பது.

டிரைவர் கோபால், காரின் மேல் இருந்த சக்கர நாற்காலியை கீழே இறக்கி— கதவுக்குப் பக்கத்தில் நிறுத்தி— ராஜசேகரனை நாற்காலிக்கு மாற்றி— உள்ளே தள்ளிக்கொண்டு போனான்.

மருத்துவர் கவுடா, வராந்தாவில் வேகவேகமாய் வந்து எதிர்கொண்டார். "வாங்க ராஜசேகரன்!"

"அகல்யா இப்போ எப்படி இருக்கா டாக்டர்?"

"இப்பத்தான் நினைவு திரும்பியிருக்கு."

"பார்க்கலாமா, டாக்டர்?"

"வாங்க."

கவுடா உள்ளே கூட்டிக்கொண்டு போனார். அகல்யா இருந்த அறைக்குள் நுழைந்தார். குளுகோசை துளித்துளியாய் கண்ணாடி டியூப்பில் வாங்கிக்கொண்டு படுத்திருந்த அகல்யா, சக்கர நாற்காலியின் "கிரீச்' சத்தம் கேட்டு கண்களை மலர்த்தினாள். நெற்றி வேகமாகச் சுருங்க, ஆச்சரியப்பட்டாள்.

"நீ... நீங்க...?"

ராஜசேகரன் கையமர்த்தினான். "அகல்யா! உனக்கு இப்போ எப்படி இருக்கு?"

"ப...பரவாயில்லை! ஆ...ஆமா... நீ...நீங்க கோயமுத்தூர் போகலையா?"

"போயிட்டு வந்துட்டேன்."

"அதுக்குள்ளே வேலை முடிஞ்சுடுச்சா?"

"முடியலை. 'டாக்குமென்ட்' வேலையை இன்னொரு நாளைக்கு வைச்சுக்கலாம்ன்னு சொல்லிட்டு வந்துட்டேன்."

அகல்யா, ராஜசேகரனையே இமைக்காமல் பார்த்தாள்.

"என்ன பார்க்கிறே?"

"அந்த வேலை ரொம்பவும் முக்கியமான வேலைன்னு சொன்னீங்க?"

"அதைவிட நீ முக்கியம் இல்லையா?"

அகல்யாவின் இதயம் சின்னதாய் அதிர்ந்துபோக, ராஜசேகரனை நேராய் பார்க்க துணிச்சல் இல்லாமல் கண்களைத் தாழ்த்திக்கொண்டாள்.

"அகல்யா..."

"ம்..."

"உனக்கு இப்ப என்ன பண்ணுது?"

"எனக்கு ஒண்ணுமேயில்லை... திடீர்ன்னு வீட்டுக்கு வர்ற விருந்தாளி மாதிரி... எப்பவாவது வர்ற இரத்த வாந்திதான். நான் வாந்தி எடுத்ததும் வேலைக்காரி மாரம்மா பயந்து போய் டாக்டருக்கும், பாக்டரி மானேஜருக்கும் போன் பண்ணிட்டா."

"இது சாதாரணம் இல்லை! அகல்யா, உன்னோட உடம்பை உடனே கவனிச்சாகணும்!" சொன்ன ராஜசேகரன், கவுடாவிடம் திரும்பினான்.

"டாக்டர்! அகல்யாவை கோயமுத்தூரில் ஏதாவது பெரிய ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்ப் பார்க்கலாமா?"

"கோயமுத்தூர் கொண்டு போகவேண்டியதில்லை. 'ஸ்பெஷலிஸ்ட்' யாரையாவது வரவழைச்சாலே போதும்."

"உடனே வரவழையுங்க டாக்டர்! ஒருத்தரில்லை, எவ்வளவு பேரை வேணுமின்னாலும் கூப்பிடுங்க டாக்டர்."

"உங்க யோசனையைக் கேட்டுட்டுதான் டாக்டர்களை 'கான்டாக்ட்' பண்ணலாம்ன்னு இருந்தேன்" சொன்ன



மருத்துவர்– அறையிலிருந்து வெளியேற... அகல்யா, ராஜசேகரனின் கையை நடுக்கமாய்ப் பற்றிக்கொண்டாள்.

"இதெல்லாம் வேண்டாங்க! எனக்கு தானா சரியாயிடும்."

"எப்படி சரியாகும்?"

"ஓய்வு எடுத்தா போதுங்க."

"இதோ பாரு அகல்யா. இரத்த வாந்தி சாதாரண விசயமில்லை. உன்னை குணப்படுத்துறதுதான் என்னோட முதல் வேலை. அப்புறம்தான் எல்லாமே! ஆமா, நவீனா எங்கே? வீட்டுலதானே இருக்கா?"

"ஆமா."

"நீ ஆஸ்பத்திரியில் இருக்கிறது அவளுக்குத் தெரியாதா?"

"தெரியாது. டாக்டர் கவுடா, சொல்ல வேண்டாம்ன்னு சொல்லிட்டார்."

"இந்நேரம் அவ வீட்டை ரெண்டு பண்ணியிருப்பாளே?"

"இப்பெல்லாம் அவள் அதிகமா முரண்டு பண்ணுறதில்லை."

நர்சு உள்ளே வந்தாள்.

"சார், உங்களை டாக்டர் வரச்சொன்னார்."

"கோயமுத்தூர் டாக்டர்களை 'கான்டாக்ட்' பண்ணிட்டாரா?"

"பண்ணிட்டிருக்கார்."

"இரு அகல்யா, வந்துடுறேன்" சொன்ன ராஜசேகரன், சக்கர நாற்காலியை உருட்டிக்கொண்டு– நர்சை பின்தொடர்ந்து போனான்.

மருத்துவர் கவுடா தன் அறைக்குள் சுழல் நாற்காலியில் தளர்வாய் உட்கார்ந்து, நெற்றிப்பொட்டை கவலையாய் ஆட்காட்டி விரலால் தட்டிக்கொண்டிருந்தார்.

"டாக்டர்..."

"வாங்க ராஜசேகரன்."

"டாக்டர்களுக்கு போன் பண்ணிட்டீங்களா?"

“இன்னும் இல்லை.”

“ஏன்?”

“அதுக்கு முன்னாடி உங்ககூட கொஞ்சம் பேசணும்.”

நெற்றியைச் சுருக்கினான், ராஜசேகரன். “என்ன பேசணும் டாக்டர்.”

“அகல்யாவோட உடல்நிலையைப் பற்றி.”

“அவளுக்கென்ன? சாதாரணமானதுதானே?”

“என் கையில் இருக்கிற மருத்துவ அறிக்கை அப்படி சொல்லலை ராஜசேகரன்.”

“டாக்டர்...”

“அகல்யாவோட நோய் போன தடவை தன்னைக் காட்டிக்காமல் திருட்டுத்தனம் பண்ணியிருக்கு. இந்தத் தடவை தன்னை அடையாளம் காட்டிடுச்சு.”

“டாக்டர்!”

“ஆமா... அகல்யாவுக்கு புற்றுநோய். கருப்பையில் புற்று. அதுவும் அதிகம் பரவிவிட்ட நிலை.”

ராஜசேகரன் நெற்றியில் வியர்வை பொடிந்தது. கவுடா மேசை மேலிருந்த அறிக்கையைக் காட்டிக்கொண்டே சொன்னார்: “இந்த அறிக்கை போன நிமிடம்தான் என்னோட மேசைக்கு வந்தது. அகல்யாவுக்கு புற்று என்கிற விசயம் சரியான அதிர்ச்சி. நான் இதை எதிர்பார்க்கலை.”

“டாக்டர்... இதை குணப்படுத்த முடியாதா?”

“வாய்ப்பு 50 சதம்தான். ‘லேசர்’ சிகிச்சை வாரத்துக்கு ரெண்டு தடவை எடுத்துக்கணும். இந்த வகைப் புற்று, உடம்பின் மற்ற உள் உறுப்புகளுக்குப் பரவிவிட்டால்தான் ரொம்ப ஆபத்து!”

“டாக்டர்! என்ன செலவானாலும் பரவாயில்லை. அகல்யா குணமாகணும். அவளை இந்தியாவில் இருக்கிற எந்த பெரிய ஆஸ்பத்திரிக்கு வேணும்னாலும் கொண்டுபோகலாம்.”

கவுடா கசப்பாய்ப் புன்னகைத்தார். “அகல்யாவை



“உங்க மருமகள் உங்களை கொள்ளைக்காரின்னு திட்டுறாளே, எதுக்கு?”

“ஐந்து லட்சம் வரதட்சணை வாங்கினதை குத்திக் காட்டுறா!”

—அ.ப.ஜெ. சசிகலா, சியாளம்.





“டாக்டர், பல் பிடுங்க நூறு ரூபாய்தானே. எதுக்கு ஆயிரம் ரூபாய் கேட்கிறீங்க?”

“உங்க பல்லைப் பார்த்துட்டு, ஒன்பது பேர் ஓடிப்போயிட்டாங்க. அதான்!”

—வெ. ஜானகி, அய்யம்பேட்டை.

“மனைவியை ஏன் சிஸ்டர்னு கூப்பிடுறே?”

“அவ... ஒரு நர்ஸ்!”

—ஜெயா.



இந்தியாவில் இருக்கிற எந்த ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனாலும் ஒரே சிகிச்சைதான் கொடுக்க முடியும், ராஜசேகரன். அந்த சிகிச்சையை என்னோட ஆஸ்பத்திரியில் கொடுத்தே அவளை குணமாக்க முடியும்."

"டாக்டர்! உங்களுக்கு எப்படி தோணுதோ அப்படி செய்யுங்க. எனக்கு அகல்யா குணமானா போதும்."

கவுடா, அந்த மருத்துவ அறிக்கையை மேசைக்குள் தள்ளிக்கொண்டே சொன்னார்: "இந்த விசயம் யாருக்கும் தெரிய வேண்டாம், ராஜசேகரன். முக்கியமா அகல்யாவுக்கு தெரியக்கூடாது! அவளுக்கு 'அல்சர்'ன்னு சொல்லித்தான் சிகிச்சையை ஆரம்பிக்கணும்."

அதைக் கேட்ட ராஜசேகரன் உஷ்ணப் பெருமூச்சுவிட்டு, கவலையாய் நெற்றியைப் பிடித்துக்கொண்டான்.

**நா**கராஜும் பாபுவும் ஊட்டி ஓட்டலுக்கு எரிச்சலாய்த் திரும்பினார்கள். ஆத்திரத்தோடு ஒரு அரை விஸ்கி பாட்டிலை சோடா கலக்காமல் 'ரா'வாகவே குடித்துவிட்டு சிகரெட்டுகளை பற்றவைத்துக்கொண்டார்கள்.

"ஆச்சரியமா இருக்கு" பாபு பொருமினான்.

"அந்த நொண்டிப்பய மத்தியானமே திரும்பியிருக்கான் போலிருக்கு."

"பொழைப்பை கெடுத்துட்டு நாமதான் அந்தக் குளிரில் காத்து இருந்தோம்."

"போகும்போதும் தப்பிச்சுட்டான். வரும்போதும் தப்பிச்சுட்டான்."

"போட்ட முதல் திட்டமே பாழ்!"

"இருக்கட்டும்; இன்னொரு சந்தர்ப்பம் கிடைக்காமல போயிடும்?"

"இதுமாதிரியான சந்தர்ப்பம் இனிமே எப்ப கிடைக்கும்ன் தெரியலையே? அந்த நொண்டிப்பய அவ்வளவு சீக்கிரத்தி வீட்டைவிட்டு கிளம்பமாட்டானாமே?"



ராணி முத்து ஏப்ரல் 1, 2005.

"பாபு..."

"என்ன?"

"நீ கீழே போய் அகல்யாவுக்கு போன் பண்ணிப் பா

"நான் போன் பண்ணிப் பேசுறதைக் காட் நீ பேசிடுறது நல்லது. ராஜசேகரன் ஒருவேளை ரி எடுத்துட்டா நீ எதையாவது பேசி சமாளிச்சிடலாம்."

"அதுவும் சரிதான்" நாகராஜ், உள்ளே குவா விஸ்கியை தள்ளியிருந்தாலும் தள்ளாடாமல் நடந்து மாடிப்படிகளில் இறங்கி– 'செக்ஸ்' புத்தகமொ படித்துக்கொண்டிருந்த விடுதி மேலாளருக்கு ஒரு புன்னகையைக் கொடுத்துவிட்டு, தொலைபே தொட்டான். ராஜசேகரனின் வீட்டு எண்ணை போ மறுமுறையில் மணி ஒலித்தது.

ரிசீவர் எடுக்கப்பட்டது.

"அலோ..." பெண் குரல்.

"யாரு? அகல்யாவா?"

"இல்லீங்க. நான் வீட்டு வேலைக்காரி. நீங்க யாரு பேசுற

"அகல்யா இருந்தா பேசச்சொல்லு."

"அவங்க ஆஸ்பத்திரியில் இருக்காங்களே?"

"என்னது, ஆஸ்பத்திரியா?"

"ஆமாங்க. இன்னிக்கு காலையில் திடீர்னு அ களுக்கு உடம்பு சவுகரியமில்லாமல் போயிடுச்சு."

"அய்யா இருக்காரா?"

"இருக்காரு."

"அவரை கொஞ்சம் பேசச்சொல்லு."

"உங்க பேரு?"

"நாகராஜ்னு சொல்லு."

சில விநாடி மவுனத்திற்குப் பிறகு ரிசீவரில் ராஜசேகரனின் குரல் கரகரத்தது.

"என்ன நாகராஜ்?"



"அகல்யாகிட்டே பேசுறதுக்காக போன் பண்ணினேன் சார்... ஆனா, அகல்யா ஆஸ்பத்திரியில் இருக்கிறதா வேலைக்காரப் பொண்ணு சொல்லிச்சு."

"ஆமா. அகல்யா ஆஸ்பத்திரியில்தான் இருக்கா."

"உடம்புக்கு என்ன சார்?"

"அந்த பழைய பிரச்சினைதான். இரத்த வாந்தி."

"இப்போ எப்படியிருக்கு சார்?"

"பரவாயில்லை. கொஞ்ச நாள் ஆஸ்பத்திரியில் இருந்து சிகிச்சை எடுக்கவேண்டியிருக்கும். நீ அகல்யாவைப் பார்க்க விரும்பினா கவுடா ஆஸ்பத்திரிக்குப் போய்ப் பாரேன்."

"சரி சார். இப்பவே போறேன்! நீங்க கோயமுத்தூரிலிருந்து எப்ப சார் திரும்பினீங்க?"

"மத்தியானமே."

நாகராஜ், ரிசீவரை வைத்துவிட்டு தாடையைத் தடவிக் கொண்டே மாடிப்படிகளில் யோசனையாய் ஏறினான். அறைக்குள் நுழைந்தான்.

பாபு கேட்டான்:

"என்ன நாகராஜ், பேசினியா?"

"ம்..."

"ஏன் என்னவோ மாதிரி இருக்கே?"

"ராஜசேகரனை நாம தீர்க்கிறதுக்கு முந்தி அகல்யா போய்ச் சேர்ந்துடுவா போலிருக்கே?"

## 17

"**நா**கராஜ்! நீ என்ன சொல்றே..." பாபு தவிப்பாய்க் கேட்க, நாகராஜ் 'உச்' கொட்டினான்.

"அகல்யா மறுபடியும் இரத்த வாந்தி எடுத்து ஆஸ்பத்திரியில் இருக்கா. அடிக்கடி இப்படி ரத்த வாந்தி எடுத்துகிட்டே

இருந்தா, சீக்கிரமே பரலோகம் போயிடுவா போலிருக்கே."

"உன்கூட போனில் பேசினது யாரு?"

"ராஜசேகரன்."

"அகல்யா, ஆஸ்பத்திரியிலிருந்து என்னிக்கு இரு வாளாம்?"

"கொஞ்ச நாள் சிகிச்சை எடுக்கணுமாம். அகல்யாவை பார்க்க விரும்பினா போயிட்டு வரும்படி ராஜசேகர சொன்னான்."

"போய்ப் பார்த்துட்டு வரலாமா?"

"ம்... கிளம்பு."

இருவரும் விடுதி அறைக் கதவைச் சாத்தி பூட்டிக்கொண்டு மாடிப்படிகளில் இறங்கி வெளியே வந்தனர். ஒரு ஆட்டோ பிடித்தார்கள். புறப்பட்டார்கள்.

அந்த முன்னிரவு நேரத்தில் கவுடாவின் மருத்துவமனை நிசப்தமாய் இருந்தது. நாகராஜும், பாபுவும் மௌனமாக வராந்தாவில் நடந்து– எதிர்ப்பட்ட நர்சிடம் விசாரித்தார்கள்.

"அகல்யா எந்த அறையில் இருக்கா...?"

"மாடியில் 'ஸ்பெஷல் கேர்' யூனிட்டில்."

"டாக்டர் கவுடா இருக்காரா?"

"அவர் வீட்டுக்குப் போயிட்டார். இனிமே காலையில் ஆறு மணிக்குத்தான் வருவார்."

"நாங்க அகல்யாவைப் பார்க்கலாமா?"

"தாராளமா... ஆனா, அகல்யாவை அதிகமா பேச வைச்சு தொந்தரவு பண்ணிடாதீங்க!"

"பார்த்து ரெண்டு வார்த்தை பேசிட்டு அஞ்சு நிமிடத்துல திரும்பிடுவோம்" சொன்னவர்கள் மாடியிலிருந்து இறங்கி 'ஸ்பெஷல் கேர்' யூனிட்டை நோக்கி நடந்தார்கள்.

"பாபு..." நாகராஜ் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு கிசுகிசுத்தான்.

"ம்..."



"அகல்யா வீடு திரும்புறதுக்குள்ளே துல்லியமா திட்டம் போட்டு ராஜசேகரனை முடிக்கணும். இந்த சந்தர்ப்பத்துல ராஜசேகரனை முடிச்சா, அகல்யா மேல யாருக்கும் சந்தேகம் வராது."

"முதல் குறி தப்பிடுச்சு... ரெண்டாவது குறியையாவது ஒழுங்கா வைக்கணும்!"

"யோசிக்கலாம்... அகல்யா எப்படியும் ஒரு வாரம் பத்து நாள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை எடுத்துக்கப்போறா... அதுக்குள்ளே யோசிச்சு ஒரு திட்டத்தைக் கூர் தீட்டிடலாம்."

இருவரும் 'ஸ்பெஷல் கேர்' யூனிட்டுக்குள் நுழைந்தார்கள். 'அகல்யா' என்று பெயர் சொருகியிருந்த கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே போனார்கள். அகல்யா கண்களைத் திறந்திருந்தாள். உதடுகள் லேசாய் அசைந்தன.

"நாகராஜ்! பாபு!!"

"என்ன அகல்யா... மறுபடியும் இரத்த வாந்தியா?"

"ம்... இந்தத் தடவை அதிகம்."

இருவரும் கட்டிலை நெருங்கி– அங்கிருந்த நாற்காலிகளில் பக்கம் பக்கமாய் உட்கார்ந்தார்கள்.

"இப்ப உடம்பு எப்படி இருக்கு?"

"பரவாயில்லை! ஆமா, நான் ஆஸ்பத்திரியில் இருக்கிறது உங்களுக்கு எப்படி தெரிஞ்சது?"

"உன்கூட பேசுறதுக்காக வீட்டுக்கு போன் பண்ணினேன். ராஜசேகரன் ரிசீவரை எடுத்துப் பேசினார். அவர்தான் நீ ஆஸ்பத்திரியில் இருக்கிறதாகச் சொன்னார்."

"உங்க திட்டம் தோல்வி போலிருக்கே?"

"ஆமா! ராஜசேகரன் உன் கழுத்துல தாலி கட்டின நேரம் ஆயுள் கெட்டி!"

"நாகராஜண்ணே!"

"ம்..."

"எம் மனசுல ஒரு குழப்பம்."

"என்ன, சொல்லு."

"அவரை சாகடிக்கணுமா?" அகல்யா அப்படி கேட்டதும் நாகராஜும், பாபுவும் ஒருத்தரையொருத்தர் குழப்பமாய்ப் பார்த்துக்கொண்டார்கள்.

பாபு, அகல்யாவிடம் திரும்பினான்.

"என்ன அகல்யா... பேச்சு ஒரு மாதிரியா இருக்கு?"

"அ...அவரை தீ...தீர்த்துக்கட்டாமல் சொத்து நம்ம கைக்கு வரும்படி பண்ண முடியாதா?"

"எப்படி முடியும்ன்னு நினைக்கிறே?"

"யோசிச்சா ஏதாவது ஒரு வழி தோணாமலா போயிடும்?"

"இதோ பாரு அகல்யா! தலையைச் சுற்றி மூக்கைத் தொடுற விவகாரமெல்லாம் இந்த விசயத்துல இருக்கவே கூடாது... ஒரு காரியத்தை நினைச்சா 'பளிச்'ன்னு செஞ்சு முடிச்சுடணும்! உனக்கு திடீர்ன்னு இப்ப என்னாச்சு?"

"ஒ...ஒண்ணுமில்லை, நாகராஜ் அண்ணே! அ...அவரைப் பார்த்தாலே பாவமா இருக்கு. அதான்..."

"அந்த பச்சாத்தாபமெல்லாம் உன் மனசுக்குள் வரவே கூடாது, அகல்யா! ஆட்டை வெட்டுறவன் காருண்யம் பார்த்தா, அவன் காசு சம்பாதிக்க முடியுமா?"

"அண்ணே! நான் சொன்னது யோசனைதான்... இரத்தத்தை சிந்த வைக்காமல் ஒரு காரியத்தை பண்ணினா நமக்கும் நல்லதுதானே?"

"ராஜசேகரன் சாகாமல் நம்ம கைக்கு சொத்து வர்றதுங்கிறது சாத்தியமே இல்லை. அகல்யா! நீ ஆஸ்பத்திரியில் இருந்து சிகிச்சையை முடிச்சுகிட்டு வீட்டுக்குப் போறதுக்கு முன்னாடி நாங்க ராஜசேகரனை சத்தமில்லாமே சாய்க்கிறோம்."

அறைக்கு வெளியே நடைச் சத்தம் கேட்டது.

மூன்று பேருமே வாயை கப்பென்று சாத்திக்கொண்டார்கள். சில விநாடிக்குப் பின் கதவைத் திறந்துகொண்டு நர்சு உள்ளே வந்தாள்.



"அகல்யாவுக்கு இடுப்புல ஊசி போடணும். நீங்க கொஞ்சம் வெளியே இருக்கிங்களா?"

நாகராஜ், அகல்யாவிடம் குனிந்தான். "அகல்யா! நாங்க புறப்படுறோம். முடிஞ்சா நாளைக்கு இராத்திரி வர்றோம்."

"நான் சொன்னதை கொஞ்சம் யோசிங்கண்ணே!"

"அது சாத்தியமே கிடையாது! வரட்டுமா? உடம்பை நல்லபடியா பார்த்துக்க... கண்டதையும் போட்டு மனசைச் குழப்பிக்காதே!"

அகல்யா தலையாட்டினாள்.

நாகராஜும், பாபுவும் அறையிலிருந்து வெளிப்பட்டார்கள் மருத்துவமனையைத் தாண்டி—சாலைக்கு வரும்வரை மவுனம் காத்த இரண்டு பேரில், முதலில் பாபு வாயைத் திறந்தான்—

"அகல்யாவோட பேச்சை கவனிச்சியா நாகராஜ்?"

"கவனிச்சேன்."

"அவ மனசுக்குள் பரிதாப உணர்வு பூந்துடுச்சு."

"எப்படி திடீர்ன்னு?"

"கழுத்துல தாலி தொங்குதுல்ல? உறுத்தி இருக்கும்!"

"அந்த உறுத்தல் அதிகமாகிறதுக்கு முன்னாடி அவள் கழுத்தில் இருக்கிற தாலியைக் கழட்ட வைக்கணும்."

"அதுவும் இன்னும் ஒரு வாரத்துக்குள்ளே!"

"என்ன செய்யலாம்?"

"ஒரு அரை பாட்டில் விஸ்கி வாங்கிட்டு அறைக்குப் போகலாம்... தீர்த்தத்தை வயிதத்துக்குக் காட்டினா, மூளை ஏதாவது ஒரு யோசனையை எடுத்துக் கொடுக்கும்."

மறுநாள் காலை ஆறு மணி...

நர்சு உதவியால் 'டவல்பாத்' எடுத்து, வேறு சேலைக்குள் நுழைந்து—நெற்றிக்கு குங்குமம் இட்டுக்கொண்டு படுக்கையில் சாய்ந்து உட்கார்ந்திருந்த அகல்யா—கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டு நிமிர்ந்தாள்.

ராஜசேகரனும், பக்கத்தில் நவீனாவும் தெரிந்தார்கள்

"அம்மா!" நவீனா ஓடிவந்து கட்டிலில் தாவி உட்கார்ந்தாள்.

"என்னம்மா... மறுபடியும் சொரமா?"

"ஆ...ஆமா."

"என்கிட்ட யாருமே சொல்லலை!"

"நவீனாக் குட்டி குளிச்சாச்சா, இல்லையா?"

"குளிச்சுட்டேனே... இத பாரு சோப்பு வாசனை!"

நவீனா ஜில்லென்றிருந்த தன் இரண்டு உள்ளங்கைகளையும் அகல்யாவின் நாசிப் பரப்பில் வைத்தாள். "என் சமர்த்துக் குட்டி! இவ்வளவு சீக்கிரத்துல எந்திரிச்சு எதுக்காக குளிச்சே?"

ராஜசேகரன் சக்கர நாற்காலியை உருட்டியபடி பக்கத்தில் வந்தான். "அவ இன்னிக்கு அஞ்சு மணிக்கெல்லாம் முழிச்சிட்டா! முழிச்சதுமே அவ கேட்ட முதல் கேள்வி 'அம்மாவை எங்கே காணோம்?' என்பதுதான். நான் பதில் சொல்றதுக்குள்ளே வீடு பூராவும் துழாவ ஆரம்பிச்சுட்டா. எந்தப் பொய்யையும் சொல்லி அவளை சமாதானப்படுத்த முடியாதுன்னு நினைச்சுத்தான் சீக்கிரம் குளிப்பாட்டி இங்கே கூட்டிட்டு வந்துட்டேன்."

"நீங்க இராத்திரி சரியா தூங்கலை போலிருக்கே?"

"ஏன் அப்படி கேக்கிறே?"

"கண்ணு ரெண்டும் சிவந்திருக்கு."

"வாஸ்தவம்தான். ரெண்டு மணிக்கு மேல்தான் தூக்கமே வந்தது."

"ஏன்?"

"உன்னைப் பற்றி... உன் உடம்புல இருக்கிற நோயைப் பற்றி நினைக்க ஆரம்பிச்சேன். தூக்கம் தள்ளிப்போய் நின்னுகிச்சு!"

அகல்யா புன்னகைத்தாள். "என்னோட உடம்புக்கு ண்ணுமேயில்லை... வழக்கமா வர்ற இரத்த வாந்திதான். க்டர் மருந்து கொடுத்ததுல அதுவும் இப்போ நின்னுடுச்சு... னிக்கோ நாளைக்கோ வீட்டுக்கு போயிடலாம்."

"இந்தத் தடவை அவ்வளவு சீக்கிரமா ஆஸ்பத்திரியைவிட்டு



வெளியே போகமுடியாது, அகல்யா."

"ஏன்?"

"உடம்பை முழுமையா குணப்படுத்திக்க வேண்டாமா? கோயமுத்தூரிலிருந்து ரெண்டு டாக்டர் வரப்போறாங்க. இட்டத்தட்ட ஒரு மாசம் வரைக்கும் நீ இங்கேயிருந்து சிகிச்சை எடுத்துக்கப்போறே!"

"அதெல்லாம் வேண்டாங்க! நம்ம டாக்டர் எழுதி கொடுத்த மருந்தை சாப்பிட்டாலே சரியாகப்போயிடும்."

அகல்யா சொல்லிக்கொண்டிருந்த விநாடி—

அறைக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. "டொக்... டொக்..."

"எஸ்!" ராஜசேகரன் திரும்பிப் பார்த்து குரல் கொடுத்தான். கதவு திறக்கப்பட்டு, பாக்டரி மானேஜர் உள்ளே வந்தார்.

"வணக்கம் சார்!"

"வணக்கம் மிஸ்டர் நாராயணன்! என்ன விசயம்?"

"பம்பாய் மகேஷ் சோப்ராகிட்டயிருந்து ஒரு அவசர செய்தி."

"சொல்லுங்க."

"ஒரு வெளிநாட்டு ஆர்டர் சம்பந்தமா உங்ககிட்டே ஏற்கனவே சொல்லியிருந்தாராம்."

"ஆமா."

"அந்த ஆள் இப்போ பம்பாய்க்கு வந்திருக்காராம். உடனே பம்பாய் வந்தா பார்த்துப் பேசி முடிச்சிடலாமாம்."

"சரி, போயிட்டு வந்துடுங்க."

"ச... சார்... வந்து..."

"சொல்லுங்க."

"அவர் உங்களை வரச்சொல்றார்."

"சாரி... என்னால் இப்போ எங்கேயும் கிளம்ப முடியாது. ஒரு வாரத்துக்கு என்கிட்டே இந்த விவகாரங்களையெல்லாம் கொண்டுவராதீங்க. பம்பாய்க்கு நீங்க போறதா இருந்தா

போய் அந்த ஆர்டரை முடிச்சுகிட்டு வாங்க. மகேஷ் சோப்ரா
அதுக்கு ஒத்துக்கலைன்னா அந்த ஆர்டரே வேண்டாம்னு
சொல்லிடுங்க."

## 18

"சார்... அந்த ஆர்டரை வாங்குறது ஒரு கவுரவ
பிரச்சினைன்னு ஏற்கனவே நீங்க சொல்லியிருக்கீங்க. அந்த
ஆர்டர் சம்பந்தமா இடைத் தரகர்களுக்கு நிறைய கமிஷன்
வேறு கொடுத்திருக்கோம். இது. கடைசி நேரம். நீங்க போய்
பேசினீங்கன்னா ஆர்டரை கையோடு வாங்கிட்டு வந்துட
லாம்" மானேஜர் நாராயணன் தயக்கமான குரலில் சொல்ல...
ராஜசேகரன் 'உச்' கொட்டி கையமர்த்தினார்.

"இதோ பாருங்க மிஸ்டர் நாராயணன்! இன்னும் கொஞ்ச
நாளைக்கு இந்தத் தொழில் விவகாரங்களையெல்லாம்
கவனிக்கிற மனநிலையில் நான் இல்லை. நீங்க போங்க.
உங்களால் முடிஞ்சா ஆர்டரை பேசி முடியுங்க. மகேஷ்
சோப்ரா படிஞ்சு வரலைன்னா ஆர்டரை ரத்து பண்ணிட்டு
வந்துடுங்க."

"சரி சார்" நாராயணன் தயக்கமாய் அறையிலிருந்து
வெளியேறினார். அகல்யா, ராஜசேகரனை ஏறிட்டாள்.

"என்னங்க... இப்படி பேசி அனுப்பிட்டீங்க?".

"எப்படி பேசிட்டேன்?"

"அவர்தான் ஏதோ ஒரு முக்கியமான 'ஆர்டர்'ன்னு
சொன்னாரே... நீங்க போயி..."

"எனக்கு ஆர்டர் முக்கியமில்லை. இந்த நிமிடம் நீதான்
எனக்கு முக்கியம். கோயமுத்தூரிலிருந்து ரெண்டு டாக்டர்கள்
வர்றாங்க. அவங்க வந்து உனக்கு சிகிச்சை ஆரம்பிச்சு,
உடம்பு குணமாகிறவரைக்கும் எனக்கு தொழில் ரெண்டாம்
பட்சம்தான்."



அகல்யா, ராஜசேகரனையே பார்த்தாள்.

"என்ன அப்படி பார்க்கிறே?"

"எனக்காக... நீங்க?"

"தியாகம் பண்ணுறதா நினைக்கவேண்டாம், அகல்யா. ஒரு
கணவனுக்கு மனைவிகிட்டே இயல்பா இருக்கவேண்டிய
பாசம்தான், இது. என்னோட உடம்புக்கு ஏதாவது
ஒண்ணுன்னா நீ கவலைப்படமாட்டியா என்ன?"

ராஜசேகரன் சொன்ன அந்தக் கடைசி வாக்கிய
'ச்சப்'பென்று 'ஸ்டிக்கர்' மாதிரி அவள் மனசின் மையத்தில்
ஒட்டிக்கொண்டது.

"என்ன அகல்யா.... என்னமோ மாதிரி ஆயிட்டே
உடம்புக்கு ஏதாவது பண்ணுதா? நர்சை கூப்பிடட்டுமா?"

"வேண்டாங்க."

"சரி! கண்ணுல ஏன் கண்ணீர்?"

"ஒண்ணுமில்லீங்க. உங்க மனைவி பூர்ணிமா இவ்வளவு
சீக்கிரத்துல இறந்துபோயிருக்கக்கூடாது. நீங்க காட்டுற இந்த
அன்புக்கெல்லாம் அவங்க ஒருத்தர்தான் பாத்தியதைப
பட்டவங்க. இடையில் வந்த என் மேலே நீங்க இவ்வளவு
அன்பைக் கொட்டுறது எனக்கு உறுத்தலா இருக்கு."

"அபத்தமா பேசாதே! நவீனா உன் பேச்சை கவனிக்கிற
மாதிரி தெரியுது. வேறு எதையாவது பேசு."

"இதோ பாரு நாகராஜ்! அகல்யாவோட மனசுக்குள்
இப்பத்தான் லேசா கலக்கம் புகுந்திருக்கு. இந்தக் கலக்கம்
பெரிசாகி, நம்ம திட்டத்தைப் பாதிக்கிறதுக்குள்ளே நாம அந்த
நொண்டிப் பயலை முடிச்சே ஆகணும்."

"எனக்கும் அதே யோசனைதான் பாபு."

நாகராஜும் பாபுவும் விஸ்கியின் தாலாட்டில் இருந்தார்கள்.
இரண்டு பேர்களின் உதடுகளிலும் சிகரெட் தொற்றியிருந்தது.
நாசித்துவாரங்களில் புகை 'சுலோமோஷனில்' கசிந்தது.

"அகல்யாகிட்டே மறுபடியும் போய்ப் பேசிப

பார்க்கலாமா?"

"இனிமே அவகிட்ட போகக்கூடாது."

"ஏன்?"

"காரியத்தை முடிச்சுட்டுத்தான் போகணும். இப்ப போய் அவ முன்னாடி நின்னா, நாம போட்டிருக்கிற திட்டத்துக்கு எதிரா ஏதாவது சொல்ல ஆரம்பிச்சுடுவா."

"அப்படீன்னா... இன்னும் ரெண்டு நாளைக்குள் காரியத்தை முடிக்கணும்."

"முடிஞ்சா இன்னிக்கு இராத்திரியே!"

"இன்னிக்கு இராத்திரியேவா? அதெப்படி முடியும்? கொலை பண்ணுறதாயிருந்தா நீ சொல்றது, சாத்தியம். ஆனா, ராஜசேகரன் இறக்கிறது இயற்கையா இருக்கணும்ங்கிறது தானே நம்ம திட்டம்."

"அந்தத் திட்டத்துக்கு இப்ப அவகாசமில்லை."

"நாகராஜ்! நீ என்ன சொல்றே?"

"ராஜசேகரனை இன்னிக்கே தீர்த்துக்கட்டிடலாம்ன்னு சொல்றேன்."

"எப்படி?"

"இப்படி" கட்டிலில் கிடந்த அன்றைய மாலைப் பத்திரிகையின் தலைப்பைக் காட்டினான், நாகராஜ். பாபு, போதையில் சிவந்த தன் கண்களை அந்த தலைப்புச் செய்தி மேல் போட்டான்.

**ஊட்டிப் பகுதியில் முகமூடி கொள்ளையர் அட்டகாசம்**

**இதுவரை ஐந்து பேர் கொலை!**
**ரூ. 10 லட்சம் திருட்டு!**

நாகராஜ் சொன்னான்: "இந்த முகமூடி கொள்ளைக்காரங்களோட ஆட்சி உச்சமா இருக்கிற இந்த நேரத்துல நாமளும்



அதே போர்வையைப் போர்த்திகிட்டு ராஜசேகரனோட பங்களாவுக்குள் நுழையறோம். அடையாளம் தெரியாமே இருக்கிறதுக்காக முகத்தை கறுப்புத் துணியால் கட்டிக்கிறோம். ராஜசேகரனை மட்டும் தீர்த்தா போலீசுக்கு சந்தேகம் வரும். அதனாலே மொதல்ல வேலைக்காரி; அப்புறம் ராஜசேகரனைத் தீர்ப்போம்."

"அந்தச் சின்னப்பொண்ணு?"

"வந்தது முகமூடி ஆளுங்கதான்னு, போலீஸ் விசாரிக்கும் போது சொல்றதுக்கு சாட்சியம் வேண்டாமா?"

"அதுசரி... பங்களாவுக்குள்ளே எப்படி போறது?"

"நான் ஏற்கனவே பார்த்துட்டேன். பின்பக்கம் ஏறி குதிக்க பங்களா சுவர் வசதியா இருக்கு."

"நாகராஜ்! இந்தத் திட்டம் உன் மனசுக்கு கொஞ்சம் விபரீதமா படலை?"

"விபரீதம்தான். எண்ணெய் தம்ளரை கையில் எடுத்துகிட்டு தண்ணி கொட்டியிருக்கிற மொசைக் தரையில் நடக்கிற மாதிரி ஒரு ஜாக்கிரதை வேணும்."

"பங்களாவிலே வேலைக்காரியைத் தவிர வேறு யாரும் இல்லையா?"

"சாயந்தரம் ஏழு மணிக்கு மேல மத்தவங்க போயிடுவாங்க. வேலைக்காரி மாரம்மா மட்டும்தான் இருபத்தி நாலு மணி நேரமும் அந்த பங்களாவில் இருப்பா."

"சரி, துணிஞ்சிடுவோம்! திட்டத்தை சொல்லு."

"இப்ப மணி என்ன?"

"எட்டு."

"நம்ம திட்டம் இராத்திரி ஒரு மணிக்கு மேல அமலுக்கு வருது. அதுக்கு இடைப்பட்ட நேரத்துல முகமூடி கொள்ளைக்காரங்க போடுற மாதிரி வடநாட்டு பாணியில துணி வேணும்."

"நாம போய் எடுத்துகிட்டு வந்துடுவோம்."

"ரெண்டு பேரும் போகக்கூடாது. நான் மட்டும் போறேன். துணிகளையும் மற்ற பொருட்களையும் வாங்கிகிட்டு வந்துடுறேன்."

"நாகராஜ்!"

"சொல்லு."

"ராஜசேகரனை தீர்த்துடுறோம்ன்னு வை. போலீசுக்கு நம்ம மேலே சந்தேகம் வராதா?"

"எப்படி வரும்? ராஜசேகரனும் நாமும் பரம எதிரிகளா என்ன?"

"அகல்யாவை விசாரிக்கும்போது அவ உண்மையைச் சொல்லிட்டா?"

"உண்மையைச் சொன்னா அவளும் மாட்டிக்குவாளே. இதோ பாரு பாபு! நாம காரியத்தை உடனே முடிச்சா அகல்யாவால் நமக்கு ஆபத்தில்லை. ஆனா, இதையே காலங்கடந்து பண்ணினா அகல்யா நம்மைக் காட்டிக் கொடுக்கவும் தயங்கமாட்டா."

"சரி... இன்னிக்கே முடிச்சுடுவோம்."

நாகராஜ் எழுந்தான்.

"நீ அறையிலேயே இரு. நான் போய் துணி– பொருள் வாங்குற வேலையை முடிச்சுட்டு வந்துடுறேன்" சுவெட்டரை எடுத்து மாட்டிக்கொண்டு புறப்பட்டான்.

இரவு மணி பத்தரை.

மேசை விளக்கைப் போட்டு, புத்தகமொன்றை படித்துக் கொண்டிருந்த ராஜசேகரன், கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டு திரும்பினான்.

வேலைக்காரி மாரம்மா நின்றிருந்தாள்.

"என்ன மாரம்மா?"

"கொஞ்ச நேரம் கழிச்சு பால் குடிக்கிறேன்னு சொன்னீங்க... கொண்டு வரட்டுமாய்யா?"





"குழந்தை பால் குடிச்சிட்டாளா?"

"அரை தம்ளர்தான் குடிச்சா."

"சரி, எனக்கும் கொஞ்சமாவே கொடு" சொன்ன ராஜசேகரன், கட்டிலில் ஒருக்களித்து தூங்கிக்கொண்டிருந்த யமுனாவைப் பார்த்தான்.

தூங்கும்போது ஒரு குழந்தையின் முகம் எவ்வளவு நிர்மலமாய் இருக்கிறது!

அவனுடைய யோசிப்பை தொலைபேசி அழைப்பு தடை செய்தது. புத்தகத்தை மேசை மேல் வைத்துவிட்டு, கைநீட்டி ரிசீவரை எடுத்தான்.

"அலோ..."

மறுமுனையில் மருத்துவர் கவுடாவின் குரல் கேட்டது.

"ராஜசேகரன்! நீங்க தூங்கிக்கிட்டு இருப்பீங்கன்னு நினைச்சேன். முதல் மணி ஒலித்ததுமே ரிசீவரை எடுத்துட்டீங்களே?"

"இப்பதான் தூங்கப் போயிட்டிருக்கேன்."

"ராஜசேகரன்! அகல்யா விசயத்துல கோயமுத்தூரிலிருந்து வந்த டாக்டர்கள் ஒரு முடிவுக்கு வந்துட்டாங்க."

"என்ன?"

"கருப்பையை உடனடியா ஆபரேஷன் பண்ணி எடுத்துடணுமாம்."

"அகல்யாவுக்கு நீங்க எது செஞ்சாலும் சரி டாக்டர். அவ எனக்கும் எம்பொண்ணுக்கும் வேணும்."

"ஆபரேஷனுக்கு நாள் பார்த்துடலாமா?"

"நிச்சயமா."

"நடக்கப்போகிற ஆபரேஷனை பற்றி அகல்யாவுக்கு எதுவும் தெரிய வேண்டாம்."

"சரி டாக்டர்."

சட்டென்று விழிப்பு தட்டியது, பாபுவுக்கு. மல்லாந்து படுத்திருந்தவன் திடும்மென்று எழுந்து உட்கார்ந்தான்.

மணிக்கட்டில் நேரம் பார்க்க திடுக்கிட்டான்.

மணி 11.10.

எட்டு மணிக்கு வெளியே போன நாகராஜ் இன்னுமா அறைக்குத் திரும்பவில்லை என தனக்குள் கேட்டுக் கொண்டான். அறைக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான்.

விடுதி மேலாளர், கம்பளியைப் போர்த்திக்கொண்டு வரவேற்பு அறைக்குப் பின்னால் உட்கார்ந்து பெரிய நோட்டை புரட்டியபடி தெரிய– அவரை நெருங்கினான்.

"ராயர்!"

மானேஜர் நிமிர்ந்தார்.

"என்ன பாபு?"

"எட்டு மணிக்கு வெளியே போன நாகராஜ் இன்னும் வரலை. உங்ககிட்டே ஏதாவது சொல்லிட்டுப் போனானா?"

"இல்லையே."

'மூணு மணி நேரமாவா ஒருத்தன் கடைவீதியில இருப்பான்?' பாபு யோசித்துக்கொண்டே அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்து, பனி பெய்துகொண்டிருந்த வீதியை பார்த்தபடி காத்திருக்க ஆரம்பித்தான்.

அரை மணி நேரம் நழுவியிருந்தபோது, வரவேற்பு அறையில் தொலைபேசி துடித்தது. ரிசீவரை எடுத்து செவிமடுத்துவிட்டு, "பாபு! போன் உனக்குத்தான்" என்றார், மேலாளர்.

## 19

**பா**பு, மேலாளரிடமிருந்து ரிசீவரை வாங்கி "அலோ..." என்றான். ஒரு பெண் குரல் கேட்டது. "பேசுறது பாபுதானே?"

"ஆமா! நீங்க யாரு?"



"நான் நர்சு. அரசு ஆஸ்பத்திரியிலிருந்து பேசுறேன். உங்க நண்பர் பேரு நாகராஜ்தானே?"

"ஆமா."

"நீங்க உடனே இங்கே வாங்க."

"ஏ... என்ன பிரச்சினை?"

"உங்க நண்பரை யாரோ கத்தியால் குத்திட்டாங்க. உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த அவருக்கு அஞ்சு நிமிடத்துக்கு முன்னாடிதான் ஞாபகம் வந்தது. தங்கியிருக்கிற விடுதி பேரையும், உங்களைப் பற்றியும் சொன்னார். உங்கக்கூட அவசரமா ஏதோ பேசணுமாம். உடனே வாங்க."

பாபு அதிர்ந்தான்.

"நா...நாகராஜ் உயிருக்கு இப்ப எந்த ஆபத்தும் இல்லையே?"

"கத்திக்குத்து ஆழமா விழுந்திருக்கு. டாக்டர் 'நிச்சயமா' ஏதும் சொல்லலை. நீங்க உடனே புறப்பட்டு வாங்க."

மறுமுனையில் நர்சு, ரிசீவரை வைத்துவிட– பாபுவும் ரிசீவரை நெறிக்கிற மாதிரி வைத்துவிட்டு வெளியே பாய்ந்தான்.

**ஊ**ட்டியில் அந்த இராத்திரி நேரத்தில் அரசு மருத்துவமனை– மயான நிசப்தத்தில் இருந்தது. குளிருக்கு பயந்து இறுக்கமாய் சாத்தப்பட்டிருந்த அழுக்கான கண்ணாடி சன்னல்களில் மின்சார வெளிச்சம் ஒட்டியிருந்தது. பாபு விசாரித்துக்கொண்டு ஓடினான்.

வார்டு கதவுக்கு வெளியே– ஒரு இன்ஸ்பெக்டரும் காவலர்களும் நின்றிருந்தார்கள். அவர்களை வியர்வை முகமாய் நெருங்கினான்.

"சார்... இங்கே நாகராஜ்ன்னு..."

"கத்திக்குத்து கேசா?"

"ஆமா சார்."

"அந்த ஆளுக்கு நீ என்ன வேணும்?"

"நண்பன் சார்."

“நாகராஜோடு தங்கியிருந்த நண்பன் நீதானே?”

“ஆமா சார்.”

“பேரு பாபுதானே?”

“ஆ...ஆமா...சார்” பாபுவுக்கு, நாக்கும் தொண்டையும் உலர்ந்துபோயிற்று.

“ரெண்டு பேருக்கும் எந்த ஊரு?”

“சென்னை சார்.”

“இங்கே எதுக்காக தங்கி இருக்கீங்க?”

“சார்... நாங்க ரெண்டு பேரும் சினிமாவில் இருக்கோம். நான் ஒரு சண்டை நடிகர். நாகராஜ், துணை நடிகைகளை ‘சப்ளை’ பண்ணுறவர். நடுவட்டப் பகுதியில் ஒரு சினிமா ஷூட்டிங் நடந்திட்டிருக்கு. அதுக்காகத்தான் ரெண்டு பேரும் ஊட்டி வந்தோம்.”

“எத்தனை நாளா இங்கே தங்கி இருக்கீங்க?”

“ஒரு வாரமா சார்! நாகராஜை கத்தியால் குத்தின ஆளை பிடிச்சுட்டீங்களா சார்?”

“யாருன்னு தெரியலை. ரோட்டில்... ஒரு யூகலிப்டஸ் மரத்துக்கு கீழே நாகராஜ் இரத்தச் சகதியில் கிடந்ததை யாரோ பார்த்து– போலீசுக்கும் ஆம்புலன்சுக்கும் போன் பண்ணினாங்க... நாங்க போனப்ப– உயிர் இருந்தது. ஆஸ்பத்திரியில் சேர்த்தோம். பத்து நிமிடத்துக்கு முந்தி சுயநினைவு வந்து– லாட்ஜ் பெயரையும், உன் பெயரையும் சொல்லிட்டு வந்தார்... நாங்க வாக்குமூலம் வாங்குறதுக்குள் நினைவு இழந்துட்டார்.”

பாபு தளர்ந்துபோய் சுவரைப் பற்றிக்கொள்ள– இன்ஸ்பெக்டர் கேட்டார்– “அந்த இடத்துக்கு நாகராஜ் எதுக்காக போனான்னு தெரியுமா?”

“அங்கே போறதா என்கிட்ட சொல்லிட்டு போகலை சார்.”

“பின்னே?”

“பஜாருக்கு போய் சில பொருட்களை வாங்கணும்ன்னு



...விட்டு கிளம்பினான்.”

“எத்தனை மணிக்கு?”

“அப்ப மணி எட்டு இருக்கும். நான் விஸ்கி குடிச்சிட்டு தூங்கிட்டேன், சார். பதினொரு மணிக்குத்தான் முழிப்பு வந்துச்சு... ஆள் எங்கே காணோம்ன்னு கவலைப்பட்டுகிட்டு இருந்தப்போதான் போன் வந்தது.”

“நாகராஜுக்கு கல்யாணம் ஆயிடுச்சா?”

“இல்லை சார்.”

‘ப்ளக்’ அறைக் கதவு திறந்துகொள்ள– மருத்துவரும் நர்சும் வெளிப்பட்டார்கள். பாபு அவர்களிடம் ஓடினான்.

“டா...டாக்டர்...”

“நீதான் பாபுவா?”

“ஆ...ஆமா... டாக்டர்.”

“கத்திக்குத்து ஆழமா விழுந்து கல்லீரலை பாதித்ததால் நாகராஜை காப்பாற்ற முடியலை. சாரி...”

பாபு அதிர்ந்துபோய் ஆணியடித்த மாதிரி நிற்க– இன்ஸ்பெக்டர் அந்த மரணத்தை எதிர்பார்த்தவர் போல் கேட்டார்.

“டாக்டர்! நாகராஜ் கடைசியா ஏதாவது பேசினானா?”

“அதுக்கப்புறம் நினைவு திரும்பவேயில்லை.”

நர்சு தன் கையிலிருந்த சிறிய டைரியை இன்ஸ்பெக்டரிடம் நீட்டினாள். “இது, நாகராஜோட பாக்கெட்டுல இருந்தது சார்.”

அவர் அதை வாங்கிப் புரட்டினார். ஒவ்வொரு பக்கத்திலும் சினிமா படதயாரிப்பு நிறுவனங்களின் பெயர்கள், தொலைபேசி எண்கள். அதற்கு கீழே சிக்கலாய் எழுதப்பட்ட முகவரிகள்.

இன்ஸ்பெக்டர், டைரியை புரட்டிக்கொண்டே பாபுவிடம் கேட்டார்.

“ஊட்டியில் எத்தனை நாளா தங்கி இருக்கிறதா சொன்னே?”

"ஒரு வாரமா."

"எந்த சினிமா கம்பெனியோட ஷூட்டிங்?"

"விஸ்வபாரதி பிக்சர்ஸ்."

"நாகராஜுக்கும், சினிமா யூனிட்டை சேர்ந்தவர்கள் யாருக்காவதும் முன்விரோதம் உண்டா?"

"அப்படி ஏதும் இல்லை சார்."

"பொம்பளைங்க சிநேகிதம்?"

"அதுவும் இல்லை, சார்."

"நாகராஜ்கிட்டே நெருங்கிப் பழகுறது வேறு யார்?"

"என்னைத் தவிர வேறு யார்கிட்டேயும் நாகராஜுக்கு நெருக்கம் இல்லை, சார்."

பாபுவை விசாரித்துக்கொண்டே— டைரியை புரட்டியபடி இருந்த இன்ஸ்பெக்டர் சட்டென்று பார்வையை ஒரு பக்கத்தில் நிறுத்தினார்.

"ஊட்டியில் நாகராஜுக்கு யாரைத் தெரியும்?"

"யாரையும் தெரியாது சார்."

"பொய் சொல்லாதே?"

"நிஜமாத்தான் சொல்றேன் சார்."

"சரி. 'அகல்யா'ங்கிறது யாரு?"

"ச...சார்..."

"அகல்யா— ஊட்டின்னு எழுதி தொலைபேசி நம்பரையும் இந்தப் பக்கத்துல எழுதி இருக்கான், நாகராஜ். யார் இந்த அகல்யா?"

இனி நழுவ முடியாது என்பதை புரிந்துகொண்ட பாபு மெல்லிய குரலில் சொன்னான்.

"அ...அந்தப் பொண்ணு... போன மாசம் வரைக்கும் ஒரு துணை நடிகையாக இருந்தது சார்... இப்போ ராஜசேகரன்ங்கிற எஸ்டேட் அதிபருக்கு மனைவியாயிட்டா."

இன்ஸ்பெக்டரின் நெற்றி சுருங்கியது.



"எந்த ராஜசேகரனைச் சொல்றே? ரெண்டு காலும் [illegible]மாய் சக்கர நாற்காலியில்..."

"அவர்தான் சார்."

மறுநாள் காலை ஏழு மணி.

தனக்கு எதிரே உட்கார்ந்திருந்த இன்ஸ்பெக்டரிடம் கவலையான குரலில் சொல்லிக்கொண்டிருந்தான், ராஜசேகரன். "நாகராஜ் கொலை செய்யப்பட்டது எனக்கு அதிர்ச்சியா இருக்கு, இன்ஸ்பெக்டர்! என் மகள் நவீனா, பழைய நிலைமைக்கு வரக் காரணம் அகல்யா. அந்த அகல்யா எனக்குக் கிடைக்கக் காரணம் நாகராஜ்தான். சினிமா தொழிலில் இருந்தாலும் அவன் நாணயமானவன்."

"நாகராஜ் இங்கே அடிக்கடி வருவானா?"

"இந்த ரெண்டு மாசத்துல ஒரு தடவை வந்திருக்கான்."

"கடைசியா அவனை என்னைக்குப் பார்த்தீங்க?"

"ரெண்டு நாளைக்கு முன்னாடி நான் காரில் கோயமுத்தூர் போகும்போது— குன்னூருக்கு பக்கத்துல— ஒரு ரோட்டு வளைவில், அவனும், அவனது நண்பனும் நின்னுட்டிருந்ததைப் பார்த்தேன்."

"எதுக்காக நின்னுட்டிருந்தாங்க?"

"பைக் ரிப்பேர்ன்னு சொன்னாங்க."

"அதுக்கப்புறம்?"

"நான் பார்க்கலை... ஆனா அகல்யாவை பார்க்கிறதுக்காக ரெண்டு பேரும் ஆஸ்பத்திரிக்கு போனதா கேள்விப் பட்டேன்."

"நாகராஜ் கொலையானதைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க, ராஜசேகரன்?"

"எனக்கு ஒண்ணும் தோணலை... சினிமா உலகைச் சேர்ந்தவங்ககிட்ட சில தப்புதண்டா இருக்கும். நாகராஜ் கிட்டே அதுமாதிரி ஏதாவது இருந்திருக்கலாம். போட்டி, பொறாமை, பெண் விவகாரம் என எல்லாமே மலிந்த அந்தத் துறையில் எது வேணும்ன்னாலும் நடக்கும். வழக்கை அந்த



## விலை ரூ. 6

ராணி முத்து

பத்திரிகை காகிதம் உட்பட எல்லா விலையும் ஏறிவிட்டது. இதனால் மற்ற எல்லா பத்திரிகைகளும் விலையை ஏற்றிவிட்டன!

"ராணி முத்து" எப்படியோ சமாளித்து வந்தது. ஆனால், இனியும் சமாளிக்க முடியாததால், அடுத்த (ஏப்ரல் 16) இதழ் முதல் "ராணி முத்து"வின் விலை ரூ. 6 என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

வாசகர்கள் தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டுகிறோம்!

நிர்வாகி.

கோணத்திலிருந்து பார்த்தா சீக்கிரமே கொலையாளி யாருங்கிறதை நீங்க கண்டுபிடிச்சுடலாம்."

"பாபுவைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க?"

"நாகராஜுக்கு அவன் நெருங்கின நண்பன்னு தெரியும். அவ்வளவுதான். நான் பேசிப் பழகினதெல்லாமே நாகராஜ் கிட்டதான். ஏன் இன்ஸ்பெக்டர்! பாபு மேல சந்தேகப் படுறீங்களா?"

"அவன்கிட்ட நிறைய தடுமாற்றம் இருக்கு. ஊட்டியில் நாகராஜுக்கு யாரையாவது தெரியுமான்னு கேட்டப்ப இல்லேன்னு சொன்னான். உங்க மனைவி அகல்யாவை எதுக்காக தெரியாதுன்னு சொல்லணும்?"

"ஒருவேளை அகல்யாவின் ஞாபகம் வராம இருந்திருக்கலாம்."

"விஸ்வபாரதிங்கிற சினிமா கம்பெனியில் வெளிப்புற படப்பிடிப்பு நடுவட்டம் பகுதியில் நடக்கிறதா சொன்னான். விசாரணை பண்ணியபோது, அவங்க ரெண்டு நாளைக்கு முன்னாடியே ஷூட்டிங்கை முடிச்சுட்டு போயிட்டாங்க.

இவங்க ரெண்டு பேர் மட்டும் லாட்ஜில் அறை எடுத்துகிட் ஊட்டியில் ஏன் தங்கணும்?"

"இந்தக் கேள்வியை பாபுகிட்டே கேட்டீங்களா?"

"கேட்டேன்."

"என்ன சொன்னான்?"

"ஊட்டி அற்புதமா இருக்கிறதால ரெண்டு நாள் ஜாலியா இருந்துட்டு போலாம்ன்னு அறை போட்டாங்களாம்."

"இந்த பதில் நம்புற மாதிரி இல்லையே?"

"உங்க மனைவி அகல்யா இப்போ ஆஸ்பத்திரியில்தானே இருக்காங்க?"

"ஆமா."

"அவங்களை நான் விசாரிக்கணுமே?"

"எதுக்காக விசாரிக்கணும்?"

"நாகராஜ்— பாபுவைப் பற்றி உங்களுக்கு தெரிஞ்சதைக் காட்டிலும் அவங்களுக்கு அதிகமா தெரிஞ்சிருக்க வாய்ப்பு இருக்கே?"

இன்ஸ்பெக்டரின் பேச்சில் ஒரு 'விஷமம்' ஒளிந்திருப்பதை சட்டென்று அடையாளம் கண்டுகொண்டான், ராஜசேகரன்.

# 20

"இன்ஸ்பெக்டர்! நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னு எனக்குப் புரியலை?" ராஜசேகரன் இப்படி கேட்டதும் இன்ஸ்பெக்டர் புன்னகைத்தார்.

"நாகராஜும் பாபுவும் அவங்க தங்கியிருந்த விடுதியிலிருந்து அகல்யாவுக்கு இந்த வாரத்துல மட்டும் நாலு தடவை போன் பண்ணி இருக்காங்க."

"அதுல என்ன தப்பு இன்ஸ்பெக்டர்? அகல்யா ஏற்கனவே அவங்க ரெண்டு பேருக்கும் அறிமுகமானவள்தான். ...ல்யாவை நான் கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு நாகரா... ...வி இருக்கான். அகல்யாவுக்கு அவன் போன் பண்ணி ...ச்சயா பேசியிருக்கலாம்."

"அவங்களுக்குள்ளே வேறு வகையான தொடர்பு ஏதும் ...க்காதுன்னு நினைக்கிறீங்களா?"

"நிச்சயமா" ராஜசேகரன் சொல்லிக்கொண்டிருக்கும் ...ாதே பக்கத்திலிருந்த தொலைபேசி கிணுகிணுத்தது.

ரிசீவரை எடுத்து செவிமடுத்த ராஜசேகரன் "இருக்கிறார்" ...ன்று சொல்லி ரிசீவரை இன்ஸ்பெக்டரிடம் நீட்டினான்.

"...ஸ்டேஷனிலிருந்து எஸ்.ஐ. பேசுறார்."

இன்ஸ்பெக்டர் வாங்கி குரல் கொடுத்தார்.

"சொல்லுங்க சிவராமன்?"

"சார்! செல்லராம்ஸ் துணிக் கடையிலிருந்து ஒரு ஆள் பத்து நிமிடத்துக்கு முன் இங்கே வந்திருந்தார். கொலை செய்யப்பட்ட நாகராஜ் நேத்து இராத்திரி எட்டரை மணிக்கு அந்தக் கடைக்கு போய் சுவெட்டர் வாங்கியிருக்கான். அப்ப யாரோ ஒரு ஆள் வந்து அவன்கூட பேசியிருக்கான். ரெண்டு பேரும் சிரிச்சுகிட்டே வெளியே போயிருக்காங்க."

"அந்த ஆள் எப்படி இருந்தானாம்?"

"அடையாளம் சரியா சொல்லத் தெரியலை... கரும்பச்சை நிறத்தில் சால்வை போர்த்தி— தலைக்கு மப்ளர் கட்டி இருந்தானாம்."

"சிவராமன்! நீங்க ஒரு காரியம் பண்ணுங்க..."

"சொல்லுங்க சார்."

"செல்லராம்ஸ் கடை ஆள் பேரென்ன?"

"மாரண்ணன்."

"அந்த மாரண்ணனை கூட்டிகிட்டு பாபு தங்கி இருக்கிற லாட்ஜுக்கு போங்க. பாபுகிட்டே அந்த அடையாளங்களைச் சொல்லி— ஆள் யாருன்னு கேளுங்க. ஒருவேளை பாபுக்கு அந்த ஆளை தெரிந்திருந்தா எளிதா கண்டுபிடிச்சிடலாமே?"

"எஸ் சார்."

"நான் மிஸ்டர் ராஜசேகரன்கிட்டே பேசிட்டு ஸ்டேஷனு
வந்துடுறேன். நீங்க பாபுவை விசாரிச்சுட்டு வாங்க."

"எஸ் சார்."

சப்-இன்ஸ்பெக்டர் சிவராமன், மாரண்ணனை ஜீப்
ஏற்றிக்கொண்டு பாபு தங்கியிருந்த விடுதிக்கு போ
சேர்ந்தார்.

மானேஜர், கம்பளியைப் போர்த்திக்கொண்டு– கண்ணா
தம்ளரில் இருந்த தேநீரை உறிஞ்சியபடி உட்கார்ந்திருந்
சப்–இன்ஸ்பெக்டரை பார்த்ததும் வாயில் இருந்த தேநீ
விழுங்கத் தோன்றாமல் எழுந்து நின்றார்.

"சார்..."

"பாபுவை கீழே கூப்பிடு."

"பாபு, அறையில் இல்லை சார்."

"என்னது, அறையில் இல்லையா?"

"ஆமா சார்... ஒரு மணி நேரத்துக்கு முந்திதான் யாரோ
வந்து கூப்பிட்டாங்கன்னு வெளியே போனார்."

"பாபுவைக் கூப்பிட யார் வந்தாங்க?"

"வந்து... யாருன்னு எனக்குத் தெரியாது சார்... ஆறு
மணி இருக்கும். ஒரு ஆசாமி பைக்குல வந்தார். பாபுவை
பார்க்கணும்ன்னு சொல்லி மேலே போனார். அஞ்சு
நிமிடத்துல ரெண்டு பேரும் கீழே இறங்கி வந்தாங்க. அவசரமா
பைக்ல புறப்பட்டு போயிட்டாங்க."

"வந்த ஆள் எப்படி இருந்தான்."

"சால்வை போர்த்தி, தலைக்கு மப்ளர் கட்டி இருந்தான்."

"சால்வை என்ன நிறம்?"

"சரியா கவனிக்கலை சார்."

"கரும்பச்சை நிறமா?"

"அப்படித்தான் போலிருக்கு சார்."

"வந்த ஆள்கிட்டே வேறு ஏதாவது அடையாளம்?"

"நான் மூஞ்சியை சரியா பார்க்கலை சார்."

"பைக் நம்பரை பார்த்தாயா?"

"இல்லை சார்."



ன பைக்?"

ரி சார்... நான் பார்க்கலை."

ய்யா... லாட்ஜிக்கு எவனாவது வந்தா, வந்தவன்
எங்கிருந்து வர்றான்னு விசாரிக்கிறதில்லையா?"

அவன் வந்த நேரத்துல ஒரு ஆள் அறை கேட்டு என்கிட்ட
டிருந்தார் சார்... அதான் சரியா கவனிக்கலை."

பாபு ஒண்ணும் சொல்லிட்டு போகலையா?"

இல்லை சார்."

–இன்ஸ்பெக்டர் தொப்பியைக் கழற்றியபடி பக்கத்தில்
இருந்த மாரண்ணனைப் பார்த்தார்.

நீங்க சொன்ன அதே ஆள்தான் போலிருக்கு! உடனே
லா போலீஸ் ஸ்டேஷனையும் 'அலர்ட்' பண்ணனும்."

பாபு, பில்லியனில் தொற்றியிருக்க– தலைக்கு மப்ளர்
தி– உடம்புக்கு கரும்பச்சை நிற சால்வையைப்
ார்த்தியிருந்த அந்த ஆள், பைக்கை படுவேகமாய் விரட்டிக்
ண்டிருந்தான். ஆள் நடமாட்டம் அற்ற அந்த மலைப்
தையில்– பனிப்புகை மட்டும் திட்டு திட்டாய்
கார்ந்திருந்தது.

"குமரவேல்" பாபு கூப்பிட்டான்.

"ம்..."

"இன்னும் எவ்வளவு தூரம் போகணும்?"

"கொஞ்ச தூரம்தான்."

"நாகராஜை கொலை பண்ணின ஆள் யாருன்னு
ப்பவாவது சொல்லேன்."

"நேரிலே காட்டுறேன். அதுக்குத்தானே உன்னை கூட்டிட்டு
போயிட்டிருக்கேன்."

"குமரவேல்! நீ பம்பாயிலிருந்து ஊட்டிக்கு வந்தது எனக்கு
ஆச்சரியமா இருக்கு. நீ சென்னையைவிட்டு பம்பாய்க்குப்
போய் அஞ்சு வருடம் இருக்குமா?"

"ம்... இருக்கும்."

"ஆளே மாறிட்டே."

"எல்லாம் பணம்! எனக்கு பம்பாயைவிட்டு வர மனசே இல்லை. ஆனா, அகல்யா எவனோ ஒரு நொண்டிப் பயலை கட்டிகிட்டாள்ன்னு எனக்கு தகவல் வந்ததும் இருப்பே கொள்ளலை. அவ என் உடப்பொறப்பு. மனசு கேட்குமா? அதான் புறப்பட்டு வந்தேன். ஆஸ்பத்திரியில அந்த கோலத்துல அவளைப் பார்த்ததும் பச்சைக் குழந்தை மாதிரி அழுதுட்டேன்."

"பின்னே, சகோதர பாசம் இருக்காதா?"

பைக், தைல மரங்களுக்கு மத்தியில் ஓடிக்கொண்டிருந்தது.

"நாகராஜும் நீயும் சேர்ந்துதான் அவ கல்யாணத்தை முடிச்சிங்களாமே?"

"ஆமா."

"ரெண்டாந்தாரமா வாழ்க்கைப்பட்டாலும் வசதியான இடம்தான். உடம்புல ஊனம் இருந்தாலும், மனசுல ஊனம் இல்லாத புருஷன்– அகல்யா மேல பாசத்தைக் கொட்டுற குழந்தை. என் தங்கச்சி அகல்யா கொடுத்து வச்சவள்தான்... நீ என்ன சொல்றே பாபு?"

"ஆமா."

பைக் வேகம் குறைந்து நின்றது.

நின்ற இடம் ஒரு சின்ன மலைச்சரிவு. சரிவுக்கு கீழே பாசி பிடித்தக் குளம்.

பாபு கேட்டான்– "என்ன குமரவேல்... பைக்கை நிறுத்திட்டே?"

"நாம வரவேண்டிய இடம் வந்தாச்சு! இறங்கு!"

பாபு குழப்பமாய் இறங்கி– சுற்றும் முற்றும் பார்த்தான். எல்லாத் திசையிலும் பனிப்புகை. அவற்றுக்கு நடுவே தைல மரங்களின் அணிவகுப்பு.

"என்ன குமரவேல்? 'நாகராஜை கொலை பண்ணின ஆளை எனக்குத் தெரியும். வா, காட்டுறேன், ரெண்டு பேருமா மடக்கி போலீசில் ஒப்படைச்சுடலாம்'ன்னு சொல்லி கூட்டிட்டு வந்தே? இந்த இடத்தைப் பார்த்தா ஏதோ வனாந்தரம் மாதிரி இருக்கு?"



மரவேல் பைக்கை ஸ்டாண்டிட்டு நிறுத்திவிட்டு பாபுவை த்து புன்னகைத்தான்.

"ாகராஜை கொன்னது யாருன்னு உனக்குத் தெரியணும், வளவுதானே?"

"அ... ஆமா."

"அவனைக் காட்டுறதுக்கு முன்னாடி உன்கிட்டே கேள்வி."

"என்ன?"

"நாகராஜ் கொலை செய்யப்பட்டதுக்கு என்ன ரணம்ன்னு உனக்குத் தெரியுமா?"

"தெரி...யாது..."

"எனக்குத் தெரியும்."

"குமரவேல்! நீ என்ன சொல்றே?"

"அகல்யாவோட புருஷன் ராஜசேகரனை கொலை ண்ணிட்டு, சொத்தை கபளீகரம் பண்ணுறதுக்காக திட்டம் பாட்டீங்க இல்லையா?"

பாபு திடுக்கிட்டு நிமிர்ந்தான். "குமரவேல்... இதெல்லாம் னக்கு?"

"எப்படி தெரியும்ன்னு கேட்கிறியா? நேற்று சாயந்தரம் அகல்யாவைப் பார்க்க ஆஸ்பத்திரிக்கு போனப்ப– அவளே சொன்னா. எம்புருஷனை எப்படியாவது நாகராஜ்– பாபுகிட்டேயிருந்து காப்பாத்துங்கண்ணான்னு கெஞ்சினா."

பாபுவின் முகத்தில் கலவரம்.

"அப்படீன்னா?"

"நாகராஜுக்கு நல்ல கதி காட்டினது நான்தான்."

"கு...ம...ர...வே...ல்..." பாபு சுவாசிக்க திணறிக் கொண்டிருக்கும்போதே குமரவேல் அவன் மேல் பாய்ந்து– தான் கற்ற வர்மக் கலையை அவனுடைய கழுத்து நரம்பின் 'இந்தியன்' தாத்தா பாணியில் மேல் காட்ட– பாபு சரிந்து, தளர்ந்து உட்கார்ந்தான்.

"இப்ப... நீ பாதிப் பிணம்... உன்னால் இப்ப பேச முடியாது. கை, கால்களை அசைக்க முடியாது. நான் என்ன செய்யுறேன்னு பார்க்க மட்டுமே உன்னால் முடியும்."

பாபு கண்கள் விரிய– வாய் பிளந்து– சிரமமாய் சுவாசித்தான். குமரவேல் அவனை இழுத்துக்கொண்டுபோய், பைக்கின் மேல் நீளமாய் படுக்க வைத்து– தன் சால்வையாலும், மப்ளராலும் பைக்கோடு சேர்த்து இறுக்கிக் கட்டினான்.

"இந்த பைக் என்னோடதுதான், பாபு. பம்பாய்க்கு போறப்ப ஒர்க்ஷாப்பில் விட்டுட்டு போயிருந்தேன். ரெண்டு நாளைக்கு முன்னாடி சென்னை வந்ததும் வண்டியை வாங்கிக்கிட்டு ஊட்டி வந்துட்டேன். இனிமே இந்த பைக்கும் நீயும், இணை பிரியாமல் அந்த ஆழமான குளத்தில் சமாதியாகப்போறீங்க."

பாபு நிமிர முயன்று தோற்றான்.

"ராஜசேகரன், அகல்யா, நவீனா மூணு பேரும் நிம்மதியா வாழணும்ன்னா நீயும் நாகராஜும் சாகுறது அவசியம். பயிர் நல்லா வளரணும்ன்னா களை எடுப்பாங்களே? அது மாதிரின்னு வைச்சுக்கோயேன்."

பாபுவின் கண்கள் மரண பயத்தில் அலைந்தன. குமரவேல், அவனை பைக்கோடு சேர்த்து இறுக்கி பிடித்தபடி ஸ்டாண்ட்டை விடுவித்தான்.

"பாபு! சாகிறதுக்கு பயமா இருந்தால் கண்ணை மூடிக்க. இந்த பாசி பிடிச்ச குளத்தைப் பற்றி நேத்திக்கே விசாரிச்சுட்டேன். இது விஷத் தண்ணீர் குளமாம். ஜனங்க தப்பித்தவறிகூட இந்தப் பக்கம் வரமாட்டாங்களாம். குளத்தோட ஆழம் இருபதடி. எந்த வறட்சியிலும் தண்ணி வற்றவே வற்றாதாம்... உள்ளே போயிடுறியா?" சொன்னவன்– பைக்கை எட்டி உதைக்க– அது பத்தடி ஓடி, சரிந்து– கைதேர்ந்த நீச்சல்காரனைப் போல் கரணம் அடித்து– குளத்தின் மையத்தில் குதித்தது. தண்ணீர் திவலைகள் அசுர வேகத்தில் தெறிக்க– 'களக் புளக்...' பைக் மூழ்க ஆரம்பித்தது.

கலைந்த பாசி, கொஞ்சம் கொஞ்சமாய் பக்கத்தில் வந்து நீர்பரப்பை மூட– பைக் மூழ்கின இடத்தில் நீர்க்குமிழிகள் மட்டும் தொடர்ந்தன.

அதுவும் நிசப்தமாகும் வரை குளத்தையே வெறித்து பார்த்துக்கொண்டிருந்த குமரவேல்– திரும்பி, தைல மரங்களுக்கு மத்தியில் நிதானமாய் நடக்க ஆரம்பித்தான்.



## 21

அகல்யாவைப் பார்த்துவிட்டு, சக்கர நாற்காலியில் காருக்கு திரும்பிக்கொண்டிருந்தான், ராஜசேகரன். மருத்துவர் கவுடா, கூடவே நடக்க– அவருக்குப் பின்னால் நவீனா வந்தாள். ராஜசேகரனுக்கு மட்டும் கேட்கும்படி பேசிக் கொண்டு வந்தார், மருத்துவர்.

"ராஜசேகரன்... அகல்யா, மரண எல்லையைக் கடந்துட்டா. புற்றுநோய் பரவுறதுக்குள், கருப்பையை நீக்கியது நல்லது."

"அகல்யாவுக்கு இனிமே இரத்த வாந்தி?"

"வரவே வராது!"

"நன்றி டாக்டர்! அகல்யா குணமானதுக்குக் காரணமே நீங்க எடுத்த சரியான சிகிச்சைதான். இல்லேன்னா, இந்த ரெண்டாவது பூர்ணிமாவையும் நான் இழந்திருப்பேன்."

"டாக்டர் அங்கிள்!"

நவீனா, மருத்துவரின் கோட்டை இழுத்தாள்.

"என்னம்மா?"

"அம்மாவை எப்ப வீட்டுக்கு கூட்டிட்டுப்போறது?"

"இன்னும் பத்து நாள் கழிச்சு."

"அதுக்கப்புறம் அம்மா ஆஸ்பத்திரிக்கு வரமாட்டாங்களே?"

"ஊகூம்... வரமாட்டாங்க! நீ அம்மாவை வீட்டுல தொல்லைபடுத்தாம இருக்கணும். அம்மா சொன்ன பேச்சை கேட்கணும்."

"கேட்பேன்!"

"நல்ல பொண்ணு."

மருத்துவமனை வாசலில் நின்றிருந்த காருக்கு வந்தார்கள். டிரைவர் கோபால், ராஜசேகரன் காருக்குள் ஏற உதவி

செய்துவிட்டு, சக்கர நாற்காலியை எடுத்து காரின் மேலே வைத்து கட்டினான். நவீனா, முன் இருக்கைக்குப் போக, மருத்துவரை ஏற்றிட்டான், ராஜசேகரன்.

"நான் மறுபடியும் சாயங்காலம் வர்றேன் டாக்டர்."

"வாங்க!"

"நாகராஜ் கொலையுண்டது சம்பந்தமாகவும், பாபு காணாமல் போனது குறித்தும் போலீஸ் மறுபடியும் விசாரணைக்கு வந்தாங்களா, டாக்டர்?"

"வரலை."

"நாகராஜ் கொலையுண்டதும், பாபு காணாம போனதும் ஆச்சரியமா இருக்கு டாக்டர்! ரெண்டு பேருமே அகல்யா கிட்டே பிரியமா இருந்தாங்க."

"சினிமா துறையில் போட்டியும் பொறாமையும் அதிகம். அந்தத் துறையில் எது வேணும்ன்னாலும் நடக்கும்."

காரை உசுப்பினான், கோபால்.

"டாக்டர் அங்கிள்! டாட்டா" நவீனா கையை ஆட்டினாள்.

"டாட்டா."

கார் கிளம்பியதும், மருத்துவர் கவுடா— மருத்துவ மனைக்குப் பின்பக்கம் இருந்த தன் பங்களாவை நோக்கி காலை உணவுக்காக நடந்தார்.

குமரவேல் எதிர்ப்பட்டான்.

"டாக்டரய்யா... வணக்கம்!"

கவுடா நின்றார். 'நீ...நீ?' யோசித்தார்.

"நேற்று சாயந்திரம் அகல்யாவைப் பார்க்கிறதுக்காக வந்தேன், டாக்டர். அகல்யாவின் ஊர்க்காரன்."

"ஓ... நீயா? உன் பேர் தங்கவேல்தானே?"

"இல்லீங்க டாக்டரய்யா... குமரவேல்."

"அகல்யாவைப் பார்த்துட்டு இன்னுமா நீ ஊருக்குப் போகலை?"

"நேத்து இராத்திரி கோயம்புத்தூர் போற கடைசி பஸ்ஸை கோட்டை விட்டுட்டேன். லாட்ஜில் அறை





...த்து தங்கிட்டேன். காத்தால எந்திரிச்சு ஊட்டி ...ரியம்மன் கோவிலுக்குப் போயி, அகல்யா பேருக்கு ...ர்ச்சனை பண்ணினேன். பிரசாதத்தைக் கொடுத்துட்டு ...போலாம்ன்னு..."

"அதான் வந்தியா... போய்க் கொடு."

"அகல்யாவுக்கு உடம்பு குணமாயிடுமில்ல டாக்டர்?"

"குணமாகியாச்சு. ஒரு வாரம், பத்து நாளில் வீட்டுக்குப் போயிடுவா."

"நான் பார்த்துட்டு கிளம்புறேன் டாக்டர்."

"ம்...ம்..." கவுடா தலையாட்டியபடியே நடந்து போக, குமரவேல்— மருத்துவமனையை நோக்கிப் போனான்.

கதவைத் தள்ளினான்.

அகல்யா உள்ளிருந்து குரல் கொடுத்தாள். "யாரது?"

"நான்தான்" உள்ளே நுழைந்தான், குமரவேல்.

அகல்யா கலவரமாய் எழுந்து உட்கார்ந்தாள்.

"அ...அ...அண்ணா! நீ இன்னும் ஊருக்குக் கிளம்பலியா?"

"காரியம் முடிஞ்சதும்தானே கிளம்பணும்... இப்பத்தான் காரியம் முடிஞ்சது. கிளம்பிட்டிருக்கேன். உன்கிட்டே சொல்லிட்டுப் போகலாம்ன்னு வந்தேன்."

"அ...அண்ணா! நீ அந்த நாகரைஜையும், பாபுவையும்..."

புன்னகையோடு கையமர்த்திய குமரவேல் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு மெல்லிய குரலில் சொன்னான்: "சத்தம் இல்லாமே முடிச்சுட்டேன். நாகராஜோட கணக்கை நேத்துதான் தீர்த்தேன். பாபுவோட கணக்கை மூணு மணி நேரத்துக்கு முன்னாடி ஒரு குளத்துலே முடிச்சேன்."

"அ...ண்...ணா..."

"ஏம்மா நடுங்குறே? நேத்து சாயந்தரம் உன்னைப் பார்க்க வந்தப்ப உன் கதையை என்கிட்ட சொல்லி, 'என் கணவனை எப்படியாவது நாகராஜ், பாபுகிட்டேயிருந்து காப்பாத்துங்கண்ணா'ன்னு நீ கெஞ்சினே. அப்படி நீ கெஞ்சின பிறகும் நான் சும்மா இருக்கலாமா? அதான்

ரெண்டு பேரையும்..."
"அ...அண்ணா! நீ அ...அவசரப்பட்டுட்டே! நாகராஜ்,
பாபுகிட்டே நிதானமாகப் பேசி..."
மீண்டும் கையமர்த்தினான், குமரவேல். "இதோ
பாரும்மா... அந்த ரெண்டு ராஸ்கல்களை பற்றி உன்னைக்
காட்டிலும் எனக்கு நல்லாவே தெரியும். அவங்க ஒண்ணு
நினைச்சா அந்தக் காரியத்தை செய்யாம விடமாட்டாங்க!
அப்படியும், நாகராஜை முடிக்கிறதுக்கு முந்தி அவனைத்
தனியா கூட்டிட்டுப்போய் புத்தி சொல்லிப் பார்த்தேன். அவன்
எடுத்தெறிஞ்சு பேசுற மாதிரி எம்மனசுக்குப் பட்டது.
நீ நிம்மதியா உன் கணவனோடு வாழணும்ன்னா, இந்த
ரெண்டு களைகளை களைஞ்சே தீரணுங்கிற முடிவுக்கு வந்து,
அந்த முடிவை செயல்படுத்தி இருக்கேன்."
"அ...ண்...ணா... போலீஸ்..."
குமரவேல் சிரித்தான். "போலீஸ் என்னை மோப்பம்
பிடிக்கவே முடியாது, அகல்யா! கொலையாளிகளை
கண்டுபிடிக்க முடியாத எத்தனையோ வழக்குகளில்
இவைகளும் போலீஸ் துறையில் சேரப்போகுது. ஆனா, இந்தக்
கொலைகளை செஞ்சதுக்கான தண்டனையை பம்பாய்
கோர்ட்டுல அனுபவிச்சிடுவேன். அநேகமாய் தூக்கு
கிடைக்கலாம்."
அகல்யாவின் கண்கள் அதிர்ச்சியில் விரிந்தன.
"அ...அ...அண்ணா! நீ...என்ன...சொ...சொல்றே?"
குமரவேல் புன்னகைத்தான்.
"பம்பாய் போலீஸ் என்னைத் தேடிட்டிருக்காங்க."
"எ...து...க்...கு?"
"என்னோட தொழிலுக்குப் போட்டியா இருந்த 'பட்டேல்
சாகேப்'ங்கிற ஒரு ஆளை பெட்ரோல் ஊத்தி எரிச்சு
கொன்னுட்டேன். உடனே தலைமறைவாகி சென்னைக்கு
வந்தேன். உன்கிட்ட வந்து ஒண்டிக்கலாம்ன்னு நினைச்சு
வீட்டுக்குப் போனா, நீ வீட்டைக் காலிபண்ணிட்டதாகவும்,
ஊட்டியில் பணக்கார ஆளை கல்யாணம் பண்ணிகிட்ட



தாகவும் பக்கத்துல இருக்கிறவங்க தகவல் சொன்னாங்க.
நீ இந்த சினிமா தொழிலை விட்டுட்டு ஒரு நல்ல
வாழ்க்கைக்குப் போயிட்டது பற்றி எனக்கு ஏகப்பட்ட
சந்தோஷம். உன்னைப் பார்த்து என்னோட மகிழ்ச்சியைச்
சொல்லிட்டு மறுபடியும் ஏதாவது ஊர் பக்கம் தலைமறைவா
போயிடலாம்ன்னு நினைச்சுட்டிருந்தேன். ஆனா, நீ என்
கிட்டே நாகராஜைப் பற்றியும், பாபுவைப் பற்றியும்
சொன்னதுமே என் முடிவை மாத்திக்கிட்டேன்.
என்னிக்கு இருந்தாலும் ஒருநாள் போலீஸ் கையில் நான்
மாட்டிக்கப்போறது நிச்சயம். அப்படி மாட்டிகிட்டு
கோர்ட்டுக்கு போனா எனக்கு கிடைக்கப்போகிற தண்டனை
நிச்சயமா தூக்குதான். அதுக்குள், உன்னோட வாழ்க்கைக்கு
இடைஞ்சலா இருந்த நாகராஜையும் பாபுவையும் தீர்த்துக்
கட்டினதுல என்ன தப்பு?"
"அ...ண்...ணா..."
"இந்த அண்ணன் உறவை இன்னியோடு மறந்துடு,
அகல்யா. அம்மாவும், அப்பாவும் இறந்துபோன நாளிலிருந்து
உனக்காக நான் எதையுமே பண்ணியதில்லை. ஆனா, இப்ப
நல்லது பண்ணியிருக்கேன். இந்த மனநிறைவோடு போய்
பம்பாய் போலீசில் சரணடைஞ்சுடுவேன்."
"அண்ணா..."
"நான் வர்றேன்ம்மா! எந்த சந்தர்ப்பத்திலும் யார்கிட்டே
யும் என்னைப் பற்றி சொல்லிடாதே! உன் மேல உயிரையே
வைச்சுக்கிட்டிருக்கிற அந்தச் சின்னப் பெண் நவீனாவுக்
காகவும் உன்னை கல்யாணம் பண்ணிகிட்ட அந்த நல்ல
மனிதனுக்காகவும் என்னைப் பற்றின ரகசியங்களை நீ உன்
மனசுக்குள் வைச்சு பூட்டிக்கத்தான் வேணும்."
அகல்யாவின் கண்கள் நீரில் தத்தளித்தன.
"அ...ண்...ணா..."
"வர்றேன்ம்மா."
குமரவேல் வெளியேறினான்.

# 22

பத்து நாள் கழித்து வீட்டுக்குத் திரும்பியிருந்தாள், அகல்யா. நவீனா அவளுடைய கால்களைக் கட்டிக்கொள்ள, ராஜசேகரன் பிரகாசமான புன்முறுவலோடு அவளைப் பார்த்தான்.

"இன்னிக்குத்தான் வீட்டுக்கு வெளிச்சமே வந்திருக்கு."

"அம்மா..." அகல்யாவின் கையை இழுத்தாள், நவீனா.

"ம்..."

"இனிமே நீ ஆஸ்பத்திரிக்குப் போகமாட்டியே?"

"மாட்டேன்."

"நெசமா?"

"நெசமாம்மா!"

"அம்மா! அந்த சன்னல்கிட்டே வர்றியா?"

"எதுக்கு?"

"அன்னிக்குப் பார்த்தோமே அந்த மூணு மேகம், மறுபடியும் வந்திருக்கு... அப்பா மேகம், அம்மா மேகம், என்னை மாதிரி ஒரு குட்டி மேகம்..."

ராஜசேகரன் கண்டித்தான். "நவீனா! ஆஸ்பத்திரியிலிருந்து வந்திருக்கிற அம்மாவை தொந்தரவு பண்ணக்கூடாது."

"இருக்கட்டுங்க... எனக்கும் நவீனாவுக்கும் அந்த மேகங்களைப் பார்த்துட்டிருக்கிறதுல ஒரு பூரிப்பு. வாம்மா நவீனா, போய்ப் பார்க்கலாம்."

நவீனாவைக் கூட்டிக்கொண்டு மாடியறை சன்னலுக்குப் போனாள், அகல்யா.

சன்னலுக்கு வெளியே...

சுத்தமான அடர் நீல நிறத்தில் ஆகாயம். நீல நிறத்தைக் காட்டிலும் அடர்த்தியான நீலத்தில் மலை வரிசையும்,



அந்த மலை வரிசைக்கு மேல்—

பஞ்சுப் பொதியை கவிழ்த்த மாதிரி மேகங்கள் சிதறியிருந்தன. மொத்தம் மூன்றே மேகங்கள்.

நவீனா, பெரிய மேகத்தைக் காட்டினாள்.

"பார்த்தியாம்மா! அது அப்பா மேகம்!!"

"........"

"ம்... அதுக்குப் பக்கத்துல கொஞ்சம் சின்னதா அம்மா மேகம்!"

"........"

"அந்தக் குட்டி மேகம்தான் நானு!"

பின்னால், சக்கர நாற்காலி சத்தம் கேட்டது.

"உங்க அன்பு மேகங்களை நானும் பார்க்கலாமா?" கேட்டுக்கொண்டே ராஜசேகரன் பக்கத்தில் வந்தான்.

"ம்... வாங்கப்பா, காட்டுறேன். அதோ... அந்தப் பெரிய மேகம்தான் நீங்க. அதுக்குப் பக்கத்துல இருக்கிறது அம்மா மேகம். அதுக்கும் பக்கத்துல இருக்கிற குட்டி மேகம் நான்."

"அதுசரி! தூரத்துல தனியா ஒரு மேகம் தெரியுதே! அது யாராம்?"

அகல்யா பார்த்தாள்.

மலைகளுக்கு அப்பால்— வெகு தூரத்தில் அந்த ஒற்றை மேகம் தெரிந்தது. நவீனா கேட்டாள்— "அது யாரும்மா?"

அகல்யா அந்த மேகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். அது 'குமரவேல்' மாதிரி தோன்றியது, அவளுக்கு.

"அம்மா... உன்னைத்தான்!"

"ம்..."

"அது... அது யாரும்மா?"

"எ...எனக்குத் தெரியலை. அப்பாகிட்டே கேளு."

நவீனா, திரும்பினாள்.

"நீங்க சொல்லுங்கப்பா..."

"அந்த மேகம் யார் தெரியுமா?"

"யாரு?"

"டாக்டர் அங்கிள்."

"ஆமா! டாக்டர் அங்கிள்..." நவீனா கைகளைத் தட்டிக்கொண்டு சிரிக்க, ராஜசேகரன் சக்கர நாற்காலியை நகர்த்தி, அகல்யாவை வெகுவாய் நெருங்கினான். மெல்ல கூப்பிட்டான்.

"பூர்ணிமா..."

அகல்யா ஆச்சரியமாய் நிமிர்ந்தாள்.

"எ...என்னையா கூப்பிட்டீங்க?"

"ஆ...ஆமா."

"எ...என்ன திடீர்ன்னு?"

"இனிமே நவீனாவுக்கு மட்டும் நீ அம்மாவா இருந்தா போதாது."

"பின்னே?"

"எனக்கும் பூர்ணிமாவா இருக்கணும்" ராஜசேகரன், நவீனாவுக்குத் தெரியாமல் அகல்யாவின் கையைப் பற்றினான்.

நவீனா, சன்னல் பக்கம் பார்த்து கத்தினாள்.

"அய்யய்யோ! அம்மா மேகமும், அப்பா மேகமும் நெருங்கி, ஒண்ணாயிடுச்சு."

ராஜசேகரன் சிரித்தான்.

அகல்யாவும் சிரித்தாள்.

அவளது அந்தச் சிரிப்பில் குமரவேல் வந்து இடற, அவளது கண்களில் நீர் சுரீரென்று கட்டிக்கொண்டது.

"அண்ணா! இந்த மகிழ்ச்சிதான் எனக்கு நீ கொடுத்த சீர்வரிசையா?"

தொலைவில் உலவிய அந்த ஒற்றை மேகம், இப்போது காற்றடித்த போக்கில் திசைமாறிக்கொண்டிருந்தது.

**(முடிந்தது)**